

கல்கி

KALKi 3-10-1976 75 காசு


காவியம் படைக்கட்டுமே!
உங்கள் அழகு ஒரு தெவிட்டாத ஓவியம்.
அது சாரதாஸின் பட்டுப் புடவையுடன் சேர்ந்து காவியம் படைக்கட்டுமே.
திருமண பட்டுப் புடவைகளுக்கு
சாரதாஸ்
பட்டுப் புடவைகளில் நாகரிகமான டிசைன்களுக்கு புகழ்பெற்ற பெயர்
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை- 600 002
போன்: 87177
N.S.B. ரோடு
திருச்சி- 620 002
போன்: 7077


இணைபிரியாதவை, இணையற்றவை!
தீபாவளியும், கோ-ஆப்டெக்ஸ் துணிவகைகளும்!

தீபாவளிப் பண்டிகை விழாவுடன்
இணைந்ததே கோ-ஆப்டெக்ஸ்.
இந்தத் தீபாவளிக்கு உங்கள்
குடும்பத்தினர் அனைவருக்கும்
உகந்த ஏராளமான துணிவகைகள்
கோ-ஆப்டெக்ஸில்!
இப்பொழுதே சென்றிடுவீர்,
இனிதே வாங்கிடுவீர்!

கோ-ஆப்டெக்ஸில் எத்தனை எத்தனையோ எழில் வண்ணத் துணிகள்!


காஞ்சிபுரம், ஆரணி மற்றும்
கும்பகோணம் அசல் பட்டுச்
சேலைகள், உறையூர்,
கோயமுத்தூர், சேலம், மதுரை
கைத்தறி நூல் சேலைகள்,
சுங்கடி பிரிண்டுகள்
மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்,
வேட்டிகள், துவாலைகள்,
லுங்கிகள், அலங்காரத்துணிகள்,
சட்டைத் துணிகள்,
உடுப்புகளுக்கான துணி
வகைகள்.

நீங்களும் — கோ-ஆப்டெக்ஸூம் •
உங்கள் குடும்பமும் —
வண்ணத்துப் பூச்சியும் •
தரமேன்மையும் — நியாய
விலைகளும் (கோ-ஆப்டெக்ஸில்) •
பண்டைச் சிறப்பும் —
நவீன நளினமும் •
கோ-ஆப்டெக்ஸூம் —
தீபாவளியும்
இணைபிரியாதவையன்றோ!



தீபாவளி சிறப்புத் தள்ளுபடி
பருத்தி 10%
பட்டு 15%

22–9–76 முதல்
23–10–76 வரை



தீபாவளி வரையில்
ஞாயிற்றுகிழமைகளிலும்
விடுமுறை நாட்களிலும்
விற்பனை உண்டு.


யமுனு கோ-ஆப்டெக்ஸ் ஹேண்ட்லூம் சூப்பர் மார்க்கெட்
ஸ்டுட்டி பில்டிங், 41-42, ஸைவாலா, பிளாக் L, பேங்க் தெரு, கரோல்பாக், புது தில்லி-5
மற்றும் தில்லியிலுள்ள இதர கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும் கிடைக்கும்.

கோ-ஆப்டெக்ஸ் அஜந்தா ஹவுஸ், 164, டாக்டர், D.N. ரோடு, பம்பாய்-1
மற்றும் பம்பாயிலுள்ள இதர கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும் கிடைக்கும்.

"20 அம்சம் தந்த புதிய சமுதாயம்"

எனும் 20-அம்ச திட்டத்தைப்பற்றிய திரைப் படத்தை பார்த்தீர்களா?

ஐஓபி திரைப்பட மதிப்புரைப் போட்டியில் பங்கு பெறுங்கள்



பங்கு பெறுவது எளிது

ஐஓபியில் ஏதாவது ஒரு வகை டிபாஸிட் கணக்கு வைத்திருப்பவர்கள் இப்போட்டியில் பங்கு கொள்ளத் தகுதியுள்ளவராவர். உங்கள் பெயரில் ஒரு கணக்கு இல்லாவிட்டால் உடனே அருகிலுள்ள ஐஓபி கிளையில் டிபாஸிட் கணக்கு ஒன்று துவக்குங்கள். தமிழ் நாட்டிலுள்ள திரையரங்குகள் அனைத்திலும் காண்பிக்கப்படுகின்ற இத்திரைப்படத்தைப் பாருங்கள். அதன் மையக் கருத்து எவ்வாறு திரையில் படைக்கப்படுகிறதென்பதைப்பற்றி உங்கள் கருத்துக்களை 100 சொற்களுக்கு மிகாமல் எழுதி உங்கள் மதிப்புரையைக் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்புங்கள். ஒருவர் ஒரு முறைதான் பங்கேற்க அனுமதியுண்டு.

மிகச் சிறந்த 31 மதிப்புரைகளைச் சுயேச்சையான நீதிபதிகள் அடங்கிய குழு ஒன்று தேர்ந்தெடுக்கும். தகுதிக்கு ஏற்றவாறு பரிசுகள் வழங்கப்படும்.

போட்டியின் நிபந்தனைகள்

1. இந்தியாவில் எந்த ஒரு ஐஓபி கிளையிலாவது டிபாஸிட் கணக்குகள் வைத்திருக்கும் யாவரும் இப்போட்டியில் பங்கு பெறலாம். கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களானால் ஒருவர்தான் பங்கு பெற அனுமதியுண்டு.

2. ஒருவர் ஒரு முறைதான் நுழைவுச்சீட்டு அனுப்பலாம்.

3. மதிப்புரைகள் ஆங்கிலத்திலோ, அல்லது தமிழிலோ எழுதப்பட்டு

(அ) அனுப்புவோரின் பெயர் மற்றும் முகவரி (ஆ) ஐஓபியில் வைத்திருக்கும் கணக்கின் வகை மற்றும் எண். (இ) கணக்கு செயல்படும் ஐஓபி கிளையின் பெயர் ஆகியவற்றுடன் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

4. பென்சிலினால் எழுதப்பட்ட, அழித்துத் திருத்திய அடையாளங் கொண்ட, தெளிவற்ற, தபால் தலைகள் இல்லாத மற்றும் போதிய தபால் தலைகள் இல்லாத மதிப்புரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

5. தாமதமாக வந்த அல்லது தபாலில் காணமற்போன நுழைவுத் தாள்களுக்கு ஐஓபி பொறுப்பல்ல.

6. எல்லா நுழைவுத்தாள்களும் ஐஓபி திரைப்பட மதிப்புரைப் போட்டி, தபால் பெட்டி எண் 506 சென்னை-600 008 என்ற முகவரிக்கு அக்டோபர் 31, 1976 அன்று பகல் 12 மணிக்குள் அல்லது முன்னதாக எங்களுக்குக் கிடைக்கும் படி அனுப்பவேண்டும். தவறினால் அவை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. வேறு முகவரிகளுக்கு அனுப்பிய நுழைவுத் தாள்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. நீதிபதிகளடங்கிய குழுவினால் நுழைவுகளின் தகுதிக்கேற்ப மதிப்புகள் வழங்கப்படும். அவர்களுடைய தீர்ப்பே முடிவானது.

8. அனுப்பப்பட்ட நுழைவுகளின் முழு உரிமையும் இந்தியன் ஓவர்சீஸ் பாங்கைச் சேர்ந்தது. அவை திருப்பி அனுப்பி வைக்கப்படமாட்டா.

9. ஐஓபியின் பணியாளர்கள், அவர்களுடைய விளம்பர தாரகர்கள், மற்றும் இப் படத் தயாரிப்பாளர்கள், அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் ஆகியோர் இப் போட்டியில் பங்குபெற தகுதியற்றவர்களாவார்கள்.

10. போட்டியையொட்டி எந்த விதமான கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

11. பரிசுத்தொகை வெற்றி பெற்றவர் ஐஓபியில் வைத்திருக்கும் கணக்குகளில் சேர்க்கப்படும்.


12. பரிசுத் தொகையின் மீது வரிகள் ஏதாவது இருந்தால் அவை வழங்குமிடத்திலேயே கழிக்கப்படும்.

முடிவு தேதி: அக்டோபர் 31, 1976

இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்

உங்கள் வளர்ச்சிக்கோர் உத்தம நண்பன்

IOB-1293



தலைவலி உங்களைத் தாக்கும்போது
ஸாரிடான் கொண்டு அதைத் தாக்குங்கள்.
தலைவலி மற்றும் உடம்பு வலியிலிருந்து ஸாரிடான் பட்டுமே வெறும் நிவாரணத்தைக் காட்டிலும் அதிகப்பலன் தருகிறது. அதன் விசேட கலவை முறை வலியைப் போக்கும் போதே களைப்பை நீக்கிப் புத்துயிரளிக்கிறது. இங்குதான் ரோஷின் சர்வதேச ஆராய்ச்சி உங்களுக்காக செயல்படுகிறது
Saridon
HT-SP-8411
உங்கள் எல்லாத் தலைவலிகளையும் போக்குகிறது ஒரே ஒரு ஸாரிடான்
டிரேட்மார்க
'ரோஷ்'

புதிய

டால்ஃப்®

மூட்டைப் பூச்சித் தொல்லையிலிருந்து 100% உத்தரவாதம்

வாரக்கணக்கிலும் ...குறைந்த செலவிலும்



புதிய டால்ஃப், மூட்டைப் பூச்சிகளை ஒழித்து, உங்களுக்கு 100% விடுதலை அளிக்கிறது.

புதிய டால்ஃப், தெளிக்கப்பட்ட இடத்தில் வாரக்கணக்கில் தங்கிச் செயலாற்றுகிறது. (அது தெளிக்கப்பட்ட இடத்திலிருக்கும் விசேஷமான மருந்துப் படலத்தைத் துடைத்து விடாதீர்கள்)

நெடுங்காலம் 'தங்கிச் செயலாற்றும்' அபார சக்தி!

சக்தி வாய்ந்த புதிய டால்ஃப் மூட்டைப் பூச்சித் தொல்லையிலிருந்து வாரக்கணக்கில் உங்களுக்கு விடுதலை அளிக்கிறது. ஏனெனில், அதன் இணையற்ற 'தங்கிச் செயல் புரியும் ஆற்றல்' நெடுங்காலம் நீடிக்கிறது.

மிகுந்த சிக்கனம்!

புதிய டால்ஃப் மிகவும் சிக்கனமானது. முதலில், இதற்காகும் செலவு மிக மிகக் குறைவு. இரண்டாவது, இது நெடுங்காலம் 'தங்கிச் செயல் புரிவதால்', பல வாரங்கள் வரை, நீங்கள் இதை மீண்டும் தெளிக்க வேண்டாம்!



புதிய 50 மி.லி. பேக்! ரூ.2.47 மட்டுமே. வரிகள் தனி

CBM/4788 TM

கூந்தலுக்குச் சாயம் பூசுவது பற்றி எல்லா விவரங்களும் உங்களுக்குத் தெரிய வேண்டுமா?

மகிழ்வோடு விடையளிக்கக் காத்திருக்கிறது

கோத்ரெஜ்

இளம் வயதில், சில சமயம், சற்று முன்னதாகவே நரை தோன்றி விடலாம். அந்த சமயம் ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி நடந்து கொள்வார்கள். சிலர் அதை விளையாட்டாக எடுத்துக் கொள்வார்கள், சிலர் அதைப் பெரிது படுத்துவார்கள். ஆனால் பெரும்பாலோர் அதற்காக ஒன்றுமே செய்வதில்லை. வருந்தத்தக்க விஷயம். காரணம், நரைத்த கூந்தலைக் கருமையாக்கி விடலாம்—மிக மிக எளிதாக.

கே: எப்போது கூந்தலுக்குச் சாயமேற்றத் தொடங்க வேண்டும்?

ப: முதன்முதல் நரை இழைகள் தோன்ற ஆரம்பித்த உடனேயே பூசுவதுதான் சிறந்தது.

கே: தொடர்ந்து கூந்தலுக்குச் சாயமேற்றி வந்தால், அது கேசத்தைப் பாதிக்கும் என்பது உண்மையா?

ப: இல்லை. ஆனால் நீங்கள் சிறந்த ஹேர் டையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கோத்ரெஜ் ஹேர் டையில் சேர்க்கப் பட்டுள்ள விசேஷப் பொருட்கள் கூந்தலுக்கு உருக் கொடுப்பதோடு அதில் உள்ளடங்கியுள்ள கண்டிஷனர்கள், உங்கள் கூந்தலை அழகாகவும் பளபளப்பாகவும் வைத்திருக்க உதவுகிறது.

கே: அது சருமத்தைப் பாதிக்குமா?

ப: பொதுவாக பாதிக்காது. ஆயின், முதலில் ஒரு சிறிய சருமப் பரிசோதனை செய்து பார்த்து விடுவது நல்லது. எந்த சிறந்த ஹேர் டையுடனும் இப் பரிசோதனையை எப்படிச் செய்வது என்ற குறிப்புகள் இருக்கும்.

கே: பர்மனெண்ட் ஹேர் டை எத்தனை நிரந்தரமானது?

ப: சாயமேற்றிய கூந்தலில் பல வாரங்கள் சாயம் நீடித்திருக்கும்.. ஆயினும் புதிய கேசம் முளைக்கத் தொடங்கிய உடனேயே மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குப் பின்னர் நரை முடிகளை மீண்டும் சாயமேற்ற வேண்டும்.

கே: டையின் சாயம் துணிகளையோ தலையணைகளையோ கறைப்படுத்துமா?

ப: நிச்சயமாக இல்லை. இதர பெரும்பான்மையான ஹேர் டைகள் போல, கோத்ரெஜ் ஹேர் டை கூந்தலில் மேற்பூச்சாக சாயமேற்றுவதில்லை. அது கேசத்தின் அடிவேரினுள்ளே ஊடுருவிச் சென்று தங்குகிறது.

கே: கூந்தலுக்குச் சாயமேற்றிய பின்னர், என் கேசத்தைச் சாதாரண கேசம் போல் நடத்தலாமா?

ப: நிச்சயமாக, ஷாம்பூ உபயோகித்து, கூந்தலை அலசலாம். எந்த ஹேர் ஆயிலையும் க்ரீமையும் உபயோகிக்கலாம்.

கே: வீட்டிலேயே கூந்தலுக்குச் சாயமேற்றுவது எளிதா?

ப: சந்தேகமே வேண்டாம். உபயோகிக்க மிக மிக எளிது கோத்ரெஜ் ஹேர் டை: டையை மென்மையாகத் தடவினால் போதும். அது தானே சமமாகவும் சீராகவும் எளிதாகச் சருமத்தின் ரோமக்கால்களிடையே ஊடுருவிப் பரவுகிறது.

CMGS-84-175 TM

கே: எல்லா ஹேர் டைகளுமே உபயோகிக்கக் கடினமா?

ப: அப்படிச் சொல்ல முடியாது. கோத்ரெஜ் ஹேர் டை உபயோகிக்க வசதியானது. இனிய நறுமணம் கொண்டது. மிக மென்மையானது.

கே: அது மிக விலையுயர்ந்ததா?

ப: தோள் அளவு கூந்தல் உங்களுக்கு இருந்தால் ஒரு குப்பி ஹேர் டையும் டெவலப்பரும் கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் வரும். அதுவும் நீங்கள் வீட்டிலேயே சாயமேற்றிக் கொண்டால் மாத மொன்றுக்கு சுமார் ரூ. 3/- செலவாகும்.

கே: சாயமேற்றியபின் என் கூந்தல் இயற்கையான கருமை நிறம் பெறுமா?

நிச்சயமாக, ஆனால் உங்கள் கூந்தலின் இயற்கையான நிறத்திற்கு ஏற்ற வண்ணத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்கள் கூந்தல் இள நிறமுடையதாக இருந்தால் கோத்ரெஜ் கரும் பழுப்பு ஹேர் டையை உபயோகிக்கவும்.



கோத்ரெஜ்

பர்மனென்ட் ஹேர் டை இதர ஹேர் டைகளை பிந்தியவைகளாக்கி விட்டது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூட இயற்கையான கருமை, கரும்பழுப்பு.

இங்கே வெட்டவும்

இப்போது உபயோகித்துப்பார்க்க சலுகை ரூ. 1/- தள்ளுபடி

கோத்ரெஜ் பர்மனென்ட் ஹேர் டை வாங்கும் போது

இந்தக் கூப்பனை வெட்டியெடுக்க. விவரங்களைப் பூர்த்தி செய்க. உங்கள் கோத்ரெஜ் விற்பனையாளரிடம் சென்று, கோத்ரெஜ் பர்மனென்ட் ஹேர் டை—இயற்கையான கருமை அல்லது கரும்பழுப்பு—மீது ஒரு ரூபாய் தள்ளுபடி பெறுங்கள். ஏதாவது ஒரு பேக் வாங்குகையில் ஒரு முறை ஒரு கூப்பன்தான் உபயோகிக்கலாம்.

விற்பனையாள அன்பரே,

இந்தத் தள்ளுபடிக் கூப்பனை 30-11-1976 வரை ஏற்றுக் கொள்ளவும். எங்கள் பிரதிநிதி அல்லது விநியோகஸ்தரிடம் 31-12-1976 க்குள் அவற்றைக் கொடுக்கவும்.

பெயர்: ____________________

____

விலாசம்: ____________________

____

இந்த தள்ளுபடிக்கூப்பனைக்கொடுக்கும்போது, அதே அளவு எண்ணிக்கை கோத்ரெஜ் பர்மனென்ட் ஹேர் டை பேக்குகள் நீங்கள் வாங்கும் பட்சத்தில், ஒவ்வொரு தள்ளுபடிக் கூப்பனுக்கும் ரூ. 1 என்ற விகிதத்தில் (சேவைக் கட்டணமாக 10 பைசா சேர்த்து) உங்களுக்குப் பணம் திருப்பித் தரப் படும்.

சலுகை 30-11-1976 வரையே.

இங்கே வெட்டவும்

டெகோப்ளாஸ்ட் வண்ணங்களின் வகைகாட்டும்— இல்லத்திற்குப் புத்தெழில் கூட்டும்!



இல்லச் சுவர்களுக்கு என்றும் இளமைக் கோலம்!

● அற்புதமான சுவீடு ஃபினிஷ்: புதிய பிளாஸ்டர் மீதோ அல்லது கரடுமுரடான மண்பிளாஸ்டர் மீதோ நேராகப் பூசலாம் ● 17 கண்கவர் நேரடிச் சாயல்கள்; மாஜிக்டச் இன்ஸ்டன்ட் பிளெண்டருடன் 30 எழில் வண்ணங்களும் உள்ளன ● உபயோகிக்க எளிது: ப்ரைமர் தேவையில்லை வண்ணத் திற்கான செலவும் குறைவு ● நீடித்த உழைப்பு: புது வண்ணக் கோலம் பூண்டு பொலிகிறது. ஆண்டு பலவாயினும் மீண்டும் வண்ணம் பூச வேண்டாம் ● பராமரிக்க எளிது: துடைத்தவுடன் துப்புரவு.


டெகோப்ளாஸ்ட்

உள்ளே எழில் வண்ணம்—
வெளியிலும் அதே பொலிவு.

ஏஷியன் பெயின்ட்ஸ்

CMAP-8-183 tam

அண்ட முடியாத டாய்லெட்



இந்தியாவில் டாய்லெட் என்றால் அசுத்தம் என்று பொருள். அது சுத்தமாகப் பொருத்தமற்றது.

நம்மில் பலர் மற்ற அறைகளைச் சுத்தமாக வைத்திருப்பதுபோல், டாய்லெட்டை சுத்தமாக வைத்திருப்பதில் அதிக அக்கறை காட்டுவதில்லை. டாய்லெட்டுக்குத்தான் அதிக கவனம் தேவை என்பதை உணர்வதில்லை. நாம் கவனம் செலுத்தாத எதைப் பற்றியும் சிந்தித்துக்கூட பார்ப்பதில்லை. நம் கவனத்தை ஈர்க்கும் சில உண்மைகள் இதோ!

அசுத்தமான டாய்லெட் அருவருப்பாக காட்சி அளிப்பதோடு துர்நாற்றமும் வீசுகிறது. அது ஆரோக்கியமற்றது, சிறிதும் சுகாதாரமில்லாதது. அதனால் நமக்கு நிச்சயமாக தீங்கு நேரும்.

இது மறுக்க முடியாத உண்மை. மிகைப்படுத்தியோ அல்லது குறைத்துக் கூறுவதாகவோ எண்ண வேண்டாம். ஒருவேளை உங்களுக்குள் ஒரு முக்கியமான கேள்வி எழலாம்:

நீங்கள் விரும்பும் அளவுக்கு உங்கள் டாய்லெட் துப்புரவாய் இருக்கிறதா?

உங்கள் ஒருவருக்கு இதற்குத் தக்க விடை தெரியத்தான் வேண்டும்.

தினமும் டாய்லெட்டைச் சுத்தம் செய்ய தோட்டி இருந்தாலும், அவர் செவ்வனே சுத்தம் செய்கிறாரா? அல்லது வேலையை விரைவில் முடிப்பதிலேயே கருத்தாய் இருக்கிறாரா?

இவ் வினாவுக்கு திருப்திகரமான விடை கிடைக்கவில்லையெனில், உங்களுக்கு மகிழ்ச்சி தரும் சேதி இதோ: ஸானிஃப்ரெஷை உபயோகியுங்கள்.

ஸானிஃப்ரெஷ் என்பது என்ன?

ஸானிஃப்ரெஷ் கக்கூஸ் சுத்திகரிப்புப் பொருள். உங்களுடைய அருவருப்பான வேலையை அது செய்கிறது. முதலில் டாய்லெட்டில் ஃப்ளஷ் மூலம் தண்ணீரை விடுங்கள். ஸானிஃப்ரெஷை டாய்லெட்டின் பேஸினில் தாராளமாகத் தூவுங்கள். 3—4 மணி நேரம் கழித்துப் பாருங்கள். இதைவிட, இரவு பூராவும் அப்படியே விட்டுவைப்பது மிகவும் சிறந்தது. அதற்குப் பிறகு ஃப்ளஷ் செய்யவும். ஃப்ளஷ் வேலை செய்யாவிடில் ஒரு வாளி தண்ணீரை ஊற்றவும். அதோ சுத்தம் செய்யும் எல்லாப் பிரச்னைகளும் தொலைந்து போயின.

ஸானிஃப்ரெஷ் மூன்று வழிகளில் வேலை செய்கிறது.

1. ஸானிஃப்ரெஷ் முழுக்க முழுக்க சுத்திகரிக்கிறது

அதில் தீவிரமாக அசுத்தம் போக்கும் பொருள் இருப்பதால், விடாப்பிடியாக நீங்காத கறைகளும் நீங்கிவிடுகின்றன. தூரிகை புக முடியாத இடத்தையும் சுத்தம் செய்துவிடுகிறது.

2. நோய்களைப் பரப்பும் ஆபத்தான கிருமிகளை வெளியேற்றுகிறது.

அசுத்தமான டாய்லெட் நோய்க்குக் காரணமான கிருமிகள் வளரும் இடம். சாதாரண பினைல் தரமுடியாத பாதுகாப்பை ஸானிஃப்ரெஷ் உங்களுக்குத் தருகிறது. ஆகவே ஸானிஃப்ரெஷ் உபயோகிப்பதால் உங்கள் டாய்லெட் முற்றிலும் பத்திரமானது என்பதை நிச்சயமாக நம்பலாம்.

3. ஸானிஃப்ரெஷ் துர்நாற்றத்தை துரத்துகிறது.

டாய்லெட்டின் துர்நாற்றம் நாசியைத் துளைக்கும். போதுமான காற்றோட்ட வசதியில்லாத டாய்லெட்டில் துர்நாற்றம் வெளியே செல்லாமல் பிரச்னையை அதிகமாக்கிவிடுகிறது. ஸானிஃப்ரெஷில் வாசனைப் பொருள் இருப்பதால் காற்றிற்குப் புத்துணர்ச்சி ஏற்படுத்தி துர்நாற்றத்தை அகற்றுகிறது.

ஸானிஃப்ரெஷை எத்தனை முறை உபயோகிக்க வேண்டும்? டாய்லெட்டை சுத்தமாக வைத்திருப்பது ஆரோக்கியத்திற்கு அவசியமாதலால் தினமும் உபயோகிப்பதே சிறந்த முறை.



ஸானிஃப்ரெஷ் உங்கள் அருவருப்பான வேலையைச் செய்து டாய்லெட்டை சுத்தமாக வைக்கிறது.

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு
நவீனமான வசதிகள்
BALSARA பல்சாரா & கம்பெனி (பிரை.) லிட்.
43, நகின்தாஸ் மாஸ்டர் ரோடு, பம்பாய் 400 023.

CHAITRA-BLS-82 TAM

ஆக்கசக்தி நெருக்கடியினால் ஏற்பட்ட சங்கடமான நிலை டாடா ஸ்டீலிலுள்ள எங்கள் இளம் நிபுணர்களுக்கு அதைத் திறம்பட சமாளிக்கும் ஆற்றலை அளித்தது.

ஆக்கசக்தி உபயோகத்தில் சேமிப்பு பற்றிய தீவிரமான ஆராய்ச்சிகள் பல புது வழிகளைப் புலப்படுத்தியுள்ளன. கம்பஸ்சன் ஏர் கண்ட்ரோல் ஸிஸ்டம்களைப் பல தொழிலிடங்களில் நிறுவி வியர்த்தமாகும் காஸினால் ஏற்படும் உஷ்ண நஷ்டத்தைக் குறைக்க வழி செய்யப்பட்டுள்ளது; தவிர எரிபொருள் தரமும் சீராக்கப் பட்டுள்ளது. தேவையான இடங்களில் வேஸ்ட் ஹீட் ரெகூப்பரேட்டர் ஸிஸ்டம்கள் மீண்டும் நிறுவப்பட்டிருப்பதோடு அவற்றின் செயலாற்றலை உச்சநிலைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஃபர்னஸ்களில் இன்ஸுலேஷன் செய்யப்பட்டதோடு அவற்றில் காலத்திற்கேற்றவாறு புதுமைகள் செய்யப்பட்டுள்ளன. உச்சநிலையில் மறு-உபயோக முறைகளின் பயனாக குளிர்ச்சிக்கான தண்ணீர் பம்ப் செய்வது குறைக்கப்பட்டுள்ளது.

மொத்த உற்பத்திச் செலவில் மூன்றில் ஒரு பங்கு ஆக்கசக்திக்காகச் செலவிடும் தொழிற்துறையில் இந்த சேமிப்புகள் மிக மதிப்புள்ளவையாகும். காரணம், தாங்கமுடியாத ஆக்கசக்திச் செலவின் பளுவை சமாளிக்க இவை உதவுகின்றன.

இளமை மிடுக்கோடு இருப்பவர்கள் என்றென்றும் புதுப்புது சோதனைகளை வரவேற்பார்கள்.



TIS-1247 A

நல்லவாய்ப்புகள் நாளும்சிறக்கவே அணிவீர்-பின்னி

வண்ணங்களின் மென்மை
வெவ்வேறாக...கண்களைக் கவரும்
கட்டங்கள் விதவிதமாக...இன்று
ஆடவர்களின் உடைகளிலே
தலைசிறந்து திகழ்கின்றன.
இயற்கையாக கோடிட்டு நிற்கும்
ஷர்ட்ஸ் மற்றும் ஜாக்கெட்ஸ்.
எழுமிடங்களிலே எற்ற, மெலிந்த
பிடிப்புகள் கொண்ட கால்சட்டை-
கள். டர்ன்-அப்ஸ் இல்லாத.
நொய்மை நிறைந்த ஃப்ளேர்!

கன்னியரின் உடைகள் இன்றும்
வெறுமையோடு முழுமை காண
முயலும்—ஆம். அதை நீங்கள்
சந்திக்கத் துணிந்தால்—முழுமை
யிலே முழுமை எழில் காணலாம்.

ஆடவரின் அகன்ற லேப்பெலுடு ஆட்
பாலியெஸ்டர்-காட்டனிலே, செக்
ஷர்ட்டும் கெட்பட்டு டையும் கூட
இங்கே மிளிருது!


அதோடு பாலியெஸ்டராலேயான
ஹால்டர் நெக் புத்தம்புது பூப்போல,
தோளும் கழுத்தும் எழில் கொஞ்ச—
எழில் இளமங்கை உடன் சேர!



பின்னி
கலப்பிழைத் துணிகள்

Interpub/BB 1-76 Tam


பாம்பே டையிங்



பாம்பே டையிங்
அணிந்த ஆடவன்
கண்ணாடியில்
காணும் பிரதிபிம்பம்
ஆயினும் வியப்பூட்டும்
ஆனந்தம்!
பாம்பே டையிங் வழங்கும்
ஆடவர் அணிகள்.
பாலியெஸ்டர்/காட்டன் ஷர்ட்டிங்கு-
களின் ஒப்பற்ற உயர் தரம் 50/50,
67/33, 80/20 மற்றும்
நூற்றுக்கு நூறு பாலியெஸ்டர்
பிரிண்டுகள், பாலியெஸ்டர்
டெரிமகள மற்றும்
டெக்ஸ்சரைஸ்ட்
ஸூட்டிங்குகள்.
கபித்தான் பாலியெஸ்டர் ஷர்ட்டிங்குகள் வெட்ரீன் பாலியெஸ்டர் ஸூட்டிங்குகள்

மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—

இன்க்ரிமின்*





இளமைப் பருவம்—பூவாய் மலரும் நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள் மனத்தை அள்ளி வளரும் பருவம்—இப்பருவத்தில் அவளுக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவள் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பாள்—உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்கள், இரும்புச் சத்து இவற்றோடு உங்கள் மகளின் வளர்ச்சிக்கு மிகமிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின.

இன்க்ரிமின்* டானிக்

டிராப்ஸ்—2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்— 14 வயது வரையில்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்— Lederle ஸையனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் ஸையனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்

Sista's-INC-363 C-R/76 Tam



கல்கி

ஆல[illegible] புரட்டாசி 17

அக்டோபர் 3 1976

போடு புதிர்!

மாலை நேரத்தில் மழை பொழிந்து கொண்டிருந்தது. ஒரு டாக்டர், ஒரு வக்கீல், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர், ஒரு வழிப்போக்கன் ஆகிய நால்வரும் ஒரு மண்டபத்தில் எதிர்பாராத மழையின் காரணமாக ஒதுங்கி நின்றனர். சிறிது நேரத்தில் மழை சிறு தூறலாகப் பெய்வதைப் பொருட்படுத்தாத இன்ஸ்பெக்டர் மண்டபத்தை விட்டுச் சென்றார். மற்றவர்கள் மண்டபத்திலேயே இருந்தனர். இன்ஸ்பெக்டர் கூப்பிடு தொலைவு சென்றிருப்பார். வழிப்போக்கனிடமிருந்து, "அய்யோ! கொன்னுட்டானே!" என்ற பெரும் அலறல் வெளிப்பட்டது. இன்ஸ்பெக்டர் மண்டபத்தை நோக்கி விரைவாக நெருங்கினார். அதற்குமுன் வழிப்போக்கன் உயிர் பிரிந்து விட்டது. டாக்டர், வக்கீல் இருவரிடமும் எந்தவித ஆயுதமுமில்லை. அவ்விருவரும் ஒருவர் மற்றொருவரைக் குற்றவாளி என்று பழி சுமத்துகின்றனர். ஆனாலும் வக்கீல்தான் அக் கொலையைச் செய்தவர் என்று வக்கீலைக் கைது செய்கிறார் இன்ஸ்பெக்டர். ஏன்? கண்டுபிடியுங்கள்!

- அமுத நளி

விடை: டாக்டர் ஒரு பெண். வழிப்போக்கன் இறக்கும் போது 'கொன்னுட்டானே!' என்றுதான் அலறினான்.



சென்னை இன்கம்டாக்ஸ் பிராக்டிஷனர் திரு எம். எஸ். ரங்கையா அவர்களின் புதல்வர் செல்வன் R. **சரவணன்**, B. Tech (*Reliance Heat Transfer Private Ltd.*) அவர்களுக்கும், ஈரோடு கலைக் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் க. இராமதாஸ் அவர்களின் புதல்வி செல்வி R. **சுஜாதா**, B. A.வுக்கும் 27–8–76ம் தேதி காலை சென்னை உம்மிடி ஸ்ரீ பத்மாவதி கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற திருமணத்துக்கும் அன்று மாலை நடைபெற்ற வரவேற்புக்கும் வருகை தந்தும் நேரிலும் தபால் மூலமாகவும் மணமக்களை வாழ்த்தி அருளிச் சிறப்பித்த பெருமக்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு எம். எஸ். ரங்கையா
திரு க. இராமதாஸ்

அக்டோபர் இரண்டு!

அக்டோபர் 2.

புண்ணியம் செய்த தேதி.

தேசத் தந்தை அவதரித்த மங்களமான தினம். காந்தியின் சீடரும் காந்தீயச் சீலருமான காமராஜர் மறைவால் புனிதமடைந்த நாள். இரண்டு மகான்களையும் தொழுது ஏத்துகிறோம்.

மகான்களுக்கு அஞ்சலி செலுத்துவதன் நோக்கமே நம்மைப் புனிதப்படுத்திக் கொள்வதுதான்.

பகவானின் கல்யாண குணங்களைச் சொல்லி பூஜை செய்கிறோம். அந்தச் சிறப்பியல்புகளை நாம் பெற முயல வேண்டும் என்பதற்காகத்தான்.

காந்திஜி, காமராஜ் ஆகிய பெரியோர்களின் பல்வேறு குண நலன்களை சகஸ்ரநாமாவை விடப் பெரிதாகப் பட்டியல் போடலாம். அதைவிட அவர்கள் வாழ்க்கைச் சம்பவங்கள் ஒன்றிரண்டை நோக்கினால் போதும். அவர்களுடைய வாழ்க்கைத் தத்துவமே விளக்க அவசியமின்றிப் புரிந்துபோகும்.

மகாத்மா காந்தி அடிகள் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்ய வந்த போது நடந்த ஒரு சம்பவத்தைத் திரு எம். எஸ். கல்யாணசுந்தரம் (முன்ஷி) அண்மையில் விவரித்தார் :

ஓர் ஊரில் சுயராஜ்ய நிதிக்குப் பலர் அன்பளிப்பு கொடுத்தார்கள். காந்திஜிக்கு அவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் கொடுத்த தொகையெல்லாம் கணக்கில் வரவு வைத்துக் கொள்ளப்பட்டதா என்று கவனித்துக் கொண்டார் அண்ணல். பிறகு பந்தல், அலங்காரம் எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வரவேற்புக் குழுவினரிடம், ''எனக்காக ஏகமாகச் செலவு செய்திருக்கிறீர்களே, மொத்த வசூலில் ஐந்து சதத்துக்கு மேல் செலவு செய்ய வேண்டாம் என்று கூறியிருக்கிறேனே'' என்றார்.

''உங்கள் ஆணையை நாங்கள் மீறவில்லை'' என்றனர் வரவேற்புக் குழுவினர். ''இந்தப் பந்தல் அலங்காரம் எல்லாம் இலவசமாக இவர் செய்து தந்தது'' என்று கூறி ஒருவரை அறிமுகப்படுத்தினர்.

''இலவசமாக இவர் செய்திருந்தாலும் செலவு செலவுதானே?'' என்றார் காந்திஜி. பிறகு, ''இவர் செய்த செலவை நன்கொடையாகக் கருதி முதலில் கணக்கில் வரவு வையுங்கள். பிறகு பந்தல் செலவு என்று அதே தொகையைச் செலவுக் கணக்காக எழுதுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தைச் சற்று நேரம் மனத்தில் அசை போடுங்கள். அடுத்தடுத்து அதிலிருந்து எத்தனையோ உன்னதக் கருத்துக்கள் தோன்றி அண்ணலின் வாழ்க்கைக் கோட்பாடுகள் பலவற்றை நமக்கு உணர்த்தும்.

காமராஜ் பற்றிய ஒரு சம்பவத்தை திரு ஆர். வி. சில காலம் முன் கூறினார்:

தமிழக அரசின் பிரதமக் காரியதரிசி ஓய்வு பெறுகிறார். அடுத்து அந்தப் பதவிக்கு வரக்கூடியவர் இருவர் இருந்தனர். ஒருவர் வயதில் பெரியவர். அடுத்த சில மாதங்களில் ஓய்வு பெறப் போகிறவர். மற்றொருவர் ஒப்புநோக்குகையில் சிறியவர். ஆனால் வயதால் சிறியவருக்கே பிரதமக் காரியதரிசி பதவியில் அமர முதல் தகுதி இருந்தது. சர்வீஸ் கணக்குப்படி பார்த்தாலும் நியாயமாக அந்தப் பதவியில் அடுத்து அமர வேண்டியவர் அவர்தான். அவரைக் காமராஜ் அழைத்தார். '' நீ பதவியை ஒப்புக் கொண்டு ஓரிரு வாரங்கள் இரு. பிறகு லீவில் போய்விடு. பெரியவர் ரொம்ப நல்லவர். அவர் சில காலம் உனக்குப் பதில் அந்தப் பதவியில் அமர்ந்திருந்து பிரதமக் காரியதரிசியாக ஓய்வு பெறட்டும். அதற்குள் நீ லீவு முடிந்து திரும்பி வந்து மறுபடியும் பொறுப்பேற்கலாம்'' என்றார்.

இதைக் கேட்டதும் அந்த இரு உயர் உத்தியோகஸ்தர்களுக்கும் கண்களில் நீர் ததும்பிவிட்டது.

ராஜாஜி சொல்வார்:

மனச்சாட்சிப்படி நேர்மையாக நடப்பதற்கும் கடமைகளைக் கருத்

கல்கி
மலர் 36
இதழ் 10

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

துடன் செய்வதற்கும் பெரிய பெரிய கல்லூரிப் பட்டங்களா வேண்டும்? ஆட்சிப் பொறுப்பில் அமர்வதற்கு ஒழுக்கமும் புத்திசாலித்தனமும் கடமை உணர்வும்தான் முக்கியம்.

ஆட்சியின் நடைமுறை விவகாரங்களை அதற்கென்றே பயிற்சி பெற்று வந்துள்ள அதிகாரிகள் கவனித்துக் கொள்வார்கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்றவனுக்கு நல்லது கெட்டதைப் பகுத்தறிந்து புரிந்து கொள்ளும் ஆற்றல் இருந்தால் போதும்.

ராஜாஜி குறிப்பிட்ட தகுதிகள் காமராஜரிடம் தாராளமாகவே இருந்தன.

ஓர் உதவி கோரிக் காமராஜிடம் வந்தார் பிரமுகர்.

''அது சரியில்லீங்களே!'' என்றார் முதல்வர் காமராஜ்.

அப்பிரமுகர் காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு நிறையப் பணம் உதவி செய்திருக்கிறார் என்று யாரோ ஞாபகப்படுத்தினார்.

''திருப்பிக் கொடுத்திட்டாப் போச்சு'' என்றார் காமராஜ் அமைதியாக.

இது, அருகிலிருந்து உரையாடலைக் கேட்க நேர்ந்த ஒரு தொழிலதிபர் கூறியது.

இத்தகைய அருளும் அறிவுடைமையும் கடமை உணர்வும் நேர்மைத் திறனும் நமது அரசியலில் உச்சகட்டத்திலிருந்து அடித்தளம் வரை எங்கும் நீக்கமறப் பரவ வேண்டும்.

அப்புறம் நம்மைக் கட்டிப் பிடிப்பவர் யார்?

மேலட்டை. வண்ண ஓவியம்: **ஆர். நடராஜன்**

புனிதப் பயணம் முடிந்தது!

சைதன்ய மடத்தின் தலைமை ஆசார்ய தேவரும் கௌடிய மடங்களின் தலைவருமான அருள்திரு ஸ்ரீமத் பக்திவிலாஸ தீர்த்த கோஸ்வாமி மஹராஜ் அண்மையில் இறையடி சேர்ந்தார். இது வைணவச் சமய உலகத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அயராத உழைப்பு உடைய ஸ்ரீல தீர்த்த மஹராஜ் பாரத நாட்டில் மட்டுமல்லாது இங்கிலாந்து, ஜெர்மனி, மற்றும் பல ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் கௌடிய மடத்தைச் சார்ந்த அறுபத்திநாலு துணை மடங்களை நிறுவி, இயக்கத்தைப் பெரிதாக்கினார். பல்வேறு மொழிகளிலும் சைதன்ய இலக்கியங்கள் வெளியிடப்பட்டன. அவருடைய எழுத்துக்களையும் பாரத நாடு முழுமையும் சுற்றி வந்த போது போதித்துவந்த உபதேச மொழிகளையும் அறிஞர் உலகம் பாராட்டிப் புகழ்கின்றது.



அவர் தம் சீரிய முயற்சியினால் வைணவ சம்பிரதாயங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து அகிலஇந்திய வைணவ சமாஜம் என்ற ஒரு பேரியக்கம் ஏற்படுத்திப் பதிவு செய்தார்.

ஸ்ரீல தீர்த்த மஹராஜ் அவர்களால் ஏற்படுத்தப்பட்டு கல்கத்தாவில் இயங்கும் ஸ்ரீ சைதன்ய ஆராய்ச்சி நிலையம் எல்லா வைணவப் பிரிவுத் தத்துவங்களையும் சைதன்யத் தத்துவக் கருத்துடன் ஒப்பிட்டு மக்களுக்கு விளக்கிக் கூறும் ஆராய்ச்சி நிலையமாக விளங்குகிறது.

ஸ்ரீல தீர்த்த மஹராஜ், தலைமை நிலையமான மாயாபூரைப் புனித கங்கை நீரினால் பசுமைத் தன்மை பெற்ற வயல்களின் நடுவே அமைத்தார். அதனை ''வங்காளத்தின் புனித விருந்தாவனம்'' என்று பெருமிதத்தோடு கூறுகின்றனர்.

ஸ்ரீல தீர்த்த மஹராஜின் புனித உடல் மாயாபூருக்கு எடுத்துச்செல்லப்பட்டது. புகழ் வாய்ந்த புனிதப் பயணத்தை உலகத்தில் முடித்துக் கொண்டு நித்திய நிலையை அடைந்த குரு மகராஜுக்கு நமது அஞ்சலிகளைச் செலுத்துகிறோம்.

காந்தி மண்டபம் அழைக்கிறது!


காந்தி ஜெயந்தியை வழக்கம்போல் இந்த ஆண்டும் கிண்டி ராஜபவனம் அருகேயுள்ள காந்தி மண்டபத்தில் மிகச்சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறார் ஆளுநர் திரு சுகாதியா.

அக்டோபர் 2, 3 இரு தினங்களும் நடக்கும் விழாவில் நிகழ்ச்சிகள் முதல் நாளன்று காலை எட்டு மணிக்கே பஞ்சரத்ன கீர்த்தனைகளைப் பாடுவதுடன் ஆரம்பமாகிறது. அப்புறம் பஜனை, பாராயணம், பக்திப் பாடல்கள், நாதசுர இசை. மாலை ஆறு மணிக்கு ஆளுநர் வரவேற்புக் கூற பாரதத் துணை ராஷ்டிரபதி திரு ஜட்டி தொடக்கவுரை நிகழ்த்துகிறார். தொடர்ந்து ஸ்ரீமதி சௌந்தரா கைலாசம், திரு ஜெரோம் டிசௌஸா, திரு எஸ். வி. சிட்டிபாபு முதலியோர் பேசுகின்றனர். இரவு திரு சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் இறையுணர்வுடன் கூடிய இன்னிசை.

மறுநாள் மாலை 4–30க்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சியில் பக்திப் பாடல்களுக்குப் பிறகு திரு டி. ஏ. பாய் அவர்கள் தலைமையில் திரு ஆர். வி. சுப்பிரமணியம், ஜஸ்டிஸ் இஸ்மாயீல், திரு ஜி. ராமச்சந்திரன், ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன் ஆகியோர் பேசுவர்.

ஆளுநரின் முடிவுரைக்குப்பின் திரு டி.எம். சௌந்தரராஜனின் பக்திப் பாடல்கள்.

மக்கள் பெருமளவில் விழாவில் கலந்து கொண்டு மகிழக் கோருகிறோம்.


20 அம்ச திட்டம் வாழ்க!
20 அம்ச திட்டத்தை நிறை வேற்றியே தீருவோம்!
20 அம்ச திட்டமே நாட்டின் எதிர்காலம்!
மேற்கு வங்க காங்கிரஸ்
போதும்! முதல்லே உங்க 20 அம்ச வேற்றுமைகளை சரி பண்ணிட்டு வாங்க!
மத்திய அரசின் உத்தரவுகள் தமிழ்நாடு நீங்கலாக மற்ற மாநிலங்களுக்கு இனி ஹிந்தியிலேயே அனுப்பப்படும்!
மத்திய அரசு உத்தரவு
हिन्दी
பிற மாநிலங்கள்
தமிழ்நாடு
ஏழை மக்கள்
மற்ற வசதிகள்
வீட்டு மனை வசதி
பிரதமரின் பிறந்த நாளைக் கொண்டாட ஏழைகளுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும்!

எண்ணிய வண்ணம் எண்ணற்ற டிசைன்

மதுரை துணிகள் – அணிந்திடப் பெருமை

பாலியெஸ்டர் மற்றும் பாலியெஸ்டர் இழைகளில்
சூட்டிங்குகள் மற்றும் ஷர்ட்டிங்குகளில்
எண்ணிலடங்காத ரகங்கள்.

மதுரை துணிகள் — தயாரிப்பாளர்கள் :

மதுரை கோட்ஸ்



டிஸ்ட்ரிபியூட்டர்கள் : மதுரா சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (பி) லிட்., 45, மூர் தெரு, சென்னை-600 001 ■ T. M's டெக்ஸ்டைல்ஸ் 126, தெற்கு மாசி வீதி, மதுரை ■ சையத் டெக்ஸ்டைல்ஸ், 98, வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுன் - 627 006 ■ VVCR முருகேச முதலியார் & சன்ஸ், 87, கன்னாரத் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம் ■ VVCR முருகேச முதலியார் & சன்ஸ், சிவசண்முகம் பிள்ளைத் தெரு, ஈரோடு ■ ஹாஜி P. சையத் முகம்மத், விருதுநகர்.

MCL-163 TAM

ஜீவகாருண்யம்

25

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சிகாமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்



யோசித்துப் பார்த்தால் பணக்காரன் பாடுதான் ரொம்பக் கஷ்டம் என்று தோன்றுகிறது. அந்தஸ்து (Status), பேர் இவற்றுக்காக அவன் அநேக காரியங்களை இஷ்டம் இருந்தாலும் இஷ்டம் இல்லாவிட்டாலும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இது ஒவ்வொன்றுக்காகவும் தண்டம் அழவேண்டியிருக்கிறது. பெரிய மநுஷன் என்று தெரிய வேண்டுமானால் அதற்கு அநேக 'க்ளப்'களில் மெம்பராக வேண்டும். அதற்காக 'ஸப்ஸ்க்ருப்ஷன்' செலவுகள். அப்புறம் ஏதாவது இரண்டு ஸ்கூல், காலேஜிலாவது என்டோமென்ட் வைத்து பிரைஸ் கொடுக்கச் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கப்புறம் டைட்டில், கிஃப்டில் வாங்குவதற்காக, (நேரே அப்படித் தெரியாமல்) பல இனுககளில் செலவு செய்ய வேண்டும். கார், பங்களா, டிரஸ், பொழுதுபோக்குச் செலவுகள் வேறு. இவனுடைய கம்பெனியோ பண்ணையோ நன்றாக நடக்க வேண்டுமே, அதை உத்தேசித்து வெளியில் சொல்லக் கூடியதும் சொல்லக்கூடாததுமாகப் பலவிதங்களில் செலவு செய்ய வேண்டும். இது ஒரளவுக்குக் கடமை மாதிரியே ஆகிவிடுகிறது. இதெல்லாம் போதாது என்று (அரசியல்) கட்சிகள் வேறு டொனேஷனுக்கு வருகின்றன. அதிலும் இவனுக்கு வாஸ்தவத்திலேயே ஒரு கட்சியிடம்தான் அபிமானம், அது இருந்தால்தான் தனக்கு நல்லது என்று தோன்றினால்கூட அதற்கு மட்டும் டொனேஷன் கொடுப்பதோடு போகமாட்டேன் என்கிறது. இவனுக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் ஒரு சமயத்தில் யாரிடம் நிர்வாகம் இருக்கிறதோ, அவர்கள் இவன் தலையில் கை வைக்காமலிருப்பதற்காக அந்தக் கட்சிக்கும் நிறையக் கொடுத்துத் திருப்திப்படுத்த வேண்டியிருக்கிறது. இன்னும் அகத்தில் கல்யாணம், கார்த்திகை, ஃபீஸ்ட், அது, இது என்றும் வாரிவிட வேண்டியிருக்கிறது. வரிகள் வேறு! செலவு செய்வதற்கும், தானம் பண்ணுவதற்கும் (gift) கூட வரி கொடுக்க வேண்டியிருக்கிறது! இந்த நிலையில் பாவம், மனஸார இவன் எந்த நல்ல பணிகளுக்குக் கொடுக்க ஆசைப்படுகிறானோ, அதற்குத்தான் ரொம்பக் குறைச்சலாகக் கொடுக்கும்படியாக ஆகிறது. பேர், புகழ் மாதிரியான சமாசாரங்கள், 'ஃபினான்ஷல் இன்டரஸ்ட்' முதலானதுகள் அத்யாவசியமாகி விடுகின்றன. 'இப்படி இருக்க வேண்டாமே' என்று நாம் சொல்லிப் பிரயோஜனமில்லை. நாமே அந்தப் பணக்காரனாக இருந்தாலும் இப்படித்தான் செய்வோம். இம்மாதிரி வேண்டாததற்குச் செலவழித்துவிட்டு, வேண்டியதற்குச் செலவு செய்ய முடியாதபோது அவனுக்கே guilty ஆகத்தான் இருக்கும். இந்தச் சமயத்தில் நாம் வேறு போய் அவனிடம் யாசகம் கேட்டு அவனைக் கஷ்டப்படுத்துவானேன், தனக்குப் பிடித்த காரியத்துக்கே மனஸாரக் கொடுக்க முடியாத பரிதாபமான ஸ்திதியில் அவனைக் கொண்டு போய் நாம் வைப்பானேன் என்று எனக்குத் தோன்றுகிறது.

சமூகக் காரியங்கள் என்றால் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் பணக்காரர்கள், இந்தக் காரியங்களுக்கு போஷகராக இருக்கக் கூடியவர்கள் என்று பார்த்தால் ஒவ்வொரு ஊர் அல்லது பேட்டையிலும் ஒரு பத்து, பன்னிரண்டு பேர்தான் இருப்பார்கள். இவர்களிடம் ஒவ்வொரு காரியத்துக்கும் புஸ்தகத்தைத் தூக்கிக் கொண்டு ஓடினால் அவர்களும்தான் என்ன செய்வார்கள்? ஒன்று, வேண்டா வெறுப்பாகக் கொடுப்பார்கள், அல்லது விருப்பம் இருந்தும் கூட நிறையக் கொடுக்க முடியவில்லையே என்று துக்கப்படுவார்கள்.

நமக்கும் யோசனை வருகிறது: அந்தப் பணம் கணக்கில் வந்ததா, வராததா; கணக்கில் வராதது என்றால் அந்த மாதிரி பணத்தைத் தர்மத்துக்குப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளலாமா' என்றெல்லாம் யோசனை வருகிறது.

ஆனதால், பணக்காரர்களை நம்பித்தான் ஸோஷல் ஸர்வீஸ் என்று வைத்துக் கொள்ளவே கூடாது. அவர்களாகவே காதில் விழுந்து கூப்பிட்டுக் கொடுத்தால் தாராளமாக வாங்கிக் கொள்ளலாம். நாமாகப் போய்ப் பிடுங்கி எடுக்கக் கூடாது என்று தோன்றுகிறது.

இதில் இன்னொன்று கூட: சில பணக்காரர்களே செலவு முழுக்க ஏற்கிறார்கள் என்றால் அதனாலேயே அவர்களுக்கு சங்கத்தில் அதிக ரைட் உண்டாகி விடும். அவர்களுக்கு மற்றவர்கள் பயப்படும்படியாக ஆகும்.

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]



சென்னை, அடையாறு டிராமாடிக் சொஸைடியின் ஆதரவில் குமாரி ராதிகா நாராயணனின் பரத நாட்டிய நிகழ்ச்சி அண்மையில் கல்யாணர் அரங்கில் நடைபெற்றது. சங்கீத கலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் பிரதம விருந்தினராயிருந்தார். நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் தலைமை வகித்தார். ராதிகா பம்பாய் ராஜ ராஜேசுவரி பரத நாட்டியக் கலாமந்திரின் மாணவி. குரு திரு கல்யாண சுந்தரம்.

பரதக் கலையை நன்கு பயின்றுள்ள ராதிகா பாரெல்லாம் புகழ் பெற வாழ்த்துகிறோம்!

எதிலும் அவர்கள் சொல்வதுதான் முடிவு என்றாகிவிடும்.

பணக்காரர்கள் பரம தியாகிகளாக, தர்ம கர்த்தாக்கள் (trustees) மாதிரி, தங்கள் பணத்தைச் சமூகக் காரியங்களுக்காகத்தான் பிரயோஜனப்படுத்தவேண்டும் என்பதுதான் நம் தர்மம். மநு, திருவள்ளுவர் நாளிலிருந்து காந்தி வரை இப்படித்தான் சொல்லி வந்திருக்கிறார்கள். இது வாஸ்தவத்தில் நடந்தால், கம்யூனிஸம், ரிவல்யூஷன் எதுவுமே இல்லாமல் லோகமெல்லாம் சந்தோஷமாக, சாந்தமாக இருக்கும். இதெல்லாம் எனக்குத் தெரியாமல் போகவில்லை. ஆனாலும் அவர்கள் தாங்களாகத் தர்ம சிந்தனையை வளர்த்துக் கொண்டு, பிரியப்பட்டு, உபகாரம் செய்யத்தான் நாம் தூண்டுகோலாகப் பிரசாரம் செய்ய வேண்டுமே தவிர அவர்களைப் போய் நிர்ப்பந்தப்படுத்த வேண்டாம் என்று தோன்றியதால் சொன்னேன். பாதி ஸீரியஸாகவும் பாதி விளையாட்டாகவும் சொன்னேன்.

இன்னொன்று கூட நான் விளையாட்டாகச் சொல்வதுண்டு. பொதுக் காரியம் செய்கிறவர்கள் இப்போது முதலில் இன்னின்னார் நிறைய உதவக் கூடும் என்று 'லிஸ்ட்' போட்டுக்கொண்டு அந்த வரிசைப்படி கலெக்ஷனுக்குப் போகிறார்கள் அல்லவா? இதில் அநேகமாக ஏமாற்றங்கள்தான் உண்டாகின்றன. நாம் ரொம்பவும் தாராளமாகக் கொடுப்பான் என்று நினைக்கிறவனுக்கு ஏதாவது சிரமமிருக்கிறது, அல்லது மனசில்லை—கையை விரித்து விடுகிறான் அல்லது மூக்கால் அழுதுகொண்டு கஷ்கமாகக் கொடுக்கிறான். உடனே நமக்குப் பணியிலேயே உற்சாகம் குறைந்து விடுகிறது. அந்த ஆசாமியைத் தூற்ற ஆரம்பிக்கிறோம். இதற்குப் பதிலாக நான் என்ன சொல்கிறேன் என்றால், யாரார் நன்கொடை தர மாட்டார்கள் என்று தோன்றுகிறதோ அவர்களை ஒரு லிஸ்ட் போட்டுக் கொள்ளுங்கள். முதலில் இப்படிப்பட்டவர்களைப் போய்ப் பாருங்கள். அவர்கள் கையை விரித்து விட்டால் அதற்காக நமக்கு மனசு தளரப் போவதில்லை. ஏனென்றால் இது நாமே எதிர்பார்த்ததுதானே? மாறாக அவர்கள் ஏதோ கொடுத்தாலும் கொடுக்கலாம், சில சமயம் அள்ளி அள்ளியும் கொடுக்கலாம்—இப்படிக் கொடுக்க நேரிட்டால் நமக்கு உற்சாகம் கரை கடந்து விடும். பணியில் இன்னும் தீவிரமாக இறங்குவோம். இப்படி என் வார்த்தைப்படி, கொடுக்காமல் இருக்கக் கூடியவர்களின் லிஸ்டைப் போட்டு முதலில் அவர்களிடம் வசூலுக்குப் போய், அப்புறம் கொடுக்கக் கூடியவர்களைப் பார்த்தவர்கள், பிற்பாடு என்னிடம் வந்து ''ஸைகலாஜிகலாக' இதில் தங்களுக்கு ரொம்பவும் திருப்தியும், உற்சாகமும் உண்டானதாகச் சொல்லியிருக்கிறார்கள். யாசகக் கலையில் இப்படிப் பல 'ட்ரிக்'குகள் இருக்கின்றன.

நான் சொல்ல வந்தது என்னவென்றால், ஏழையோ, பணக்காரனோ, சமூகத்தில் உள்ள அத்தனை பேரும் ஒரு காலணா அரையணாவாவது போட்டு எல்லோருமாகச் சேர்ந்தே பொதுக் காரியங்களுக்கான செலவுகளை ஏற்க வேண்டும். பணக்காரன் பணம் மட்டும் கொடுத்துவிட்டு, சரீரத்தால் உழைக்காமலிருந்தான் என்று இருக்கக் கூடாது; ஏழை சரீரத்தால் மட்டும் உழைத்து விட்டுப் பணம் கொடுக்காமல் இருந்தான் என்றும் இருக்கக் கூடாது. பணக்காரன் ரூபாய் தருவதும், ஏழை சரீர கைங்கரியம் செய்வதும் பெரிய தியாகமில்லை. பணக்காரன் ஏழைகளோடு வந்து நின்று கொண்டு மண்வெட்டி எடுத்து வெட்ட வேண்டும்; ஏழை தன் கூழுக்கு ஒரு மிளகாய் வாங்கிக் கொள்வதற்குப் பதிலாகக் காலணா டொனேஷன் கொடுக்க வேண்டும்—அதுதான் பெரிசு. சோஷல் ஸர்விஸ் பண்ணும்போதே பண்ணுகிறவர்கள் மனசில் உயர்ந்து வளர வேண்டுமானால் செலவு, உழைப்பு இரண்டுமே எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்; ஒவ்வொருத்தனுக்கும் இரண்டிலும் பங்கு இருக்க வேண்டும்.

(தொடரும்)



பெருந்தொகை எளிதாக சேமியுங்கள்

Monthly deposit ரூ.	24 மாதம் ரூ.	61 மாதம் ரூ.	96 மாதம் ரூ.	120 மாதம் ரூ.	240 மாதம் ரூ.
20	523	1,596	2,948	4,132	15,311
50	1,308	3,990	7,370	10,330	38,279
100	2,617	7,980	14,740	20,660	76,558
200	5,235	15,960	29,480	41,320	1,53,116

தேர்ந்தெடுங்கள் லக்ஷ்மி விலாஸ் பேங்க் ரெக்கரிங் டெபாசிட் திட்டத்தை

எளிதாகச் சேமியுங்கள்...
LVB சேவை உங்களுக்கே

LVB

லக்ஷ்மி விலாஸ் பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்
693, ஜவஹர் கடைத் தெரு
கரூர் 639 001

நிர்வாக அலுவலகம்
1, பைகிராஃப்ட்ஸ் கார்டன் தெரு
சென்னை 600 006

மணி ஆறு
ஜெனரல் மேனேஜர்

D. வர்த்தமானன்
சேர்மன்

KRIPAMA. LVB. 511

புது உலகம் கண்டேன்!

13. பாரிஸ் என்னும் நறுமணம்

பாரிஸ் என்று சொன்ன அளவில் ஒருவித மலர்ச்சியையும், நறுமணத்தையும் உணர முடிகிறது. காதல், மென்மை, உல்லாசம், மலர்ச்சி, நறுமணம் இவை அனைத்தும் ஒன்று சேர்ந்ததுதான் பாரிஸ். எவ்வளவோ காலமாகிய பின்பும் பாரிஸின் இளமையோ, புதுமையோ இன்னும் குன்றிவிடவில்லை. பாரிஸைப் பற்றிய பேச்சுக்களும், சுவையான உரையாடல்களும் இன்னும் தீர்ந்துபோய் விடவில்லை. உலகெங்குமிருந்து சுற்றுப் பிரயாணிகள் தளராத உற்சாகத்தோடு மீண்டும் மீண்டும் பாரிஸுக்கு வந்த வண்ணமாக இருக்கிறார்கள். மகிழ்ந்த வண்ணமாக இருக்கிறார்கள்.

பாரிஸின் புகழ் பெற்ற ஐஃபெல் கோபுரம் *(Eiffel Tower)* லூவர் மியூஸியம், வெர்ஸெயில்ஸ் அரண்மனை, நோத்தர்தாம் சர்ச், இவற்றைப் பற்றிய சில உள் விவரங்களை இந்தக்கட்டுரையில் பார்க்கலாம்.



லண்டனை அடையாளம் காட்டும் 'பிக்பென்' கடிகாரம் போல், மாஸ்கோவை அடையாளம் காட்டும் கிரெம்ளின் டவர் சென்சதுக்கம் போலப் பாரிஸை அடையாளம் காட்டுவது ஐஃபல் கோபுரம். இந்த ஐஃபெல் கோபுரத்தைக் கட்டும்போது எக்காரணத்தைக் கொண்டும் பாரிஸில் இதைக் கட்டவேகூடாது என்று எதிர்த்து மனுக் கொடுத்தவர்களில் பிரபல பிரெஞ்சு எழுத்தாளர் மாப்பஸானும் ஒருவர். பாரிஸ் ஐஃபெல் என்ற என்ஜினீயர் இந்தக் கோபுரத்தைக் கட்ட நேர்ந்ததே ஒரு சுவாரசியமான வரலாறு ஆகும்.

மாபெரும் மலைகளுக்கு இடையிலான பள்ளத்தாக்கை இணைத்துப் பாலம் போடுவது, பெரிய காட்டாறுகளைக் கடக்க எஃகுப் பாலங்களை அமைப்பது ஆகியவற்றில் வல்லவரான ஐஃபெல் என்னும் பொறி இயல் நிபுணர் 1887ல் பாரிஸில் இக்கோபுரத்தைக் கட்டினார். என்ஜினீயரிங் திறமையைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காகவும் — பிரான்ஸின் கலை அழகை உலகறியச் செய்யும் ஒரு காட்சிக்காகவும் அரசாங்கத்தோடு இருபது ஆண்டுகள் ஒப்பந்தம் செய்து கொண்டு ஐஃபெல் இந்த இரும்புக் கோபுரத்தைக் கட்டத் தொடங்கினார்.

அப்படித் தொடங்கியபோது பாரிஸ் நகரில் அதற்குப் பலத்த எதிர்ப்பு இருந்தது. டூமா, மாப்பஸான் ஆகிய பிரபல எழுத்தாளர்கள் உட்பட நூற்றுக் கணக்கான பிரமுகர்கள் கையொப்பமிட்டு, ''இது ஒரு தண்டச் செலவு. அநாவசியமான முயற்சி'' என்றெல்லாம் குறை கூறி பிரெஞ்சு அரசாங்கத்துக்கு மனுக் கொடுத்தனர். இப்படியெல்லாம் கடுமையான எதிர்ப்புக்களும், ஆட்சேபங்களும் இருந்த போதிலும் ஐஃபெல் எப்படியோ கோபுரத்தைக் கட்டி முடித்து விட்டார்.

நாட் கணக்கில், வாரக் கணக்கில், மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில், காலம் செல்லச் செல்லக் கோபுரமும் மக்களிடையே பிரபலமாகி விட்டது. புகழ் பெற்று விட்டது.

இருபது ஆண்டுகள் — கோபுரத்துக்கான ஒப்பந்தக் காலம் முடிந்ததும் 1907ம் ஆண்டு வந்ததும் கோபுரத்தைப் பிரித்தெடுக்க முயன்றார்கள்.

கோபுரத்தை உருவாக்கும்போது இருந்த மனப்பான்மைகள் படிப் படியாக மாறி, நகரின் அழகுக்கும், கம்பீரத்துக்கும் இந்தக் கோபுரம் அவசியம் என்ற மனப்பான்மை மக்களிடையேயும், கலைஞர்கள் அறிவாளிகளிடையேயும் இப்போது பெருகியிருந்தது. அப்போது — இந்தக் கோபுரத்தைக் கட்டவே கூடாது என்று சிலர் மனுக் கொடுத்தது போல இப்போது இந்தக் கோபுரத்தைப் பிரிக்கக் கூடாது என்று கோரிக் கலைஞர்களும், கவிஞர்களும் ஓவியர்களும், எழுத்தாளர்களும், கையெழுத்திட்டு அரசாங்கத்துக்கு மனுக் கொடுத்தனர். அதே நேரத்தில் ரேடியோ, டெலி கம்யூனிக்கேஷன் துறையினர் தங்களுக்கு இப்படி ஓர் உயரமான கோபுரம் தேவை என்று அரசாங்கத்தை வற்புறுத்தினார்கள். எல்லா முயற்சிகளும் ஒன்றுசேரவே கோபுரம் கலைக்கப்படுவதிலிருந்தும், பிரிக்கப் படுவதிலிருந்தும் தப்பிப் பிழைத்தது. பிற்காலத்தில் 'டெலிவிஷன் டவராக' உப


யோகப்படும் அவசியமும் இக்கோபுரத்துக்கு வந்து சேர்ந்தது.

முதலில் தரை மட்டத்திலிருந்து 984 அடி உயரம் கட்டப்பட்ட இந்தக் கோபுரம் டெலிவிஷன் டவராகவும் ஆன காலத்தில் மேலும் 67 அடி உயரத்துக்கு வளர்ந்து உயர்ந்தது. இந்த ஐஃபெல் கோபுரத்தின் மொத்த இரும்பின் எடை 7000 டன். இதில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள மொத்த ஆணிகள் (rivets) எண்ணிக்கை இரண்டரை மில்லியன். உருக்குத் தகடுகளையும் கம்பிகளையும் முயன்றால் கூட எண்ணிக் கணக்கிட்டுச் சொல்லவே முடியாது.

1832 முதல் 1923 வரையில் வாழ்ந்த பொறி இயல் நிபுணர் ஐஃபெல் தம்முடைய 52வது வயதில்–அதாவது 1884ல் தொடங்கி 55 வயதில் – 1887ல் ஐஃபெல் கோபுரத்தை உருவாக்கி முடித்தார். இன்று பாரிஸ் நகரின் அடையாளக் கோபுரமாக விளங்கும் ஐஃபெல் கோபுரத்தைப் பற்றிப் பல சுவாரசியமான கதைகள் வழங்குகின்றன.

இரண்டாவது உலகப் போரில் ஹிட்லர் வசம் சிக்கிய பாரிஸ் நகரத்தை மீண்டும் பிரெஞ்சுப் படைகள்







■ பாரிஸ் ஒளியக் கடை அருகே கட்டுரை ஆசிரியர்.

■ நோத்தர்தாம் சர்ச் (இடம்)

■ என்ஜினியர் ஐஃபெல்.

■ பாரிஸில் ஒரு பழங்கால மாளிகை.

■ ஐஃபெல் கோபுரம் அருகே பொங்குபுனல்கள்.

கைப்பற்றி மீட்டு விடுமோ என்ற நிலைமை ஏற்பட்டவுடன், ''உடனே பாரிஸ் நகரைத் தீவைத்துக் கொளுத்துங்கள். ஐஃபெல் கோபுரத்தைக் குண்டு போட்டுத் தகர்த்தெறியுங்கள்!'' என்று ஹிட்லர் ஆவேசமாகவும், ஆத்திரமாகவும் உத்தரவிட்டானும். ஆனால் ஹிட்லரின்



நா. பார்த்தசாரதி

உத்தரவைச் செவிமடுத்த ஜெர்மானிய இராணுவ ஜெனரலுக்கு அந்த அழகிய நகரத்தையும் கோபுரத்தையும் அழிக்க மனம் வரவில்லையாம். அதனால் அவன் ஹிட்லரின் உத்தரவை நிறைவேற்றுவதில் வேண்டுமென்றே கால தாமதம் செய்து இழுத்தடித்தானும். அந்தக் கால தாமதத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிரெஞ்சுப் படைகள் மீண்டும் பாரிஸைக் கைப்பற்றி நகரையும் ஐஃபெல் கோபுரத்தையும் அழிவிலிருந்து காப்பாற்றி விட்டனவாம்.

இப்படிப் பாரிஸையும் ஐஃபெல் கோபுரத்தையும் பற்றிப் பலப் பல சுவையான விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஐஃபெல் கோபுரத்தில் ஏறிப் பார்ப்பதற்கு மூன்றுமாடங்கள் இருக்கின்றன. முதல் மாடம் தரை மட்டத்திலிருந்து 187 அடிஉயரத்தில் அமைந்திருக்கிறது. இரண்டாவது மாடம் தரை மட்டத்திலிருந்து 377 அடி உயரத்தில் அமைந்திருக்கிறது. மூன்றுவது மாடம் பூமிப் பரப்பிலிருந்து 899 அடி உயரத்தில் அமைந்திருக்கிறது.



பாபு: கடலை எண்ணெய்க்கு இவ்வளவு டிமாண்ட் இருக்கிறப்போ எப்படி உங்க கடையிலே மட்டும் இவ்வளவு பட்சணம் பண்ணி வச்சிருக்கீங்க?

முதலாளி: இதை யோசிச்சுத்தான் நான் மூன்று மாதம் முன்னாலேயே நிறைய பட்சணம் செய்து வைச்சுட்டேன். - லலிதா செல்லப்பா

இதற்கு மேல் உள்ள உயர் பகுதியில் மக்கள் செல்ல அனுமதிப்பதில்லை.

பருவ நிலை மாறுதல்களுக்கு ஏற்ப இந்தக் கோபுரம் சுமார் ஆறு அங்குலம் நீள்வதும் குறுகுவதும் உண்டு. காற்று மிகவும் விரைந்து வீசும்போது சுமார் நாலு அங்குலத்துக்கு மேல் காற்று வீசும் திசையில் உச்சிப் பகுதி அசைவது உண்டு.

கோபுரத்தின் நான்கு அடி முனைகளில் மூன்றின் மூலம் மேலே செல்வதற்கு மின்சார லிஃப்ட்களும், ஒன்றின் மூலம் நடந்தேறிச் செல்வதற்குப் படிக்கட்டுக்களும் அமைக்கப் பட்டுள்ளன.

படிக் கட்டுக்களின் 1,652 படிகள் வழியாக ஏறி மேலே செல்ல முடிந்த பலசாலிகளுக்கு அரைக் கட்டணம்தான் — அதாவது லிஃப்ட் கட்டணத்தில் சரி பாதி. மேலே மூன்றாவது மாடியிலிருந்து நாற்பது மைல் சுற்றளவு தெரியும். அங்கிருந்து கீழே நிறுத்தப்பட்டுள்ள கார்களைப் பார்த்தால் அவை தீப் பெட்டியைவிடச் சிறியதாகத் தென்படும்.

சுமார் தொண்ணூறுக்கு மேற்பட்ட மியூசியங்கள் உள்ள பாரிஸில் முதன்மையான புகழும் பெயரும் உடையது 'லூவ்ர் காலரி' எனப்படும் லூவ்ர் மியூஸியம். அதிலுள்ள அசல் 'வீனஸ் டிமெல்லோ' சிலையையும், அசல் 'மோனலிஸா' ஓவியத்தையும் காணக் கூட்டம் மொய்க்கிறது. ஒரிஜினல் 'மோனலிஸா'வை என்னிடம் வைத்திருக்கிறேன். இப்போது உங்கள் காலரியில் வைத்திருப்பது 'டூப்ளிகேட்' என்று ஒருவன் கூறியபின் அது உண்மை என்றறிந்து அரும்பாடுபட்டு அந்த அசலை மீட்டு இப்படிக் காட்சியில் வைத்தார்களாம்.

பாரிஸில் ஸேன் நதி இரண்டாக மாலை போலப் பிரிந்து நடுவே ஒரு சிறு தீவை உண்டாக்கியிருக்கிறது. அதில்தான் நோத்தர்தாம் சர்ச் இருக்கிறது. 'ஹன்ச் பேக் ஆஃப் நாட்டர் டாம்' என்ற உலகப் புகழ்பெற்ற இலக்கியம் மூலம் பிரபலமடைந்த இந்தச் சர்ச் வாசலில் பாரிஸுக்கு வரும் சுற்றுப் பயணிகளின் கூட்டத்தில் பெரும் பகுதியைப் பார்க்கலாம்.

பாரிஸ் நகரம் கலைக் களஞ்சியம். சுமார் ஐம்பதினாயிரம் ஓவியர்களுக்கு மேல் பாரிஸில் வசிக்கிறார்கள். ஓர் ஓவியச் சந்தை போலச் சுற்றுப் பயணிகளைச் சில நொடிகளில் படமாக வரைந்து அவர்களிடமே விலைக்கு விற்கும் ஓவியர்களின் கூட்டம் அங்கு நிறைய உண்டு. அப்படித் தங்களை வரைந்து கொள்ள விரும்பிப் படத்துக்கு நிற்கிற மக்கள் கூட்டத்தையும் திரும்பப் பார்க்கலாம். நகரின் பல பகுதிகளில் இப்படி ஓவியர்களைப் பார்ப்பதற்கு முடியும். அவர்களைச் சுற்றிலும் வேடிக்கையாகக் கூட்டத்தையும் காணலாம்.

வெற்றி வளைவும் *(Arch of Triumph)* அதன் நடுப் பகுதியைச் சுற்றி நட்சத்திர முனைகளாகப் பிரியும் பன்னிரண்டு சாலைகளும் பாரிஸில் கண்கொள்ளாக் காட்சி. ஒரு நட்சத்திரம் போல் சாலைகள் பிரியக் கூடிய இவ்விடத்தை ஃபிரெஞ்சு மொழியில் நட்சத்திரம் என்ற பொருளுக்கு உரிய 'எத்துவால்' என்ற பெயராலேயே பாரிஸ் மக்கள் அழைக்கிறார்கள். அரசாங்க பவனிகளும், பரேடுகளும் இந்த வெற்றி வளைவிலிருந்து நேரே செல்லும் அழகான அவென்யூவில்தான் நடக்கும்.

பிரெஞ்சு மன்னர் மாளிகைகள் அடங்கிய வெர்ஸெயில்ஸ் அரண்மனை, பூங்கா, ஏரிகள், நீரூற்றுக்கள் காண ரம்யமாக இருக்கின்றன. நகரில் உள்ள பூங்காக்களில் 'லக்சம்பர்க் பூங்கா' வசீகரமானது. இதன் அருகே உள்ள ஒரு கல்லூரி அறையில்தான் உலகத் தமிழ் மகாநாட்டின் நிகழ்ச்சிகள் நடந்தன.

பாரிஸைப் பற்றிப் பிரயாணக்கட்டுரை என்றால் நைட் கிளப்புகளைப் பற்றி எதுவும் சொல்லாமல் நிறைவடையாது என்று கட்டுரை எழுதுகிறவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் பிரயாணக் கட்டுரை எழுதுகிறவர்கள் யாரும் அநேகமாகச் சொல்லாத வேறு சில 'கிளப்' களைப் பற்றி இங்கே சொல்லலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

வெற்றி வளைவு அருகில் 'லிடோ' வுக்குப் பக்கத்தில் ,அஸ்ட்ரோ ஃப்ளாஷ்' *(Astro flash)* என்று 'ஜோதிட கிளப்' ஒன்று இருக்கிறது. இங்கே கம்ப்யூட்டர் மூலம் வருங் காலத்தைச் சொல்லுகிறார்கள். பெரிய உலகப் படம் இருக்கிறது. அதில் சோதிடம் பார்க்க விரும்புகிறவர் தாம் பிறந்த இடத்தைத் தொட்டால் போதும். அடுத்த பதினைந்து நிமிடங்களில் அவருடைய எதிர்காலம் டைப் செய்யப்பட்டு ஒரு கத்தை காகிதம் வந்து விழுகிறது.

நகைச்சுவையாகப் பேசுவதில், ஜோக் அடிப்பதில் வல்லவர்கள் தங்களுக்குள் கூடிப் புதுப் புது நகைச்சுவைகளையும் ஜோக்குகளையும் உற்சாகமாகப் பரிமாறிக் கொள்ளும் பல மாலை நேர கிளப்புகள் *(Humour Clubs)* பாரிஸில் உள்ளன. அதில் சில கிளப்கள் அன்றைய தினசரிப் பத்திரிகைகளின் செய்திகளை மட்டும் மையமாகக் கொண்டு அரசியல் நகைச்சுவைத் துணுக்குகளைக் கூற வேண்டும் என்றே ஏற்பட்டிருப்பவை. இந்த நகைச்சுவைக் 'கிளப்'கள் புதுமையானவை. இந்தக் கிளப்கள் ஃபிரெஞ்சிலேயே நடப்பதால் பிரெஞ்சு மொழி தெரிந்தவர்கள்தான் கலந்து கொண்டு இரசிக்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது.

நறுமணங்களின் இருப்பிடமான பாரிஸ் 'செண்டு'களுக்கும், திராட்சை மதுவுக்கும் பெயர் பெற்றது. பெரிய உணவு விடுதிகளில் நல்ல ஒயின் எது என்று திறமையோடு யோசனை சொல்லும் *Wine stewards* தனியே உண்டு. அவர்கள் யோசனைக்குத் தனியே 'டிப்ஸ்' தர வேண்டும்.

பாரிஸ் ஆபராவும், தியேட்டர் டி-பிரான்ஸும் மேடை நயங்களின் அடையாளங்களாக விளங்குகின்றன. தியேட்டர் முகப்பில் அந்த ஆண்டில் அதுவரையில் தாங்கள் மேடையேற்றி நடத்திய நாடகங்கள்

ராசி! பட்டுப்புடவைகள்

தீபாவளி முழுமை பெற!



EP-RASI-125

ராதா சில்க் எம்போரியம்
சந்நிதித் தெரு மயிலாப்பூர்
சென்னை-600 004

ராதா சில்க் எம்போரியம்
29, கோவிந்த் மஹால்
86-B, மரைன் டிரைவ்
பம்பாய்-400 002

ராதா சில்க்ஸ் தன் பில்டிங்ஸ், மவுண்ட்ரோடு, சென்னை-600 002

நாளெண்ணிக்கை விவரம் பற்றித் திரைச் சீலைகளில் எழுதி நீளமாகத் தொங்க விட்டிருக்கிறார்கள். வெற்றிக் கொடி போலத் தியேட்டர் முகப்பில் அது ஆடி அசைகிறது.

பழைய ஓர்லி விமான நிலையத்தோடு டிகால் பெயர் சூட்டப்பட்டுள்ள 'சார்லஸ் டிகால்' சர்வதேச விமான நிலையமும் இப்போது பாரிஸில் இயங்குகிறது. கோன வடிவில் கட்டப்பட்டுள்ள சார்லஸ் டிகால் சர்வ தேச விமான நிலையக் கட்டிடம் பிரமிப்பூட்டுகிறது. கலைகள், கட்டிடங்கள், ஓவியங்கள், கடைகள் எதிலும் திறமை என்ற நறுமணமும் நுணுக்கம் என்ற நறுமணமும் நிறைந்த பாரிஸ் நகரில் நாசி நுகரும் நறுமணத்துக்கும் பஞ்சமில்லை. ''பாரிஸ் முழுவதும் நறுமண மலர்ச்சி நிறைந்தது. ரோமாபுரி முழுவதும் சரித்திரம் நிறைந்தது'' — என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள். சரித்திரங்கள் நிறைந்த ரோமாபுரியை அடுத்த கட்டுரையில் பார்க்கலாம். (தொடரும்)

சென்ஸாரிடமிருந்து சிரமப்பட்டு விடுபட்டு வந்துவிட்டதாகப் பெருமைப்படுகிறார்கள். இது ஒரு பெருமையா?

கதையில் ஒரு புதுமையும் இல்லை. குழந்தைகளின் ஆரோக்கியமான மன வளர்ச்சிக்குப் பெற்றோர்களின் நடத்தை சரியாக இருக்க வேண்டும் என்பது மனிதன் தோன்றிய நாள் முதல் இருந்து வரும் உண்மை. பல கதைகளில் கையாளப்பட்ட கருத்து.

வயது வந்த பெண்ணுக்குத் தந்தையான ஒருவர், தம் மனைவியிடம் வேலை கெட்ட வேலைகளில் சற்று அசட்டுப் பிசட்டென்று அடிக்கடி நடந்து கொள்கிறார். ஹைஸ்கூலில் படிக்கும் அந்தப் பெண் பெற்றோர்களின் செயலைக் கதவிடுக்கு வழியாகப் பார்ப்பதும், அவர்கள் படித்த காமவெறி ஊட்டும் புத்தகங்களை ரகசியமாகப் படிப்பதும், அதன் விளைவாக ஒரு வாலிபனைக் காதலிப்பதும் ....புவனா என்ற பெண் சந்தர்ப்ப வசத்தினால் விலைமாதாகவே மாறி அவதிப்படுவதும்... தன் மனத்தை ஒருவனிடம் பறி கொடுத்த ஒரு பெண் வேறொருவனை மணக்க நேர்ந்து துன்புறுவதும்.... கடைசியில் புவனாவின் தியாகத்தினால் எல்லாம் சரியாவதும்... (என்ன 'உம் உம்' என்கிறீர்களா? என்ன செய்வது! திரைக் கதை அப்படி முக்கி முனகிக்கொண்டு போகிறதே!)

கல்லூரி மாணவியாகக் களியாட்டம் போட்ட மீனா, மனம் இல்லாத மணத்தினால் மனம் உடைந்து போகிறாள். ஓ். விஜயா பரவாயில்லை. தேறிவிடுவார்.

பாவம், ஸ்ரீவித்யா! தெறி பிறழும் பெண்ணாகவே தோன்றத்தான் பல படங்களில் அவருக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அவர் வசனம் பேச வேண்டியதே வில்லை. அவரது அகன்ற விழிகள் பேச வேண்டியவற்றையெல்லாம் பேசிவிடுகின்றனவே! ஸ்ரீவித்யா மட்டும் இல்லையென்றால் இந்தப் படமும் இல்லை.

'அசட்டுப் பிசட்டு' என்று நடந்து கொள்ளும் வி. கே. ராமசாமிக்கு ஹாஸ்ய நடிப்பு கைவந்த கலை. விஜயகுமார், விருப்பம் இல்லாத பெண்ணை மணந்து கொண்டு அவளைத் தம் பக்கம் திருப்பப் பெரு முயற்சி செய்கிறார். நகைச்சுவைக்குத் தனி ஆவர்த்தனம் வாசிக்கும் தங்கவேலுவின் ஆற்றல் இப்படத்தில் விகசிக்கிறது. வில்லன் மோகனாக வரும் ஜெயச்சந்திரன் பாராட்டுக்குரியவர். வில்லன் என்பதற்காக அதிகமாக அலட்டிக் கொள்ளாமல் நன்றாக நடித்திருக்கிறார்.

மூர்த்தி—சச்சு நகைச்சுவைக் காட்சிகள் பரவாயில்லை. கட்டிடங்களுக்குச் சுண்ணாம்பு அடிக்கும் தொழிலை ஏற்று, அதை மனைவியிடம் சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு அவளிடம் மட்டும் பெரிய ஆபீசர் மாதிரி நடிக்கிற மூர்த்தி வாய் விட்டுச் சிரிக்க வைத்துவிட்டார். சில காட்சிகளில் மட்டும் வந்தாலும் குமாரி சச்சு கவர்ந்துவிடுகிறார்.

படத்தில் நான்கு பாடல்கள்தான்—நான்கும் சின்னவை. அதுவரையில் சந்தோஷம் தான்!

திரைக் கதை, டைரக்ஷன் இரண்டும் ஏற்றிருப்பவர் துரை. ராம் — ரஹீமின் வசனம் சில இடங்களில் பச்சையாக இருக்கிறது.

'இது ஒரு பாடம்' என்று கடைசியில் காட்டுகிறார்கள். ஆம், ஒரு பாடம்தான்—எப்படிப் படம் எடுக்கக் கூடாது என்பதற்கு!

—காந்தன்



பார்த்திபன் கனவு

அமரர்

கல்கி

அத்தியாயம் 4

மாமல்லபுரம்

கடற்கரைப் பட்டினமாகிய மாமல்லபுரத்தில் அன்று அல்லோல கல்லோலமாயிருந்தது. வீடுகள் எல்லாம் மாவிலைகளினாலும், தென்னங் குருத்துக்களினாலும், சிங்க உருவம் தாங்கிய கொடிகளினாலும், பல வர்ணத் தோரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. தெரு வீதிகளில் சித்திர விசித்திரமான கோலங்கள் போடப் பட்டிருந்தன. தேர்கள், யானைகள், குதிரைகள், கோபுரங்கள், பலவித விருட்சங்கள், பூஞ்செடிகள் இவையெல்லாம் போட்ட கோலங்கள் கண்ணுக்கு விருந்தாக இருந்தன. அதிகாலையிலிருந்து ஸ்திரீகளும் புருஷர்களும், சிறுவர் சிறுமிகளும் பட்டுப் பட்டாடைகளினாலும், பசும்பொன் ஆபரணங்களினாலும் அலங்கரித்துக் கொண்டு தெரு வீதிகளிலும், திண்ணைகளிலும் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். எங்கே பார்த்தாலும் பேரிகை முழக்கம், மற்றும் மங்கள வாத்தியங்களின் ஒலியும் கேட்டுக் கொண்டிருந்தன. இந்த ஒலிகளுக்கிடையில், ''சக்கரவர்த்தி காஞ்சியிலிருந்து கிளம்பி விட்டாராம்!'', ''பாதி வழி வந்தாகி விட்டதாம்'' ''சக்கரவர்த்தியுடன் கோமகள் குந்தவி தேவியும் வருகிறாராம்!'' என்றெல்லாம் ஜனங்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும் கலகல சத்தமும் கேட்டுக்கொண் டிருந்தது.

மாமல்லபுரம் வாசிகள் அத்தனை அதிக உற்சாகத்துடனும் ஆனந்தத்துடனும் அன்று உற்சவம் கொண்டாடியதன் காரணம் என்னவென்றால், அந்நகருக்கு அன்று மாமல்ல நரசிம்ம வர்ம சக்கரவர்த்தி விஜயம் செய்வதாக இருந்ததுதான். சக்கரவர்த்தி விஜயம்செய்து ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னால் நின்றுபோன சிற்பப் பணியை மறுபடியும் ஆரம்பித்து வைப்பார் என்றும் அறிவிக்கப் பட்டிருந்தது. சக்கரவர்த்தியுடன் கூட அவருடைய செல்வக் குமாரி குந்தவி தேவியும் வரப்போவதாகத் தெரிந்திருந்த படியால் மாமல்லபுரவாசிகள் எல்லையற்ற குதூகலத்துடன் அந்த நாளைத் திருநாளாகக் கொண்டாடினார்கள்.

அந்தக் காலத்தில், காஞ்சி நரசிம்ம வர்மச் சக்கரவர்த்தியின் புகழ் எண்டிசைகளிலும் பரவி யிருந்தது. பாரத நாடெங்கும் அவருடைய கீர்த்தி வியாபித்திருந்ததோடு, கடல் கடந்து வெளிநாடுகளுக்கும் சென்றிருந்தது. தெற்கே காவேரியாற்றங்கரையிலிருந்து வடக்கே கிருஷ்ணா நதிக் கரை வரையில் பல்லவர்களின் சிங்கக் கொடி கம்பீரமாகப் பறந்தது. அந்தப் பிரதேசத்தில் உள்ள ஜனங்கள் எல்லாரும் நரசிம்ம வர்மரிடம் அளவில்லாத பக்தி கொண்டிருந்தார்கள். அறிவிலும், வீரத்திலும், தயாள குணத்திலும் நடுக்கண்ட நீதி வழங்குவதிலும், குடிகளின் நலன்களைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாப்பதிலும், சிற்பம், சித்திரம், சங்கீதம் முதலிய கலைகளை வளர்ப்பதிலும் நரசிம்ம வர்மர் மிகச் சிறந்து விளங்கியது பற்றி அவருடைய பிரஜைகள் மிக்கப் பெருமை கொண்டிருந்தார்கள். வடக்கே நர்மதை நதி வரையில் படையெடுத்துச் சென்று, பொல்லாத புலிகேசியைப்

போரில் கொன்று, வாதாபி நகரையும் தீக்கிரையாக்கிவிட்டு வந்ததன் பின்னர், மாமல்லச் சக்கரவர்த்தியைப் பற்றி அவருடைய குடிகள் கொண்டிருந்த பெருமை பன்மடங்கு பெருகியிருந்தது. ''தட்சிண தேசத்தில் நரசிம்ம வர்மரைப் போல் ஒரு சக்கரவர்த்தி இதுவரை தோன்றியதுமில்லை, இனிமேல் தோன்றப்போவதுமில்லை!'' என்று அந்தக் காலத்தில் பல்லவ சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த ஜனங்கள் நம்பினார்கள். முந்நூறு வருஷங்களுக்குப் பிறகு தஞ்சையில் இராஜ ராஜன் இராஜேந்திர சோழன் என்னும் மகா சக்கரவர்த்தி தோன்றப் போகிறார்கள் என்பதை அந்தக் காலத்து மக்கள் அறிந்திருக்க முடியாதல்லவா?

இவ்விதம் பல்லவ சாம்ராஜ்யத்தின் பிரஜைகள் எல்லோருமே நரசிம்ம வர்ம சக்கரவர்த்தியிடம் பக்தி விசுவாசம் கொண்டிருந்தார்களாயினும், மாமல்லபுரம் வாசிகளுக்குச் சக்கரவர்த்தியிடம் ஒரு தனித்த உறவு ஏற்பட்டிருந்தது. அந்தப் பட்டினத்துக்குப் பெயரும் புகழும் அளித்தவர் அவரே யல்லவா?

மகேந்திரவர்ம சக்கரவர்த்தியின் காலத்தில் நரசிம்ம வர்மர் இளம் பருவத்தினரா யிருந்தபோது, ஒரு தடவை மல் யுத்தத்தில் பிரசித்திபெற்ற மல்லர்களை யெல்லாம் தோற்கடித்து, வெற்றி பெற்றார். அப்போது அவருக்கு ''மகா மல்லன்'' என்ற பட்டம் அவருடைய தந்தை மகேந்திர வர்மரால் அளிக்கப்பட்டது. சில காலத்துக்குப் பிறகு இந்தப் பட்டப் பெயரை வைத்தே அந்தக் கடற்கரைப் பட்டினத்துக்கும் பெயர் வழங்கலாயிற்று.

■ ■ ■

''அப்பா! இந்தப் பட்டினத்துக்கு உங்கள் பட்டப் பெயரை எதற்காக வைத்தார்கள்?'' என்று கோமகள் குந்தவி, தந்தை நரசிம்ம வர்மரைப் பார்த்துக் கேட்டாள்.

இருவரும் பல்லவ சாம்ராஜ்யத்தின் பட்டத்து யானை மீது அம்பாரியில் வீற்றிருந்தார்கள்.

அந்தப் பட்டத்து யானைக்கு முன்னாலும் பின்னாலும் வேலும் வாளும் தாங்கிய போர் வீரர்கள் அணிவகுத்துச் சென்றார்கள். இன்னும் பலவகைப் பட்ட விருதுகளும் சென்றன.

எல்லாருக்கும் முன்னால் பெரிய ரிஷபங்கள் முதுகில் முரசுகளைச் சுமந்து கொண்டு சென்றன. சற்று நேரத்துக்கொரு தடவை அந்த முரசுகள் அடிக்கப்பட்டபோது உண்டான சத்தம் அலை மோதிக் கொண்டு நாலா புறமும் பரவியது.

அம்பாரியின் மீது வீற்றிருந்த நரசிம்ம வர்ம சக்கரவர்த்தியையும் அவர் அருமைப் புதல்வியையும் ஏக காலத்தில் பார்த்தவர்கள், உதய சூரியனையும், பூர்ணச் சந்திரனையும் அருகருகே பார்த்தவர்களைப் போல் திணறித் திண்டாடிப் போனார்கள்.

இருவருடைய திருமுகத்திலும் அத்தகைய திவ்விய தேஜஸ் ஜொலித்துக் கொண்டிருந்தது. அவர்கள் அணிந்திருந்த கிரீடங்களிலும், மற்ற ஆபரணங்களும் பதித்த நவரத்தினங்களின் காந்தி பார்ப்பவர்களின் கண்களைக் கூசச் செய்தது.



பல்லவ சக்கரவர்த்தி ஆஜானுபாகுவாய், கம்பீரமான தோற்றமுடையவரா யிருந்தார். வலிமையும், திறமையும் கொண்ட அவருடைய திருமேனியில் மென்மையும் சௌந்தரியமும் கலந்து உறவாடின. இராஜ களை ததும்பிய அவருடைய முகத்தில் காணப்பட்ட காயங்



களின் வடுக்கள், அவர் எத்தனையோ கோர யுத்தங்களில் கை கலந்து போரிட்டு ஜயபேரிகை முழக்கத்துடன் திரும்பி வந்தவர் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தன.

கோமகள் குந்தவி தேவியோ பெண் குலத்தின் அழகெல்லாம் திரண்டு உருக்கொண்டவள் போலிருந்தாள். பல்லவ சாம்ராஜ்யத்திலிருந்த மகா சிற்பிகளும், ஓவியக்காரர்களும், குந்தவி தேவியிடம் தங்கள் கலைத் திறன் தோற்று விட்டதென்பதை ஒப்புக்



கொண்டார்கள்.

''கோமகளின் கரு விழிகளில் தான் என்ன மாய மந்திர சக்தி இருக்கிறதோ தெரியவில்லை. தேவி தமது அஞ்சனம் தீட்டிய கண்களை அகல விரித்து எங்களைப் பார்த்தவுடனேயே நாங்கள் உணர்விழந்து, மெய்ம்மறந்து போய் விடுகிறோம். அப்புறம் சிற்பம் அமைப்பது எங்கே? சித்திரம் வரைவதெங்கே?'' என்றார்கள். ''எங்களையெல்லாம் கர்வ பங்கம் செய்வதற்கென்றே பிரம்மன் குந்தவி தேவியைப் படைத்திருக்க வேண்டும்'' என்றும் அவர்கள் சொன்னார்கள்.

அர்த்தமற்ற சச்சரவும் அபத்தமான முடிவும்!



அண்மையில் நான் சேலம் சென்றிருந்தபோது ஐந்து ரோட்டில் உள்ள திருப்பூர் குமரன் நினைவு ஸ்தூபியைப் படமெடுத்துக் கொண்டிருந்தேன்.

அப்போது ஒருவர், "சார், அந்த மூவர்ணக் கொடி நல்லா தெரியும்படி எடுங்க" என்றார்.

நான் படத்தை எடுத்துவிட்டு, "ஏன் சார், அதென்ன கொடியைப் பற்றி அவ்வளவு அழுத்தமா சொல்றீங்க" என்றேன்.

அதற்கு அவர்: "இந்த ஸ்தூபி திறக்கப்பட்டபோது குமரன் கையில் ஏனோ ஒரு வெள்ளைக் கொடிதான் இருந்தது. மூவர்ணக் கொடி இல்லை. ஒருநாள் இரவோடிரவாகச் சிலர் அதை மூவர்ணக் கொடியாக மாற்றினார்கள். சம்பந்தப்பட்டவர்கள் மீண்டும் அதை வெள்ளைக் கொடியாக மாற்றிவிட்டார்கள். இப்போது ஒருவழியாகக் குமரன் கையில் தேசியக் கொடி கிடைத்திருக்கிறது" என்றார்.

படம், தகவல்: ச. வி. ஆர். மோகன்

"அப்பா! இந்த நகருக்குத் தங்கள் பட்டப் பெயரை எதற்காக வைத்தார்கள்? சொல்லுகிறேன், சொல்லுகிறேன் என்று ஏமாற்றிக் கொண்டு வருகிறீர்களே! இன்றைக்குக் கட்டாயம் சொல்லியாக வேண்டும்" என்று மறுபடியும் கேட்டாள் குந்தவி.

"அப்படியானால் இப்போது இந்த யானை மேலிருந்து நாம் இறங்கியாக வேண்டும்" என்றார் சக்கரவர்த்தி.

"இப்படியே நான் தரையில் குதித்து விடட்டுமா?" என்றாள் குந்தவி.

"நீ சாதாரண மனுஷியாயிருந்தால் குதிக்கலாம் அம்மா! குதித்துக் காலையும் ஒடித்துக் கொள்ளலாம். சக்கரவர்த்தியின் மகளாக இருப்பதால் அப்படியெல்லாம் செய்யக் கூடாது!" என்றார் சக்கரவர்த்தி.

"எதற்காக அப்பா அப்படி? சக்கரவர்த்தியின் மகளாயிருப்பதால் யானையின் மேலிருந்து குதித்துக் காலை ஒடித்துக் கொள்ளக் கூடவா பாத்தியதை இல்லை?" என்று சிரித்துக் கொண்டே குந்தவி கேட்டாள்.

"ஆமாம், ஆமாம், அப்படி நீ செய்தால், 'காஞ்சி சக்கரவர்த்தியின் மகள் குந்தவி யானை மேலிருந்து குதித்தாளாம்' என்ற செய்தி உலகமெங்கும் பரவி விடும். அப்புறம் அங்க, வங்க, கலிங்கம் முதலிய ஐம்பத்தாறு தேசத்து இராஜ குமாரர்களில் யாரும் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள முன்வர மாட்டார்கள்! அப்புறம் உன் கல்யாணத்துக்குச் சீதை விஷயத்தில் ஜனகர் செய்தது போல் நானும் ஏதாவது தந்திரம் செய்தாக வேண்டும்."

"ஜனகர் தந்திரம் செய்தாரா? என்ன தந்திரம் அப்பா?" என்று குந்தவி கேட்டாள்.

"அது தெரியாதா உனக்கு? சீதை சிறு பெண்ணாயிருந்தபோது ஒரு நாள் ஒரு வில்லைத் தெரியாத்தனமாய்த் தூக்கி நிறுத்தி விட்டாள். இதற்காக அவளை ஐம்பத்தாறு தேசத்து இராஜ குமாரர்களும் கல்யாணம் செய்து கொள்ள மறுத்து விட்டார்கள்! கடைசியில் சீதையின் தகப்பனார் என்ன செய்தார் தெரியுமா? விசுவாமித்திர ரிஷியை அனுப்பி இராமன் என்ற அசட்டு இராஜ குமாரனைத் தந்திரமாய் அழைத்து வரப் பண்ணினார். ஒரு பெரிய வில்லை நடுவில் முறித்து, முறிந்தது தெரியாதபடி தந்திரமாய்ப் பெட்டிக்குள் வைத்திருந்தார். இராமன் அந்த வில்லை விளையாட்டாக எடுத்ததும் வில் முறிந்து இரண்டு துண்டாக விழுந்து விட்டது. உடனே, ஜனகர், "ஐயையோ! எங்கள் குல சம்பத்தாகிய வில்லை ஒடித்து விட்டாயே, ஒன்று, ஒடிந்த வில்லைச் சேர்த்துக் கொடு; இல்லாவிட்டால் என் மகள் சீதையைக் கல்யாணம் பண்ணிக் கொள்" என்றார். இராமன் வேறு வழியில்லாமல் சீதையைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டியதாயிற்று!"

குந்தவி விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே, "அப்பா! நானும் இராமாயணக் கதை கேட்டிருக்கிறேன். நீங்கள் சொல்லுவது புதிய இராமாயணமாயிருக்கிறதே!" என்றாள்.

சற்றுச் சிரிப்பு அடங்கியபிறகு அவள் "ஆனால் உங்களுக்கு அதைப் பற்றிக் கவலை வேண்டாம் அப்பா! நான் கல்யாணமே செய்து கொள்ளப் போவதில்லை!" என்று சொன்னாள்.

சக்கரவர்த்தி மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டு, "அது என்ன சமாசாரம்? கல்யாணம் உன்னை என்ன பண்ணிற்று? அதன் மேல் ஏன் அவ்வளவு கோபம்?" என்று கேட்டார்.

அப்போது குந்தவி, "கல்யாணம் செய்து கொண்டால் நான் உங்களை

ஸிக்மா
செர்ரி ப்ளாஸம்
டிஸ்டெம்பர்கள்
அதிக பரப்பளவைப்
பூசுகின்றன



CHAITRA-SP-31 TAM

டிஸ்ட்ரிபியூட்டர்கள்: M/s. இண்டோகெம் லிமிடெட், ஈமாஸி பில்டிங்
52-54, ரத்தன் பஜார், சென்னை - 600 003. போன்: 37602


உடனே வாருங்கள்!
10%
சிறப்புச் சலுகை
செப்டம்பர் 30 முதல்
அளிக்கிறோம்.
ADWAVE HH 486
எல்லா பட்டு,
பருத்தி, ரெடிமேட்
ரகங்களுக்கு.
நாட்டின் பல
பாகங்களிலிருந்து
தருவிக்கப்
பட்டவை.
கண்கவர்பவை.
விஜயம் செய்யுங்கள்,
ஹேண்ட்லூம்
ஹவுஸ்
9, ரத்தன் பஜார்,
சென்னை 600 003.
ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு

விட்டுப் பிரியத்தானே வேண்டும்? உங்களை விட்டு விட்டுப் போக எனக்கு இஷ்டமில்லை. உங்களுடனேயே நான் எப்போதும் இருப்பேன்'' என்றாள்.

''அப்படியா சமாசாரம், குந்தவி? இன்னொரு தடவை சொல்'' என்றார் சக்கரவர்த்தி.

''அதெல்லாம் ஒரு தடவைக்கு மேல் சொல்ல மாட்டேன். அப்பா! நீங்கள் ஏக சந்தகிராஹி என்பது உலகமெல்லாம் பிரசித்தியா யிருக்கிறதே! ஒரு தடவைக்கு மேல் ஏன் கேட்கிறீர்கள்?''

''ஏ ஆபத்பாந்தவா! அநாத ரட்சகா! இந்த வாயாடிப் பெண்ணைக் கட்டிக்கொண்டு எந்த இராஜ குமாரன் திண்டாடப் போகிறானோ? யார் தலையில் அவ்வித மிருக்கிறதோ அவனை நீதான் காப்பாற்றி யருள வேண்டும்!'' என்று சொல்லியபடி சக்கரவர்த்தி தலைமேல் கைகூப்பி வானத்தை அண்ணாந்து நோக்கினார்.

''உங்களுடைய பரிகாசம் இருக்கட்டும். இப்போது யானையை நிறுத்துகிறீர்களா, இல்லையா? இல்லாவிடில் நான் கீழே குதித்து விட்டேனானால் அப்புறம் என்னை ஒரு ராஜ குமாரனும் கல்யாணம்செய்து கொள்ள மாட்டான். எப்போதும் உங்கள் பிராணனைத்தான் வாங்கிக் கொண்டிருப்பேன்'' என்று குந்தவி சொல்லி எழுந்து நின்று அம்பாரியிலிருந்து கீழே குதிப்பது போல் பாசாங்கு செய்தாள்.

''வேண்டாம், வேண்டாம்! அப்படிப்பட்ட விபரீதம் பண்ணி வைக்காதே!'' என்று கூறி, பல்லவ சக்கரவர்த்தி யானைப் பாகனைக் கூப்பிட்டு யானையை நிறுத்தச் சொன்னார்.

யானை நின்றதும், தந்தையும் மகளும் கீழே இறங்கினார்கள். சக்கரவர்த்தி குதிரையும், பல்லக்கும் கொண்டு வரும்படி சமிக்ஞை காட்டினார். அவை அருகில் வந்ததும், பரிவாரத் தலைவனை அழைத்து, ''நீங்கள் நேரே போய் நகர் வாசலில் நில்லுங்கள். நாங்கள் அங்கே வந்து சேர்ந்து கொள்கிறோம்'' என்றார். பிறகு குதிரை மீது ஆரோகணித்து, இராஜ மார்க்கத்திலிருந்து பிரிந்து, குறுக்கு வழியாகப் போகத் தொடங்கினார். இளவரசி ஏறியிருந்த பல்லக்கும் அவரைத் தொடர்ந்து சென்றது.

சக்கரவர்த்தி இம்மாதிரி யெல்லாம் எதிர்பாராத காரியங்களைச் செய்வது சர்வசகஜமாய்ப் போயிருந்தபடியால், அவரைத் தொடர்ந்து வந்த பரிவாரங்கள் சிறிதும் வியப்பு அடையாமல் இராஜமார்க்கத்தோடு மேலே சென்றன. (தொடரும்)

அளவுக்கு மிஞ்சிய உயரம்

இந்த மனிதர் பெயர் கிரிஸ்டாபர் கிரீபர். இவர் இங்கிலாந்திலேயே உயரமான மனிதர் - உயரம் ஒன்பது அடி நாலே முக்கால் அங்குலம். இப்படி உயரமாக இருப்பதால் இவருக்கு இடைஞ்சல்கள்தான் அதிகம். முதல் கஷ்டம் இவருக்குத் தகுந்த உயரத்தில் மனைவி கிடைக்க மாட்டாள். குறைந்த பட்சம் ஆறரை அடி உயரமுள்ள பெண்ணாவது வேண்டும். டெலிபோன் பூத்தில் இவர் வெளியே நின்று கொண்டுதான் பேசவேண்டும். பஸ்ஸில் நின்று கொண்டு பிரயாணம் செய்ய முடியாது. ஹோட்டல்களில் தங்க முடியாது. கட்டில் நீளம் போதாது. தரையில்தான் படுக்க வேண்டும். நினைத்தால் ரெடிமேட் சட்டை வாங்கி அணிந்து கொள்ள முடியாது. இவர் தனியாக ஒரு சைக்கிள் செய்து வைத்திருக்கிறார். சினிமாவில் உட்கார்ந்தால் பின்னால் உள்ளவர் மறைக்கிறது என்று கத்துவார். இவர் தம் உயரத்துக்கு ஏற்ற ஆட்டமான கூடைப் பந்து விளையாட ஆரம்பித்தார். இப்பொழுது இவர் இந்த ஆட்டத்தில் இங்கிலாந்துக்காக உலகப் பந்தயங்களில் கலந்து கொள்கிறார். -பாபு-விக்னேஷ்



தன் காலே தனக்குதவி!

மகாராஷ்டிராவில் உள்ள வதூஜ் என்ற நகரில் ஒரு குரங்கு மரத்திலிருந்து கீழே விழுந்து அதன் கால் எலும்பு முறிந்து விட்டது. உடனே அது மெல்ல மெல்லத் தவழ்ந்து நகரத்திலுள்ள மிருக வைத்திய சாலைக்குச் சென்றது. அங்கு டாக்டர்கள் அதை 'அட்மிட்' செய்து கொண்டு காலுக்கு பிளாஸ்டர் போட்டுக் கட்டினார்கள்!
-இந்தியன்எக்ஸ்பிரஸ்
- சரோஜா ராமச் சந்திரன்

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தி சஞ்சீவி


குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விபரம் !

ஊர்	தேதி	நேரம்	தங்கும் இடம்
தாராபுரம்	2	காலை 9-00 -- 10-00	Dr. K. R. கோபாலன், முருகன் ஸ்டோர்ஸ், சர்ச் ரோடு.
பழனி	2	காலை 11-00 -- 12-00	ஜெயா மெடிகல் மார்ட்
உடுமலைப்பேட்டை	2	மாலை 3-00 -- 4-00	ராஜேந்திரா அண்டு கோ., கடை வீதி
பொள்ளாச்சி	2	மாலை 5-00 -- 6-00	தி எம்பயர் பார்மஸி.
கோயமுத்தூர்	3	காலை 9-11	சீதாராம் லாட்ஜ், ஸ்டேட் பாங்க் ரோடு,
,,	3	மாலை 3 - 7	ரெயில்வே ஸ்டேஷன் எதிர்புறம்
சத்தியமங்கலம்	4	காலை 8-00 -- 9-00	C. R. K. மெடிகல்ஸ், கடை வீதி.
கோபி	4	காலை 10-00 -- 11-00	ஸ்ரீனிவாஸா டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட், 56,
பவானி	4	மாலை 2-00 -- 3-00	M. L. செட்டியார் அண்டு சன்ஸ், கடை வீதி.
மேட்டூர் அணை	4	மாலை 4-30 -- 5-30	ஸ்ரீ ராமன் லாட்ஜ்.
ஈரோடு	5	காலை 9-00 -- 11-00	ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ்.
திருப்பூர்	5	மாலை 4-00 -- 5-30	P. R. மணியம் ஸ்டோர்ஸ், பல்லடம் ரோடு.
திருச்சி	6	காலை 11-00 to மாலை 6-00	திருச்சி ஆயுர்வேதிக் யூனியன், சின்னக் கடைத் தெரு.
தஞ்சாவூர்	7	காலை 7-00 -- 9-00	Dr. S. வெங்கடராஜன் வைத்தியசாலை, சுகாநாயக்கன் தெரு.
கும்பகோணம்	7, 17,27	காலை 10-00 to மாலை 5-00	ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை பிராஞ்சு, 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு.
சீர்காழி	8	காலை 7-00 -- 8-00	பிரம்ம வித்யா ஆயுர்வேத வைத்தியசாலை, நாளாடன் சன்னதி
மாயூரம்	8	காலை 9-30 -- 12-00	ஸ்ரீ வெங்கடேசா மெடிகல் ஹால், பட்டமங்கலம் தெரு.
நாகப்பட்டினம்	8	மாலை 5-00 -- 6-00	நாகை மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
திருவாரூர்	9	காலை 7-30 -- 9-00	தன்வந்திரி மெடிகல் ஹால், 21, மடப்புரம் பாட்டை.
விஜயபுரம்	9	காலை 10-00 -- 11-00	சகுந்தலா பார்மஸி, நாகை ரோடு.
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2-00 -- 3-30	ஸ்ரீ T. V. சந்திரசேகரம் பிள்ளை, கடை வீதி.
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 -- 6-30	கோபால் விலாஸ், பெரிய தெரு.
புதுக்கோட்டை	10	காலை 8-00 -- 10-00	நியூ லக்ஷ்மி டிஸ்பென்ஸரி, கீழ ராஜவீதி.
தேவகோட்டை	10	மாலை 2-30 -- 3-30	ஸ்ரீ சோமசுந்தரம் மெடிகல் ஸ்டோர்ஸ், ஆர்ச் ரோடு
காரைக்குடி	10	மாலை 4-30 -- 6-00	நியூ கௌரி லாட்ஜ், மகர் நோம்பு அக்ரஹாரம்.
சிவகெங்கை	11	காலை 8-30 -- 10-00	கௌரி அண்டு கோ., கடை வீதி.
மதுரை	11	காலை 11-00-12-30	T. N. சொக்கலிங்கம் பிள்ளை சன்ஸ்,
,,	11	மாலை 3-00- 6-00	வடக்கு சித்திரை வீதி.

குறிப்பு : பிரதி இங்கிலீஷ் மாதம் 10, 25 தேதிகளில் மாலை 4 முதல் 6 மணி வரை எமது வைத்தியர் மயூர வைத்தியசாலை B-11, 1வது கிராஸ், தில்லை நகர், திருச்சி என்ற விலாசத்தில் முகாம் செய்கிறார்.

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை, கரூர் (போன் : 87)
திருச்சி ஜில்லா



அத்தியாயம் 49

தப்பியோடிய கைதி

அமரர் **கல்கி**

'நமக்குத் துன்பம் நேரும்போதெல்லாம் நம்மைவிட அதிகத் துயரத்தில் ஆழ்ந்திருப் போரைப் பற்றிச் சில கணங்கள் நினைத்துப் பார்த்தால் போதும், நாம் எவ்வளவு பாக்கியசாலிகள் என்பது உடனே புரியும். இவ்விதம் எண்ணாமல் நமது துயரம்தான் உலகிலேயே மிகப் பெரிது என்பதாகக் கருதிக் கொண்டு அதைப் பொறுக்கவோ சகிக்கவோ திராணியின்றி உயிரை மாய்த்துக் கொள்ள முற்படுவது எவ்வளவு அபத்தம் ?' – வேதனையுடன் முனகிக் கொண்டிருந்த அந்த வாலிபனைப் பார்த்ததும் இவ்வாறு நினைத்தாள் கமலா.

அவள் அருகில் அமர்ந்து, " நீ யார் ? எப்படி இவ்வளவு பலமான காயம் பட்டது உனக்கு ? ஒரு டாக்டரைத் தேடிப் போகாமல் ஏன் இங்கே முனகியபடி படுத்திருக்கிறாய் ?" என்றெல்லாம் வினவினாள்.

" நீ யார் ? அதை முதலில் சொல்லு " என்றான் அந்த வாலிபன் ஈனசுவரத்தில். "உன்னை நான் நம்பலாமா என்பது முதலில் எனக்குத் தெரிய வேண்டும்."

"பேஷாக நம்பலாம். ஏனென்றால் நானும் உன்னைப் போல் மரணத்தின் வாயிலில் நிற்பவள்தான். அதோ அந்த மொட்டைப் பாறையிலிருந்து பள்ளத்தாக்கில் குதிக்க விருந்த என்னை உன்னுடைய முனகல் சத்தம் தான் தடுத்து நிறுத்தியது !"

" எதற்காக அப்படி ஒரு கோரமான முடிவைத் தேடிக் கொள்ள எண்ணினாய், பெண்ணே ?"

"எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது!"

அவன் வேதனையையும் மறந்து புன்னகை புரிந்தான். " வாழ்க்கையில் வெறுப்பா ? அப்படி என்ன பெரிதாகத் துன்பம் அனுபவித்துவிட்டாய் நீ ? இதோ, என்னைப் பார் ! நாலு வருஷங்கள் சிறைக் கைதியாகப் படாத பாடுபட்டேன். சுதந்திர ஆர்வத்தால் தப்பித்துக் கொண்டும் வந்தேன். சதா ஸி. ஐ.டி.களால் பின் துரத்தப்பட்டு ஓடுகிறேன். இதைவிட உன் துன்பங்கள் பெரிதா? என் தோளில் ஒரு ஸி. ஐ.டி.யின் துப்பாக்கி குண்டு பாய்ந்து அடிபட்டு ரத்தமிழந்து தவிக்கும் போதுகூட எனக்கு உயிரின் மேல் ஆசை விடவில்லையே !"

" நீ என்ன திருடனா ? எதற்குச் சிறை சென்றாய் ? ஏன் தப்பித்து ஓடி வந்தாய் ?"

"பெண்ணே, அதெல்லாம் பெரிய கதை. கூற எனக்குச் சக்தியில்லை."

"வேண்டாம், வேண்டாம் ! நீ பேசவே வேண்டாம் !" என்று பயந்து பதறினாள் கமலா.

"பெண்ணே, பிறருக்கு உபகாரம் பண்ணக் கற்றுக் கொள். வாழ்க்கையில் துன்பங்கள் எல்லாம் மறைந்து இதயத்தில் மகிழ்ச்சி நிரம்ப அதுதான் வழி!"

"சரி, அப்படியே செய்கிறேன். உன்னால் நான் அடைந்த விவேகத்தை முதலில் உனக்கே பயன்படுத்துகிறேன். உனக்கு உதவ ஓடிப் போய் ஒரு டாக்டரை அழைத்து வருகிறேன்."

அவன் முகத்தில் கலவரம் தோன்றியது. "கூடவே கூடாது ! டாக்டர் வந்து என்னைப் பரிசோதித்தால் முதலில் போலீசுக்குத்தான் தகவல் தெரிவிப்பார்."

" பின்னே, டாக்டரை அழைக்காமல் இருந்துவிட்டால் நீ சாகத்தான் போகிறாய். எம தூதர்களா, அல்லது போலீஸா ? இருவரில் யார் தேவலாம் என்பதை நீதான் தீர்மானிக்க வேண்டும். உனக்குத்தான் இது விஷயங்களில் அனுபவம் அதிகமாயிருக்கிறது !"

"பெண்ணே வலி, என் தோளைக் கடப்பாறையால் தாக்குவது போல் வேதனை தரவில்லையானால் நான் உன் பேச்சை ரசித்துச் சிரிப்பேன்."

" நான் பேசவும் வேண்டாம் ; நீ ரசிக்கவும் வேண்டாம் ! நான் என்ன செய்யட்டும் ? உனக்கு எப்படி உதவட்டும் ? அதைச் சொன்னால் போதும்."

"என்னைக் காட்டிக் கொடுக்க மாட்டாயல்லவா ?"

"சத்தியமாகத் துரோகம் பண்ணமாட்டேன். தெய்வமே, நம் இருவரையும் இங்கே ஒரே சமயத்தில் ஒருவருக்கு ஒருவர் உதவ அனுப்பியதாய் எண்ணுகிறேன். இல்லாத போனால் அத்தனை நேரம் நினைவிழந்து கிடந்த நீ, நான் பாறையிலிருந்து விழப் போன தருணத்தில் மயக்கம் தெளிந்து முனகி என் கவனத்தைக் கவருவானேன்? சொல்லு! நான் என்ன செய்யட்டும்?"

"பெண்ணே! நீ எந்த ஊரைச் சேர்ந்தவள்? ராமப்பட்டணமா?"

"அங்கேதான் இப்போது குடியிருக்கிறோம்."

"அந்த ஊரில் பவானி என்று ஒரு பெண் வக்கீல் இருக்கிறாளாமே, தெரியுமா?"

கமலா அளவிட முடியாத ஆச்சரியத்துடன், "ஆமாம், நன்றாகத் தெரியுமே, பவானி அக்காவை!" என்றாள்.

"அக்கா என்று அழைக்கும் அளவு சிநேகமா?" என்று கேட்ட அந்த வாலிபனின் முகம் மலர்ந்தது. இந்தப் பெண் தன்னைக் காட்டிக் கொடுக்கமாட்டாள் என்ற உறுதியும் பிறந்தது.

"அவளிடம் போய், 'உனக்கு உமாகாந்தனை நினைவிருக்கிறதா?' என்று கேள். 'நினைவிருக்கிறது' என்று அவள் சொன்னால், 'அவன் ஒரு நிமிஷம் உன்னைப் பார்க்க விரும்புகிறான்' என்று கூறி இங்கே அழைத்து வா. ஆனால் யாருக்கும் தெரியவே கூடாது விஷயம்!"

"பவானி உனக்கு உறவா?"

"இதுவரை இல்லை" என்று சோகப் புன்னகை புரிந்தான் உமாகாந்தன். "சிநேகம் தான். நாங்கள் இருவரும் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். இன்னும் ஒரு மணி நேரத்தில் அவள் உன்னுடன் இங்கே வரவில்லை என்றால் என்னைப் பார்க்க அவளுக்கு விருப்பம் இல்லை என்று புரிந்து கொண்டு என் வழியே போவேன்" என்று கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

"ஒரு வழியும் போக வேண்டாம். இங்கேயே இரு. அக்காவைக் கண்டிப்பாக அழைத்து வருகிறேன்."

"பவானியை வற்புறுத்த வேண்டாம், நீ" என்றான் உமாகாந்தன். "என்ன இருந்தாலும் நான் சிறைவாசம் செய்தவன் அல்லவா?" என்ற போது அவன் விழிகளில் அத்தனை உடல் வேதனையிலும் தோன்றாத கண்ணீர் தளும்பி நின்றது.

"இல்லை, இல்லை! பவானி அக்கா அப்படி ஒரு நாளும் நினைக்கவேமாட்டாள். இந்தப் பக்கம் தப்பி ஓடிய கைதி ஒருவன் மலைய வருவதாகவும் ஸி.ஐ.டிகள் அவனைத் தேடுவதாகவும் கேள்விப்பட்டு அக்காவே என்னிடம் கூறியிருக்கிறாள். அது மட்டுமில்லை; ஒரு வேளை அக்கைதியை நான் காண நேர்ந்தால் உடனே தன்னிடம் வந்து தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும், வக்கீல் என்ற முறையில் தன்னால் இயன்ற உதவியைச் செய்யப் போவதாகவும் சொன்னாள். அதனால் நான் போய்ச் சொன்ன உடனே அவள் ஓடோடி வருவாள். ஆனால் ஒன்று, வக்கீல் என்ற முறையில் மட்டும் அவள் உனக்கு உதவப் போவதாக நான் கருதவில்லை. இன்னுயிர்க் காதலி என்ற உரிமையோடும் உதவப் போவதாக எண்ணுகிறேன். என்ன, நான் சொல்வது சரிதானா?"

உமாகாந்தன் பலவீனமாகப் புன்னகை புரிந்து கண் சிமிட்டினான். பிறகு பேசவும் சக்தி இழந்தவனாய் இமைகளை மூடிக் கொண்டான்.


கமலா அவன் அருகே குனிந்து, "கொஞ்சம் தாமதமானாலும் கவலைப்படாதே, தைரியமாக இரு!" என்று கூறிவிட்டு மலைப் பாதையை நாலே எட்டில் அடைந்து ஓட்டமும் நடையுமாகக் கீழே இறங்க ஆரம்பித்தாள். பஸ் வரத் தாமதமானால் வேறு யாராவது காரிலோ அல்லது மோட்டார் சைக்கிளிலோ அந்தப் பக்கமாக வரமாட்டார்களா? ராமப்பட்டணம் வரை தன்னை ஏற்றிக் கொண்டு போகமாட்டார்களா?" என்று ஏங்கினாள். அதே சமயம் தன் அவசரத்துக்கு அவர்களிடம் என்ன காரணம் கூறுவது என்றும் குழம்பினாள்.

நல்ல வேளையாக அவளை அதிகம் தவிக்க விடாமல் பஸ் ஒன்று இறக்கத்தில் வந்தது. அதிர்ஷ்டவசமாக அதில் இடமிருந்து அவள் ஏறிக் கொள்ளவும் முடிந்தது.

அத்தியாயம் 50

பவானியின் காதலன்

உமாகாந்தனுக்குத் தோளில் மருந்து வைத்துக் கட்டுப் போட்டு விட்டு நிமிர்ந்த டாக்டர், பவானியைத் திரும்பிப் பார்த்துப் புன்னகை புரிந்தார். "உயிருக்கு ஆபத்து இல்லை" என்றார்.



''என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள்'' என்று கூறிப் பவானி விழியோரம் துளிர்த்திருந்த கண்ணீரை நடு விர லால் துடைத்துக் கொண்டாள்.


''ஓய்வு தேவை; ஒரு வாரம் பத்து நாட்கள் ஆகும் உடம்பு நடமாடுகிற அளவில் தெம்பு பெற. ஏராளமாய் இரத்தம் இழந்திருக்கிறான் அல்லவா?'' என்றார் டாக்டர்.


''ரொம்ப தாங்ஸ்'' என்ற பவானி, தன் கைப் பையைத் திறந்து அதிலிருந்து ஒரு மணிபர்ஸை எடுத்தாள்.

''இருக்கட்டும். ஃபீஸ் ஒன்றும் இப்போ தேவையில்லை'' என்றார் டாக்டர். ''நாளைக்குப் போலீசார் என் மீது வழக் குத் தொடுத்தால் நீங்கள் என் சார்பில் வந்து இலவசமாக வாதாடுங்கள், போதும்.''

பவானி புரியாதது போல் நடித்து. ''கேஸா, உங்கள் மீதா? எதற்கு?'' என்றாள்.

டாக்டர் சிரித்தார். ''பவானி! எனக்கு வயது நாற் பத்தைந்து ஆகிறது. இருபத்திரண்டு வருஷங்களாக பிராக்டிஸ் பண்ணுகிறேன். கல் குத்தியதால் ஏற்பட்ட காயத்துக்கும் துப்பாக்கி தோட்டா கிழித்துச் சென்ற காயத்துக்கும் வித்தி யாசம் தெரியாமல் போகுமா? மலைச் சரி வில் சறுக்கி விழுந்து கூரிய பாறை குத்திக் காயம் பட்டு விட் டது இவனுக்கு என் கிறாய். இவன் யார்? திடுமென்று ராமப் பட்டணத்தில் எப் படி முளைத்தான்? உனக்கு எவ்வாறு சிநேகமானான்? கம லாவும் நீயும் இவனு





ஹிந்தி புத்தக மலை !

மத்தியப் பிரதேச ஹிந்தி புத்தக அகாதெமி 1971 முதல் 1974 வரை மொத்தம் 3,61,000 நூல்களை வெளியிட்டது. இவற்றில் 2,80,000 புத்தகங்கள் விற்கவில்லை. மலையாகக் குவிந்து கிடக்கின்றன. இலவச விநியோகம் 13,000. பாக்கியே விற்பனை.

—ஹிந்துஸ்தான் டைம்ஸ்

மாக ஏலமலைச் சரிவில் எதற்காக ஏறிப் போக வேண்டும்? அங்கே இவன் எதற்காக விழுந்து தொலைக்க வேண்டும்? அப்படியே விழுந்து தொலைத்தாலும் இயற்கையான விதத்தில் தலையிலோ முழங்கை முழங்காலிலோ அடிபட்டிருக்கக் கூடாதா? வலது தோளில் சற்றும் பொருந்தாத விதமாக எதற்கு அடிபட்டுக் கொள்ள வேண்டும்? பவானி! இதையெல்லாம் கேட்க வக்கீலுக்குப் படிக்க வேண்டியதில்லை. டாக்டருக்குக் கூட எழக் கூடிய சந்தேகங்கள்தாம்.''

பவானி, ''டாக்டர் ... வந்து...'' என்று ஏதோ கூற ஆரம்பித்தாள். அவள் மேலே பேசுவதற்கு முன் அவர் உள்ளங்கையை உயர்த்திக் காட்டி நிறுத்தச் சொன்னார்.

''இதோ பார்! நான் கேள்வியும் கேட்க வேண்டாம்; நீ பதிலும் கூற வேண்டாம்! அது மேலும் மேலும் என்னை இந்தக் கேஸில் சிக்க வைத்துப்போலீஸாரின் அதிருப்தியையும் சம்பாதித்துத் தரும்! பவானி! நான் போலீஸுக்கு உடனே தகவல் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நியாயமாக அவர்களிடம் சொல்லாமல் நான் இவனுக்குச் சிகிச்சை செய்ய ஆரம்பித்ததே தவறு. ஆனால் இந்த ஊரில் அநேகமாக எல்லாருமே பவானியிடம் உள்ள ஒரு வசீகர சக்திக்கு அடிமையாவது போல் நானும் வசப்பட்டிருக்கிறேன். அதனால்தான் உன் கோரிக்கைக்கு இணங்கினேன். இங்கு நான் வந்து போனதை நான் யாருக்கும் சொல்ல மாட்டேன்; நீயும் மறந்துவிடு. இல்லாத போனால் எனக்கு மட்டுமில்லை. உன் பராமரிப்பில் உள்ள இவனுக்கும் ஆபத்து.

''ஜுரம் வரும் இவனுக்கு. நூற்றிரண்டுக்கு மேல் போனால் இந்த முதல் மருந்தைக் கொடுத்துக் குறைக்க வேண்டும். இரண்டாவது மருந்தை நாளைக்கு மூன்று வேளை ஒரு வாரத்துக்குச் சாப்பிட வேண்டும்.''

''ஆகட்டும் டாக்டர்'' என்றாள் பவானி. ''பூர்வ ஜன்ம பூஜாப் பலனாகத்தான் எனக்குக் கமலாவும் நீங்களும் ஆபத்பாந்தவர்களாக உதவ வந்தீர்கள்.'' மேலே பேச முடியாமல் அவளுக்குத் தொண்டையை அடைத்தது.

அவர் அப்பால் போனதும் அதுவரை அடக்கி வைத்திருந்த துக்கமெல்லாம் பீறிட்டு எழ, அவள் உமாகாந்தின் கட்டிலருகே மண்டியிட்டு அமர்ந்து தலையணையில் அவன் முகத்துக்கு அருகே தன் வதனத்தையும் வைத்துக் கொண்டு விம்மி விம்மி அழலானாள்.

கமலா பதறிக் கொண்டு தன்னைத் தேடி வந்தது, அவள் கூறியதைக் கேட்டுத் தான் துடிதுடித்தது, அவசரம் அவசரமாகக் காரை ஓட்டிக் கொண்டு சென்றது, அரை மயக்க நிலையில் இருந்த உமாகாந்தை இருவருமாக இருபுறமும் தாங்கிக் கொண்டு மெல்ல நடத்திக் காருக்கு அழைத்து வந்தது, காரில் படுக்க வைத்தது, பிறகு வீடு சேர்ந்ததும் மாமா குணசேகரன் உதவியுடன் உமாகாந்தை மாடிக்குத் தூக்கிச் சென்றது, தன் அறையில் தன் கட்டிலிலேயே அவனைப் படுக்க வைத்தது, அங்கே அவன் நினைவிழந்து மூர்ச்சையானதும் உள்ளமெல்லாம் பதற, ஊனெல்லாம் நெக்குருக டாக்டருக்கு ஃபோன் செய்தது, அவர் வந்து பார்த்து விட்டுத் திரும்பியது எல்லாம் கனவில் நடந்தவை போலிருந்தன. ஆனால் அவை கனவல்ல, உண்மையே என்பதற்குச் சாட்சியமாய் உமாகாந்தன் அவள் படுக்கையிலேயே சயனித்திருந்தான். 'எப்படி இருந்த செழுமையான மேனி எப்படி உருத் தெரியாமல் மெலிந்து வாடியிருக்கிறது? எப்படி இருந்த சிவந்த எழில் வதனம் இன்று வெளிறிக் கிடக்கிறது!'

அந்த வினாடி வரையில் கடமையில் கண்ணும் கருத்துமாயிருந்த பவானி இனி செய்ய ஒன்றுமில்லை. உமாகாந்தன் கண் விழிக்கக் கடவுளைப் பிரார்த்தித்தப்படி காத்திருக்க வேண்டியதுதான் என்ற நிலையில் கண்ணீர் பெருகுவதற்கு இடம் அளித்தாள். அது கரை உடைத்துப் பொங்கியது.

கமலா அவளை நெருங்கி, மெல்ல அவள் தோளில் கரம் வைத்தாள்.

''இல்லை கமலா! என்னைச் சமாதானப் படுத்த முயலாதே! அழ விடு. இது நாலு வருஷங்களாக நான் தேக்கி வைத்திருக்கும் பிரிவுத் துயர்'' என்றாள் பவானி.

''அதுதான் வந்து விட்டாரே அக்கா!''

''ஆமாம். வந்துதான் விட்டார் கமலா. நாலு ஆண்டுகளுக்குப் பிறகு ஞாபமாக என்னைத் தேடிக் கொண்டு வந்தவர் எப்படி வந்து சேர்ந்திருக்கிறார் பார்த்தாயா? ஸி.ஐ.டிகளால் துரத்தப்பட்டு, வெய்யிலில் காய்ந்து, மழையில் நனைந்து, நாயாக அலைந்து, - மறைந்து திரிந்து, மெலிந்து தேய்ந்து, கடைசியில் அவர்கள் துப்பாக்கிக் குண்டின் தாக்குதலுக்கும் ஆளாகி, ஓடி ஒளிந்து, ரத்தமிழந்து, வெளிறி மயங்கிய நிலையில் எனக்குத் திரும்பிக் கிடைத்திருக்கிறார் கமலா! அப்போதும்கூட



"புத்தனைப் போற்றும் அபிராமம்"

கமுதி அருகே புள்ள அபிராமம் என்னும் சிறிய ஊரில் பெருமாள் கோவிலின் உட்புறத்தில் உள்ள மண்டபத்தினுள்ளே புத்தரின் பளிங்குச் சிலை உள்ளது. சுவாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் புத்தரையும் வணங்கிப் புஷ்பாஞ்சலி செய்த பின்பே அருகில் உள்ள நவக்கிரக மண்டபத்தில் பிரார்த்தனை செய்யச் செல்கின்றனர்.

- இரா. கண்ணபிரான்



dCA/GL/40 M TAM.


ஒளிசிந்தும்
விழிகளிலே
வியப்போ—
சாந்தி சில்க்
படைப்புகளின்
புதுமை கண்டு !
பட்டுச் சேலைகள்
பட்டுப் பாவாடைகள்
நவீன மில்துணி
வகைகள்
நயமுடைய
கைத்தறி
ரகங்கள்
கலை நயமுடையவை
விலை நியாயமானது
நீடித்து உழைப்பது
நிறைவு தருவது
மயிலாப்பூர்
சாந்தி சில்க்
எம்போரியம்
SHANTHI SILK EMPORIUM
5, சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை 4
போன் 74403 ஞாயிறு கடை உண்டு.
RAJATHI-SS 151
இலவசப் பரிசு: எமது விற்பனை ஊக்கத் திட்டத்தில் சேர்ந்து பரிசும் பயனும் பெறுங்கள்

எத்தனை களையாக இருக்கிறது பார்த்தாயா, இவர் முகம்!'' என்ற பவானி உமாகாந்தின் கன்னங்களை மெல்ல வருடினாள். தொடர்ந்து கண்ணீரைப் பெருக்கி விசித்து விசித்து அழுதாள்.

சற்றுநேரம் பொறுத்துக் கமலா, ''அக்கா! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களை இந்த நிலையில் விட்டு விட்டுப் போக எனக்கு மனமில்லை. ஆனால் எனக்கு ரொம்ப நேரமாகிறது. 'தீப்பெட்டி வாங்கி வருதாகக் கூறிப் புறப்பட்ட பெண் என்ன ஆனாள், எங்கே போனாள்?' என்று புரியாமல் அம்மா என்னைச் சபித்துக் கொண்டிருப்பாள். எனக்குச் சீக்கிரம் வீடு திரும்ப வேண்டும். வரட்டுமா?''

''நானும் வருகிறேன் கமலா. உன்னைக் காரில் வீட்டில் இறக்கி விட்டு விட்டு வந்து விடுகிறேன்.''

''வேண்டாம் அக்கா! இவரைக் கவனித்துக் கொள்ள வேண்டியது உங்கள் முதல் பொறுப்பு. நான் போய்க் கொள்கிறேன்.''

''இவரை எனக்குத் தேடித் தந்த உன்னைக் கவனித்துக் கொள்வதும் என் பொறுப்புத்தான். மாமா இவரைச் சற்று நேரம் பார்த்துக் கொள்வார். மேலும் இவருக்கு நான் மருந்து வாங்கி வரவும் வேண்டும். வா, போகலாம்'' என்ற பவானி முகத்தைத் துடைத்துக் கொண்டு வீட்டிலிருந்த பிரிக்கப் படாத இரு நெருப்புப் பெட்டிகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

கமலாவின் வீட்டை அடைவதற்கு முன்பு உமாகாந்த் பற்றிய ரகசியத்தைக் காப்பதாக அவளிடம் உறுதி மொழி பெற்றுக் கொண்டாள் பவானி. அவ்வாறே வாக்களித்த கமலா, ''அக்கா! இந்தப் பக்கம் தப்பி யோடிய கைதி உலவுவதாகவும் ஸி.ஐ.டி.கள் அவனைத் தேடுவதாகவும் பேச்சு வந்த போது, 'சட்டரீதியாக அந்தக் கைதிக்கு உதவ முடியுமா என்று பார்ப்பேன்' என்று தான் சொன்னீர்களே யொழிய அந்தக் கைதி உங்கள் காதலனாகவும் இருக்கக் கூடும் என்பதாகப் பிரஸ்தாபிக்கவே யில்லையே? அப்படி நீங்கள் சந்தேகித்ததை என்னிடம் மறைத்துத்தானே விட்டீர்கள்'' என்று ஆதங்கத்துடன் கேட்டாள்.

''உண்மைதான் கமலா. எங்கள் காதல் விவகாரம் ஒரு பெரிய கதை. ஒரு நாள் சாவகாசமாகச் சொல்கிறேன்'' என்றாள் பவானி.

''உங்கள் காதலனும் இப்படியேதான் எனக்கு வாக்களித்திருக்கிறார்! தம் தேகத்தில் சக்தி திரும்பியதும் தம்மைப் பற்றிய விவரங்களை ஆதியோடு அந்தமாக விவரிப்பதாய்க் கூறினார். அதன் பிறகுதான் உங்களை அழைத்துப் போக நான் வந்தேன்.''

''அவர் வாழ்வின் சமீப நிகழ்ச்சிகளில் எனக்கே புரியாத சில மர்மங்கள் இருக்கின்றன கமலா. கொஞ்சம் தெம்பு பெற்று அவர் அந்தப் புதிர்களை விடுவிடுக்க வேண்டும் என்றுதான் நானும் ஆவலுடன் காத்திருக்கிறேன்'' என்றாள் பவானி. (தொடரும்)

ஸ்ரீமத் ஆண்டவன் ஸ்வாமிகள் பம்பாயின் புறநகரான தோம்பிவ்லியில் ஸ்ரீ வேங்கடாசலபதிக்கு ஓர் ஆலயம் எழுப்ப உளம் கொண்டார். அதோடு தமது, ''ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் பெரியாச்ரம''த்தின் கிளை ஒன்றை இங்கே நிறுவவும் அங்கீகாரம் அளித்தார்.

ரூபாய் இரண்டரை லட்சம் செலவில் வேங்கடேசப் பெருமாள் ஆலயம், இன்னோர் இரண்டரை லட்சத்தில் அதற்கு ராஜகோபுரம், அரை லட்சம் செலவில் ஆச்ரமம், ஐந்து லட்ச ரூபாயில் கல்யாண மண்டபம், இவை அனைத்துக்குமான மனைக் கட்டுக்காக ஒரு லட்சம் என்று மொத்தம் ரூபாய் பதினொன்றரை லட்சம் சேகரம் செய்வதில் ஒரு செல்வாக்கு வாய்ந்த கமிட்டி உற்சாகமாகச் செயலாற்றி வருகிறது. சகல தர்மங்களுக்கும் மூலமான வேதத்தைப் போதிக்க ஒரு பாடசாலை தொடங்கவும் திட்டமிட்டுள்ளது.

ஒரு சதுர அடி கட்டுவதற்கான செலவு ரூ. 51, அல்லது அதன் மடங்குகள், அல்லது அவரவரால் இயன்ற திரவிய கைங்கரியம் அளித்து அடியார்கள் ஏழுமலை ஆண்டவனுடையவும் ஆண்டவன் ஸ்வாமிகளுடையவும் அருளுக்குப் பாத்திரராக வேணும். பணம் அனுப்ப வேண்டிய முகவரி:

Treasurer, Srimath Andavan Periashramam, Branch 36, Bhanu cooperative Housing society, Moulana Azad Road, Dombivli East, Thana Dist, Maharashtra. Pin 421201



தலைநகரில்

ராஜாஜி சிலைக்கு நிதி

(9-9-76 முதல் 24-9-76 வரை நிதி வழங்கியவர் பட்டியல்)


8–9–76 வரை வசூல்	2458 00
ஆர். ரகுநாதன், மீஞ்சூர்	5 00
விச்வநாதய்யர் தர்மம், மதுரை	5 00
ஸ்ரீமதி லக்ஷ்மிசபேசன், ஷோலாப்பூர்	5 00
கே. என். எஸ். மணி, பெங்களூர்	31 00
ஏ. ஆர். எஸ். ரத்னம், பம்பாய்	11 00
வி. ஆர். கிருஷ்ணன் (கல்கி ஏஜண்ட்) அலஹாபாத்	10 00
ஸ்ரீமதி ஸ்ரீநிவாஸம்மாள், பெங்களூர்	5 00
என். சுந்தரேசன், திருச்சி	5 00
ஆர். எஸ். ராகவன், சென்னை சிவில் ஏவியேஷன் காலனி	10 00
டி. ஆர். கோவிந்தராஜன் ,,	10 00
ரா. கிருஷ்ணமூர்த்தி, பூனா	25 00
ஆ. ப. லோகநாதன், ,,	5 00
கே. பொன்னுசாமி, ,,	5 00
கே. ஸ்ரீநிவாஸன், மேட்டூர் அணை	5 00
ஸ்ரீமதி கல்யாணி, ,,	5 00
வாலாஜா சுந்தரவரதன், குன்னத்தூர்	10 00
ஜி. சுப்பிரமணியன், அகில இந்திய அணுவிரத சமிதி, புதுதில்லி	5 00
டி. பாலசுப்பிரமணியன், அகோலா	50 00
ரா. ஜகதீசன், நஞ்சைப்புகளூர்	5 00
கே. வி. கிருஷ்ண அய்யர், நாமக்கல்	5 00
உஷா ரங்கராஜன், ஷெனாய்நகர்	10 00
எஸ். ஹரிஹரன், பனியபால்	7 00
எஸ். ஜகந்நாதன், ரூர்க்கேலா	7 00
எஸ். கீதா, சென்னை	5 00
ஆர். செங்கமலம்மாள், வெண்ணாற்றங்கரை	10 00
செல்வி என். செல்லம்மாள், பம்பாய்	5 00
ஏ. ரங்கநாதய்யர், அம்பகரத்தூர்	5 00
ஏ. எம். ராம், கல்கத்தா	25 00
எம். ஆர். வி. பிரகாஷ், தும்கூர்	5 00
டி. எஸ். கிருஷ்ணமாச்சார், பெங்களூர்	5 00
எம். சுப்பிரமணியம், தார்வார்	5 00
ஈ. எஸ். சந்திரா, சேத்துப்பட்டு	20 00
பத்ரி நாராயணன் ,,	101 00
ஆர். கே. ராமசுப்பிரமணியன், ஜெகத் நகர்	10 00
ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்திரன், தியாகராய நகர்	25 00
கே. விவேகாநந்தன், மயிலாப்பூர்	5 00
ஜி. கிருஷ்ணமூர்த்தி, மயிலாப்பூர்	5 00
என். எஸ். நடராஜன், போபால்	20 00
வனிதாமுருகன், நிலக்கோட்டை	10 00
ஜி. நாகராஜன், குரோம்பேட்டை	5 00
க. சங்கரசுப்பிரமணியன், இராயப்பேட்டை	11 00
எஸ். ராமச்சந்திரன், சாத்தனூர்	5 00
கே. எஸ். அய்யர், பம்பாய்	10 00
டி. கணேஷ் பிஸ்கட் ஸ்டால், திருவள்ளூர்	5 00
ஏ. நந்தகுமார், 5வது எம்.பி.பி.எஸ்.	5 00
வி. வரதராஜன், மேற்கு மாம்பலம்	11 00
கே.ஒ.எஸ். நாகராஜன், மதுரை	12 00
நவரஸா (சங்கீத சபா) சென்னை	101 00
ஏ. எஸ். ராமஸ்வாமி, ஆத்திக்கோட்டை	5 00
கே. வி. கே. வர்மா, பம்பாய்	22 00
சி. ஆர். ஆனந்தராவ், பெங்களூர்	25 00
ஆர். ரஞ்சிதம், மாநுமதுரை	5 00
வி. ஜெயலக்ஷ்மி, குரோம்பேட்டை	10 00
சித்தாந்தசிகாமணி கா. வடிவேலாயுதம் கிழக்கு தாம்பரம்	10 00
ஆர். தேசிகாச்சாரி, பம்பாய்	51 00
சி. சாவித்திரி, லக்ஷ்மணபுரி	10 00
பி. சுரேஷ், பி. லீலாவதி, புதுதில்லி	10 00
டாக்டர் டி. ஆர். வெங்கடநரசிம்ஹா, தர்மபுரி	10 00
ஆர். கிருஷ்ணன், பம்பாய்	10 00
கே. எஸ். முத்துசாமி, சின்னராமசாமி காரமடை	5 00
டாக்டர் (ஸ்ரீமதி) எல். எம். ராதா சங்கர், கொலக்கம்பை	10 00
குமாரி எம். லலிதா திருவொற்றியூர்	5 00
குமாரி எம். ராகினி, ,,	5 00
ஆர். ஸ்ரீனிவாசன், முசிறி	5 00
ஸ்ரீமதி வஸந்தா கிருஷ்ணஸ்வாமி ஜம்மு	50 00
கே. என். ஆர். ராமானுஜம், மேற்கு ஆப்பிரிக்கா	200 00
என். ஈ. எல். சிதம்பரம், வெளிப்பட்டினம்	5 00
என். ராமகிருஷ்ணன், கல்கத்தா	10 00
ஸ்ரீமதி உமா ராமகிருஷ்ணன் கல்கத்தா	10 00
காந்தி ஆசிரமம் ஆர். வெங்கட்ராமன் திருச்செங்கோடு	5 00
மொத்தம்	3503 00

நிதி அனுப்ப வேண்டிய கடைசித் தேதி

2-10-76

எஸ் பாஸ்கெட் பால் கிளப் நடத்தும் மக்ரேலியா கோப்பை பந்தயத்தில் இந்தியன் ஓவர்சீஸ் பாங்கி குழுவினர் மூன்று முறையாகத் தொடர்ந்து கோப்பையைப் பெற்று விட்டனர். 'ஹாட்ரிக்' வெற்றி கண்ட ஐ.ஓ.பி. டீமு காப்டன் விஜயகுமாரிடம் விஸ்வ இந்து பரிஷத் டைரக்டர் திரு எஸ். ராம் மக்ரேலியா கோப்பையைக் கொடுக்கிறார்.




பாடுவோம் பாப் மியூசிக்!
13
கதை: தமயந்தி/சாருகேசி
சித்திரம்: ராஜு
மார்க்கசகாயம் வீட்டில்...
யார் அங்கே, யமதர்ம கான சபா செக்ரடரியா? ஹா ஹா... நான்தான் மார்க்கசகாயம் பேசறேன்... ஒண்ணுமில்லே.. இந்த பாப் மியுசிக் கோஷ்டி ஒண்ணு, அருண்ணு ஒரு ... சான்ஸ் கேட்டு வந்தால் இல்லேன்னு சொல்லிடுங்கோ.. ஆமா, தகராறு பிடிச்ச பார்ட்டி.. தாங்க் யூ.
சூர்ப்பனகா ஃபைன் ஆர்ட்ஸ் சபாபதியா? மிஸ்யா இருக்கீங்களா? நோ நோ.. வர எல்லாம் வேண்டாம். ஒரு யூஸ்லெஸ் பார்ட்டி பாப் மியூசிக் பண்றேன்.. பேரா? அருண்... ஆமா, ரிஃப்யூஸ் பண்ணிடுங்க.. ரொம்ப சரி... தாங்ஸ்.
இனி யார் பாக்கி? பதினஞ்சு சபாவுக்கும் போன் பண்ணியாச்சு. இனி ஒழிஞ்சான் அருண். பாட்டுக்கும் சாப்பாட்டுக்கும் லாட்ரி அடிக்கட்டும். இவனுக்கு வித்யாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமாம்! ஆசையிருக்கிறதாம் தாசில் பண்ண...
வித்யா! ஒரு நியூஸ் தெரியுமா? உனக்கு
நான் என்ன நியூஸ் பேப்பரா படிக்கிறேன், ஷேக்ஸ்பியர் தானே படிக்கிறேன்! பரீட்சை வரது.
பாப் மியூசிக் அருண் என்று ஒரு உதவாக்கரை பெயரைச் சொன்னாலே, ஒரு சபாவிலும் சான்ஸ் இல்லை என்று சொல்லி விட்டார்களாம். சபா காரியதரிசிகள் எல்லாம் போன் பண்ணினார்கள்.
பெரிய உபகாரம். நீங்களாக எல்லாருக்கும் போன் செய்திருப்பீர்கள். எனக்குத் தெரியாதா என்ன?


ஹூம், எனக்கு அதுவா வேணும்? நன்றியிருந்தால் சான்ஸ் கொடுக்கிறோம்.
கேட்காமலேயே கையை விரிச்சு விட்டு, நன்றியிருந்தால் சான்ஸ் கொடுக்கிறோம் என்கிறீர்களே!
எதற்கு என் மீது கோபப்படுகிறாய்? உன் ஃப்ரெண்டு இனி இந்துஸ்தானி மியூசிக் கற்றுக் கொண்டால் ரயில்வே ஸ்டேஷன், ப்ளாட்பாரம் எங்காவது பாடிப் பிழைத்துக் கொள்ளலாம். பார்த்தால் சொல்லு.
கந்தர்வ கான சபா. நிர்வாகக் குழு தேர்தல் நடக்கிறது.
பிரசிடெண்ட்.. ம்.. ஹ்ம்.. நம் இண்டஸ்ட்ரியலிஸ்ட் மிஸ்டர் லிங்கம் தான்... எஸ்.எஸ். லிங்கம். பிரபோஸ் பண்றேன்.
அதெப்படி ஸ்வாமி? அவர் இரண்டு வருஷமாத்தானே மெம்பர்?
நீர் பத்து வருஷமா மெம்பரா இருக்கீர். ஒரு அட்வர்டைஸ்மெண்ட் கொடுத்திருப்பீரா? மிஸ்டர் லிங்கம் இரண்டு வருஷமாத்தான் இருக்கார். இருபது விளம்பரம் கொடுத்துட்டார் மலருக்கு.
அவர் இண்டஸ்ட்ரி நடத்தறார் சார். என்னென்னவோ ப்ரொட்யூஸ் பண்ணித் தள்றார்...
ஹஹ் ஹஹ் ஹா.
நீரும்தான் ப்ரொட்யூஸ் பண்ணியிருப்பீர். எத்தனை? நாலு பிள்ளை மூணு பொண்ணு? பொண்ணுக்கு ஒரு மேட்ரிமோனியல் அட்வர்டைஸ்மெண்டாவது தந்திரா சபா மலருக்கு?
அப்போ மிஸ்டர் எஸ்.எஸ். லிங்கத்தோட பெயரையே பிரசிடெண்ட்ஷிப்புக்கு ப்ரபோஸ் செய்துடலாமா?
நம்ம சுப்ரமணிய விலாஸ் ஹோட்டல் சுப்பண்ணாவை நான் ப்ரபோஸ் பண்ணறேன்.


தொடரும்

ஆதிரங்கம் கூறும் செய்திகள்

நகர்வலம்

'தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவானேன்?' என்று அலுப்புடன் அல்லது கோபத்துடன் கேட்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தலையைச் 'சுற்றி மூக்கைத் தொடுவதில் உள்ள அனுகூலங்களை அறியாதவர்கள்! உதாரணமாக பெங்களூரிலிருந்து மைசூருக்கு நேரடியாகப் போகலாம்தான். ஆனால் அப்படிச் செய்யாமல் கொஞ்சம் சுற்றி வளைத்துக் கொண்டு போனால் எத்தனை அதியற்புதக் காட்சிகளைப் பார்க்கலாம் தெரியுமா?

முதலில் சென்னைப்பட்டணம் என்ற சிறிய ஊர் வரும். இதே பெயர் கொண்ட தாலூக்கா முழுவதும் மரப் பொம்மைகள் தயாரிப்பவர்கள் ஏராளம். எனவே, நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இந்த ஊரில் பொம்மைக்



★ சென்னைப் பட்டணம் பொம்மை



★ திப்பு

கடைகள் தாராளம். வெகு அழகான, நேர்த்தியான பொம்மைகள். வேடிக்கைப் பொம்மைகள், விளையாட்டுப் பொம்மைகள். கண்ணைக் கவரும் வண்ணங்கள். நவராத்திரி கொலுவில் வைத்தால் பார்ப்பவர்கள் உள்ளங்களை அள்ளிக் கொண்டு போகும்.

ஒரு கடையில் இறங்கிப் பார்த்தோம். என் மனைவி, குழந்தைகளை எதை வாங்குவது, எதை விடுவது என்று புரியாது தவிக்க வைத்தன, கொள்ளை அழகான பொம்மைகள். நான் இந்தப் பிரச்னையைச் சுலபமாகத் தீர்த்து விட்டேன். பர்ஸைப் பிரித்துப் பாக்கி எவ்வளவு பணம் இருக்கிறது; ஊர் திரும்ப இன்னும் எவ்வளவு பணம் தேவை என்று ஒரு சின்னக் கணக்குப் போட்டேன். அப்புறம் பொம்மைகளெல்லாம் கடையிலேயே இருந்தால்தான் அழகு என்று தோன்றிவிட்டது! ஏதோ அங்கு வந்ததற்கு ஞாபகார்த்தமாக ஒன்றிரண்டு வாங்கிக் கொண்டு புறப்பட்டோம். அவை இப்போது எங்கள் வீட்டுக் கொலுவில் உருவில் சிறியதா யிருந்தாலும் கண்ணைக் கவர்ந்து கொண்டிருக்கின்றன.

அடுத்தாற்போல் நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து போனால் சிவசமுத்திரத்தை அடைய

★ சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி




லாம். காவேரி அங்கே இரண்டாகக் கிளை விட்டு நமக்கு நேர் எதிரேயும் சற்றுத் தள்ளி வலப்புறத்திலேயும் மலை முகடுகளிலிருந்து கொட்டுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் மூன்று நான்கு அருவிகள். கடைசியில் கீழே அதள பாதாளத்தில் எல்லாம் ஒன்றாக மீண்டும் இணைசேர்ந்து ஒரே ஆறாகப் பயணத்தைத் தொடர்கிறது.

ஆற்றின் இரு கிளைகளும் பாறைகளில் முட்டி மோதிக் கொண்டு, ஆவேசத்துடன் பொங்கி எழும்பி வந்து, 'ஹோ' வென்ற பேரிரைச்சலுடன் அருவிகளாக விழுந்து, வெண்ணுரை தள்ளி, பிறகு திடுமென ஆவேசமெல்லாம் அடங்கப்பெற்று அமைதியான ஆறாக ஓடும் காட்சியை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம், வெய்யிலின் கடுமை மட்டும் தகிக்காமல் இருந்தால். ஆனால் பாறையில் கால் வைக்கவும் முடியவில்லை; வெய்யிலில் தலை காட்டவும் முடியவில்லை. அத்தனை தண்ணீர் கண் குளிர் காட்சியாகக் கொட்டினாலும் தாகசாந்திக்கு ஒரு வாய் கிட்டாது. ஒரு பள்ளத்தாக்கு அல்லவா பிரிக்கிறது நம்மையும் அருவியை

யும்! கருணையுள்ள வியாபாரி இளநீர்க் குலைகளை வெட்டி வந்து விற்கிறாரோ நாம் பிழைத்தோமோ. இந்த இடத்தைச் சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் விதமாக எத்தனை அழகாக அபிவிருத்தி செய்யலாம் என்று அசை போடுகிறது மனம். இன்று உள்ள ஒரே வசதி கழிவிடமாக மாறிவிட்ட ஒரு மண்டபம் மட்டும்தான்! போனால் போகிறது என்று குட்டை மரம் ஒன்றின் அடியில் ஒற்றைப் பெஞ்சு போட்டு வைத்திருக்கிறார்கள்.

சிவசமுத்திரத்திலிருந்து கிளம்பிச் செல்லும்போது இத்தனை தண்ணீரை வைத்துக் கொண்டா கர்நாடகம் தமிழகத்துக்குத் தண்ணீர் விடாமல் தகராறு பண்ணுகிறது என்று யோசித்துக் கொண்டோ பேசிக் கொண்டோ போகக் கூடாது. அப்படிச் செய்தால் நாம் சோம்நாத்பூருக்குச் செல்லும் மார்க்கத்தை நிச்சயம் கோட்டை விட்டு விடுவோம். குறித்துக் கொள்ளுங்கள், அனுபவம் பேசுகிறது!

எப்படியோ அங்கிங்கெனாதபடி எங்கும் வழி விசாரித்துக் கொண்டு ஒரு வழியாகச் சோமநாத்பூரைச் சென்றடைந்தால், 'அடடா! இந்த அற்புதத்தைக் காண எட்டு மைல் நாளு வழிதப்பித் திரியலாம்? எண்பது மைல் சுற்றி வந்தும் காணலாமே!' என்று தோன்றியது. சிவசமுத்திரம் அருவிகளின் இயற்கை கம்பீரத்துக்கு இணையான செயற்கை கம்பீரத்துடன் கோவில் உயர்ந்திருக்கக் காணலாம். சற்று நெருங்கிப் போனால் கம்பீர அழகு கலையழகாக மாறி மகிழ்விக்கும். வேலைப்பாடு என்றால் அதுவல்லவா வேலைப்பாடு! ஏதோ தந்தத்திலோ அல்லது தங்கத்திலோ நுணுக்கமான வேலைப்பாடுகள் செய்வதைப் போலல்லவா கற்பாறைகளையும் கையாண்டிருக்கின்றனர் கலைஞர்கள்! ஒன்றா இரண்டா? ஆயிரக்கணக்கான உருவங்கள். சிறிதும் பெரிதுமான அவை ஒவ்வொன்றும் முழுமையான கலை ஆற்றலை விகசிப்பவை. சிற்பங்களின் கலையழகு ஒருபுறம் மலைப்பூட்டுகிறது என்றால் பத்ம வடிவான கோவிலின் அமைப்பு மறுபுறம் திகைப்பூட்டும். கட்டடக் கலை நுணுக்கத்தின் சிகரத்தையே அல்லவா தொட்டிருக்கிறார்கள் ஹொய்சால மன்னர்கள்! இத்தனை அற்புதமான கோவிலில் பூஜை நடக்காமல் இருப்பதற்குப் 'புண்ணியம்' கட்டிக்கொண்டான் மாலிக்காபூர். மூலவரை இடித்துத் தள்ளிவிட்டுக் கோவில் சொத்துக்களை—கோடிக் கணக்கான பெறுமானமுள்ள தங்க வைர நகைகளை அபகரித்துக் கொண்டு போய் விட்டான். இன்று தொல்பொருள் ஆராய்ச்சி இலாக்கா அவன் விட்டுச் சென்ற நிலையிலேயே கோவிலை மேலும் சேதப்படாமல் பாதுகாத்து வருகிறது. மூலவர் இல்லாத கோவிலில் பூஜை கிடையாது. அதனால் என்ன, இந்தக் கலைக் கோவிலை உருவாக்கிய மகா சிற்பிகளை மானசீகமாகப் பூஜிக்காமல் யார்தான் சோமநாத்பூரை விட்டுக் கிளம்புவார்கள்!



★ ஸ்ரீரங்கப்பட்டினம் கோவில்

சோமநாத்பூரிலிருந்து ஹைதர் அலியும் திப்பு சுல்தானும் தங்கள் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட ஸ்ரீரங்கப்பட்டணத்தை அடையலாம். மாபெரும் சாம்ராஜ்யத்தை ஆண்டவனும் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர்க் கொடியை உயர்த்தியவனும் வீராதி வீரனுமான திப்பு சுல்தான் பற்றி ஸ்ரீரங்கப் பட்டிணத்தில் ஒவ்வொரு பகுதியும் ஒரு கதை சொல்கிறது. அந்த உண்மைக் கதைகளை அறிந்துகொள்ள வேண்டுமேயன்றி 'கைடு' என்ற பெயரில் வந்து கற்பனைக் கதைகளை விவரிக்கும் பாலர்களின் பேச்சை நம்பிவிடக் கூடாது! எவ்வளவுக்கெவ்வளவு வியப்பும் திகைப்புமான கதை சொல்கிறோமோ, அத்தனைக்கத்தனை சன்மானமும் கூடும் என்ற எண்ணத்தில் இந்தப் பள்ளிச் சிறுவர்கள் தங்கள் கற்பனைத் திறனைக் காட்டுகிறார்கள்; சினிமாக் காட்சிகள் பலவற்றைத் திப்புவுக்கு ஏற்றிச் சொல்கிறார்.


திப்பு சுல்தான் ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் சமமாகப் பாவித்தவன்; ஆங்கிலேயருடன் சமாதானமாகவே போக விரும்பியவன்; ஆயினும் அவர்களுடைய பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்கும், ராணுவ பலத்துக்கும் பணியாதவன்; போரில் தன்னால் கைதாக்கப்பட்ட ஆங்கிலேயத் தளபதிகளைக் கண்ணியமாக


★ திப்புவின் கோடை அரண்மனை



கி.ராஜேந்திரன்

★ திப்பு — ஹைதர் சமாதி





அலுவலர்: என்ன விஷயம்?

மாலா: நூறுவ ருஷங்களுக்கு மேற்பட்ட புராதனப் பொருள்களைப் பதிவு செய்துக்கணும்னு ஜனாதிபதி சட்டம் போட்டிருக்காரே, என் மாமியார் வயசு 108. பதிவு பண்ண வந்திருக்கேன். -லலிதா செல்லப்பா

மாக நடத்தினான் என்றெல்லாம் சரித்திரம் பேசும். 'டல்'லடிக்கிறதல்லவா?

அதனால் இங்குள்ள சிறுவர்கள் ஆங்கிலேயத் தளபதிகளை எப்படிச் சுவரிலுள்ள வளையங்களில் கட்டிப் போட்டுவிட்டுக் காவிரி நீரைப் பாதாளச் சிறைக்குள் திப்பு அனுப்பினான்; நீர் படிப்படியாக எவ்வாறு உயர்ந்து அவர்கள் மூக்கு வரை வந்து விட்டது என்றெல்லாம் நம் மனம் பதைக்கும் விதமாகக் கதை சொல்வார்கள். கேட்கச் சுவாரசியமாக இருக்கும்.

இங்கே ஒரு 'வாட்டர்கேட்' இருக்கிறது. அமெரிக்க வாட்டர்கேட் அளவுக்கு உலகப் புகழ் பெறாவிட்டாலும் இதுவும் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம்தான். முன்னது அவமானத்தில் சின்னம்; பின்னது வீரத்தின் விளைநிலம். கோட்டை வாசல். தலைநகரையும் தன்மானத்தையும் அந்நியர்கள் ஆக்கிரமிப்பிலிருந்து காக்கும் பணியில் அஞ்சா நெஞ்சினன் திப்பு இங்கேதான் இறுதிப் போர் நடத்தி உயிரை விட்டான். சுற்றியுள்ள எல்லோரையும் சற்று அமைதியாக இருக்கப் பணித்துவிட்டு ஒரு மொட்டைப் பாறையில் அமர்ந்து அந்த வட்டாரத்தைப் பார்த்தபடி இருந்தால் மகத்தான அந்தப் போர் நம் கண் முன்னால் நடப்பது போன்ற பிரமையே ஏற்படுகிறது.

திப்பு உணவருந்திக் கொண்டிருக்கும் போது கோட்டை தாக்குதல் பற்றி அறிகிறான். 'முற்றுகை இட்ட ஆங்கிலேயர் போரில் முனைந்து விட்டனரா!' என்று கோபாவேசம் பொங்கக் கையை உதறிவிட்டு எழுந்திருக்கிறான்.... ..... வாட்டர் கேட் பகுதியிலும் பிரிட்டிஷார் நுழைந்து விட்டதை அறிந்து அங்குள்ள தன் வீரர்களுக்கு ஊக்கமூட்டச் சொல்கிறான். அங்கே அவன் இடது மார்பில் ஒரு குண்டு பாய்கிறது. குதிரையிலிருந்து சரிகிறான் திப்பு.....கைதாகிவிடக் கூடாது; வீர மரணம் அடைய வேண்டும் என்று பிரார்த்திக்கிறான்.

அதற்கு ஒரு வாய்ப்பை ஆண்டவனைக் பார்த்து அனுப்பி வைக்கிறார். ஓர் ஆங்கிலேய சிப்பாய், பொன்னும் மணிகளும் வைத்து இழைக்கப்பட்டு ஜொலிக்கும் திப்புவின் வாளுறையையும் அத்துடன் இணைந்த பெல்டையும் கழற்றுகிறான், பேராசையுடன். இரத்த மிழந்து அரை மயக்க நிலையில் இருந்த போதிலும் திப்புவுக்கு ஆத்திரம் பொங்குகிறது. உடல் வேதனையை மறந்து சீறிக் கொண்டு அருகிலிருக்கும் ஒரு வாளை எடுத்து வீசுகிறான்.... அது அச்சிப்பாயைக் காயப் படுத்துகிறது. ஆனால் தாக்குதலில் வலுவில்லை. திப்புவைக் குறி வைத்து நெற்றியில் சுடுகிறான் சிப்பாய். திப்பு இறந்து விழுகிறான். அவன் கோரிய வீர மரணம் கிடைத்துவிட்டது! அழியாப்புகழ் அவனை வந்து அடைந்தது!

மனத் திரையில் விரிவாக ஓடிய அந்தச் சரித்திரப் பிரசித்தி பெற்ற யுத்தக் காட்சியிலிருந்து சிந்தனையை விடுவித்துக் கொண்டு இன்றையச் சூழலுக்குத் திரும்பியபோது, அருகே 'டுமீல்! டுமீல்!' என்று சத்தம் கேட்டது. திகைத்துத் திரும்பினால் சற்றுத் தூரத்தில் இருந்த திப்புவின் பீரங்கி ஒன்றுக்குப் பின்னால் நின்று கொண்டு என் ஏழு வயது மகன் ஆங்கிலேயர்களைத் தாக்கி வீழ்த்திக் கொண்டிருந்தான்! ''போதுமப்பா உன் வீரம். கிளம்பு போகலாம்'' என்றதும் ஆசை கலந்து ஒரு சந்தேகத்தை வெளியிட்டான்: ''இந்தப் பீரங்கியைக் காரில் ஏற்றத்தான் முடியாது; வீட்டுக்குக் கட்டி இழுத்துக் கொண்டு கூடப் போக முடியாதா அப்பா?''

ஸ்ரீரங்கப்பட்டினத்தில் வேறு பல பகுதிகளும் சரித்திரம் பேசுகின்றன. திப்பு தொழுகை நடத்திய மசூதி இருக்கிறது. திப்புவின் மானியங்களையும் அன்பளிப்புகளையும் ஏராளமாகப் பெற்ற ரங்கநாத சுவாமி கோயில் அவன் மதாபிமானத்தை விட மனிதாபிமானத்தையே பெரிதாக மதித்ததைக் கூறிக் கொண்டு இன்னமும் கம்பீரமாக நிற்கிறது. பிரெஞ்சு நிபுணர்களின் உதவியுடன் திப்பு காவிரிக்குக் குறுக்கே கட்டிய பாலம், ஆங்கிலேயர்களால் இடித்துத் தகர்க்கப்பட்ட திப்புவின் அரண்மனை முதலிய வற்றையும் பார்க்கலாம்.

ஸ்ரீரங்கம் போலவே ஸ்ரீரங்கப்பட்டினமும் ஒரு தீவுதான். அவ்வாறே சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இடமும் ஒரு தீவு. காவிரியால் உண்டான இம்மூன்று தீவுகளிலும் அரங்கன் பள்ளி கொண்டிருக்கிறான். ஸ்ரீரங்கப்பட்டினம், ஆதி ரங்கம், சிவசமுத்திரம் மத்தியரங்கம், திருச்சியில் அந்திய ரங்கம்.

ஸ்ரீரங்கப் பட்டினத்திலிருந்து சற்றுத் தொலைவில் திப்புவின் கோடை அரண்மனை உள்ளது. இதில் திப்புவின் வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் பல புராதன வண்ண ஓவியங்கள் இருக்கின்றன.

பின்னால் டியூக் ஆஃப் வெலிங்டன் என்று புகழ்பெற்ற கர்னல் ஆர்தர் வெலஸ்லி, திப்புவின் மரணத்துக்குப் பிறகு இந்த அரண்மனையில் நீண்ட காலம் வசித்தான். முழுக்க முழுக்கத் திப்புவின் புகழ் பாடும் ஓவியங்கள் நிரம்பிய அரண்மனையான போதிலும் அதைப் பொருட்படுத்தாமல், வெலஸ்லி அங்கே வசிக்க வேண்டுமெனில் அந்த ஓவியங்களின் கலைச் சிறப்பையும், அரண்மனையின் எழிலையும் எளிதில் உணரலாம் அல்லவா?

இன்னும் சற்றுத் தூரத்தில் திப்பு, ஹைதர் அலியின் சமாதி இருக்கிறது. தன் தகப்பனார் ஹைதர் அலிக்கு மிகவும் பிடித்தமான லால் பாக் தோட்டத்தில் அவருக்குச் சமாதி எழுப்பினான் திப்பு. மாமரங்களும் ரோஜாச் செடிகளும் நிரம்பிய எழிலார்ந்த விசாலமான இடம். கரிய சலவைக் கற்களால் எழுப்பிய சமாதி. பூச்சித்திர வேலை செய்தது போல் தந்தம் இழைக்கப் பெற்ற கதவுகள். திப்பு


இணையற்ற எழில்மேனி.
மென்மை. வழவழப்பு. இயற்கையான வனப்பு.
ஆம், லக்ஸ் ஸுப்ரீம் உங்கள்
மேனி எழிலுக்கு மெருகூட்டு
கிறது. நீங்களே அதை உணர்ந்து
மகிழ்வீர்கள். அதன் மயக்கும்
நறுமணம். செழுமையான க்ரீம்
இணைந்த நுரை. மேனியைப்
பட்டுப்போன்று தழுவிச்
செல்கிறது. லக்ஸ் ஸுப்ரீம்
ப்யூடி க்ரீம் உங்கள் எழில்
மேனியை மென்மையாகவும்,
வழவழப்பாகவும், இயற்கையான
வனப்புடனும் வைக்கிறது.
LUX
LUX
SUPREME
வேறு எந்த சோப்பையும்
பற்றிய சிந்தனையும் எழாது.
இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமான தயாரிப்பு
HLLS-1959

காலமாகி அவன் உடல் கண்டெடுக்கப்பட்டதும் ஒரு மாவீரனுக்குரிய மரியாதையுடன் அவனை அவன் பெற்றோருக்கு அருகே இதே இடத்தில் புதைக்க ஏற்பாடு செய்தனர் ஆங்கிலேயர்.

இன்னும் சற்றுத் தூரம் போனால் இரண்டாகப் பிரிந்த காவேரி ஸ்ரீரங்கப்பட்டினம் தீவை உருவாக்கிவிட்டு மீண்டும் இணைசேரும் சங்கமம். நல்ல 'பிக்னிக் ஸ்பாட்'.

சரித்திர காலத்திலிருந்து விடுபட்டுக் கொஞ்சம் இயற்கை விஞ்ஞானத்தில் மனத்தை லயிக்க விடச் சம்மதமானால் ஸ்ரீரங்கப்பட்டினத்திலிருந்து சிறிது தூரத்திலேயே ரங்கண்ணத்திட்டு என்னும் பறவைகள் சரணாலயத்தை அடையலாம்.

இவ்விடத்தை நாங்கள் சேரும்போது மாலை மயங்கி இருள் கவியும் தருணம். பட்சிகள் எல்லாம் கூடுகளை நோக்கிக் கூட்டம் கூட்டமாகத் திரும்பி வந்து கொண்டிருந்தன. காவிரி நதி கம்பீர அமைதியுடன் பாய்கிறது. இங்கே. இடை இடையே திட்டுத் திட்டாக மரங்கள், புதர்கள். அவற்றில் ஆயிரக் கணக்கான பறவைகள். படகேறிச் சென்று திட்டுக்களை, அவற்றில் கூடு கட்டி வாழும் பறவைகளைக் கிட்டத்தில் இருந்து பார்க்கலாம். பறவைகள் கூட்டம் வீடு திரும்பும் அந்தி நேரத்தில் வெளவால் கூட்டம் இரை தேடிப் புறப்பட்டுப் பறக்க ஆரம்பித்தன. படகுத் துறைக்கு மறுபுறம் கரையோரம் சில முதலைகளும் தலை தூக்கின. படகோட்டி ''பயப்பட வேண்டாம்'' என்று எவ்வளவு தான் சொன்னாலும் கொஞ்சம் நெஞ்சு படபடக்கத்தான் செய்தது.

வானம் வண்ணக் கோலம் பூண்டது. கருஞ் சாம்பல் நிறப் பின்னணியில் சில ஆரஞ்சு நிறக் கோடுகளைத் தீட்டியிருந்த மர்மக் கரம் 'மாடர்ன் ஆர்ட்'டும் தனக்குத் தெரியும் என்பதை உணர்த்தியது. காற்று ஆற்றின் நீரின் மீது தவழ்ந்து வந்து குளுமையுடன் இதமாக வீசிப் பயணக் களைப்பை யெல்லாம் போக்கியது. அந்த அற்புத அனுபவத்துக்கு மேலும் பெருமை சேர்த்தது படகுக்காரன் கூறிய ஒரு செய்தி. பல்வேறு ரகப் பறவைகளைத் தனித்தனியே சுட்டிக் காட்டியவன், ''இந்தப் பட்சிகளில் பல வேடந்தாங்கலிலிருந்துதான் இங்கு வருகின்றன'' என்றான். நான் காலரைத் தூக்கி விட்டுக் கொள்ள முற்பட்டேன். அதற்குள் என் மகள், ''அப்பா! வேடந்தாங்கலுக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து கூடப் பறவைகள் வருகின்றன'' என்றாள்.

பலவீனமானவை என்று நமக்குத் தோன்றும் இந்தப் பட்சிகளுக்குத்தான் எத்தனை ஆற்றல்! எவ்வளவு சக்தி! ஆயிரக் கணக்கான மைல்களை இவை எப்படி நாளும் நேரமும் திசையும் தப்பாமல் கடக்கின்றன! இவற்றிடம் என்ன திசை காட்டும் கருவி இருக்கிறது! பல நூறு மைல்களைப் பறந்து கடக்கும்போது பட்சிகள் பறந்தபடியே தூங்கி மாறி மாறி ஓய்வெடுக்கின்றன. அக்கூட்டத்தில் உள்ள மற்ற சகாக்கள் சிறகடிக்கும் சத்தமே இதற்குத் திசையையும் வேகத்தையும் தூக்கத்திலும் உணர்த்தும் சாதனமாகிறது.

அந்தப் பட்சிகளின் அறிவாற்றலுடன் ஒப்பிடும்போது கரையில் நின்ற ஓர் அம்மையாரின் புத்தி மிகவும் பின்தங்கியதாக எங்களுக்குப் பட்டது.

ஓர் அறிவிப்புப் பலகை கரையில் ஒரு பட்சியின் கோரிக்கையாகப் பேசுகிறது: ''உங்கள் டிரான்ஸிஸ்டர் ஒலியாலும் உங்கள் கூச்சலாலும் எங்களையும் எங்கள் குஞ்சுகளையும் அச்சுறுத்தாதீர்கள்!''

ஆனால் கரையில் இருந்த அந்த அம்மையார் டிரான்ஸிஸ்டரைப் பெரிதாக முடுக்கி விட்டிருந்தார். ஒலியைத் தணிக்குமாறு கோரிய பாதுகாவலரிடம், ''ரேடியோ கேட்டுப் பறவை பயந்துவிடுமா? இது என்ன ஏமாற்று வேலை?'' என்று அவள் டிரான்ஸிஸ்டரை விட அதிகமாகச் சத்தம் போட்டுச் சண்டைக்குப் போனாள்.

அந்த வாய்ச் சண்டை எனக்குத் திப்புவின் வீர யுத்தத்தை மீண்டும் நினைவுபடுத்தியது. அங்கே மனித உலகில் உக்கிரப் போர்; அருகில் பறவை உலகில் பூரண அமைதி— (அம்மையார் நீங்கலாக!)

போரையும் அமைதியையும் அருகருகே உணர்த்தும் ஸ்ரீரங்கப்பட்டினம் இன்று சில பல வீடுகள், ஓரிரு ஹோட்டல்கள், சாலைகள் சந்துகளுடன் களையிழந்த சிறு நகரமாகக் காணப்படுகிறது. ஆனால் அன்று திப்பு சுல்தான் காலத்தில் அது எப்படி ஜே ஜே என்று கோலாகலமாக விளங்கியிருக்க வேண்டும் என்பதை அறியக் கற்பனைத் திறன்கூட வேண்டாம். சில மைல் கல் தொலைவில் உள்ள மைசூருக்குப் போய்ப் பார்த்தால் போதும்.

நினைவு நாள்



திருமதி சீதாலக்ஷ்மி அம்மாள்
திருச்சிராப்பள்ளி

சென்ற ஆண்டு இந்நாள் (30-9-1975) இறைவனடி சேர்ந்த எங்கள் அன்னைக்கு அஞ்சலி.

இப்படிக்கு
குடும்பத்தினர்

ராமசேஷன் இடிந்து போய் உட்கார்ந்திருந்தார். என்ன தவம் செய்து இப்படி ஒரு பிள்ளையைப் பெற்றோம்? இவனுடைய திருவிளையாடல்களுக்கு ஒரு முடிவே கிடையாதா?

எட்டாம் வகுப்பை மூன்றும் தடவையாக முற்றுகை செய்தபோது, சொல்லிக் கொள்ளாமல் பம்பாய் ஓடி விட்டான். அங்கு என்னென்ன செய்து கொண்டிருந்தானோ, தெரியாது. மூன்று மாதங்களுக்குப் பிறகு திரும்பி வந்து சேர்ந்தான். அவர் அவனை ஒன்றுமே கேட்கவில்லை. நாலைந்து மாதங்கள் வீட்டிலேயே அடைந்து கிடந்த பிறகு, வியாபாரம் செய்யப் போகிறேன் என்றான். பணம் கொடுத்தார். என்ன வியாபாரம் செய்தானோ, அதுவும் அவருக்குத் தெரியாது. கள்ளக் கடத்தலில் ஈடுபட்டிருக்கிறான் என்று போலீஸ் வந்தபோதுதான், அவனுடைய தொழில் மேதைத்தனம் அவருக்குப் புரிந்தது. மனைவியின் வற்புறுத்தலின் பேரில், பணத்தைக் கொடுத்துக் கேஸ் வராமலேயே பார்த்துக் கொண்டார். அப்பொழுது தாம் அவ்வாறு செய்திருக்கக் கூடாது என்று அவருக்கு இப்பொழுது பட்டது. அதற்குப் பிறகு, மறுபடியும் பம்பாய் போனான். சினிமாவில் சேர்ந்திருப்பதாக அவன் அம்மாவுக்குக் கடிதம் எழுதினான். திரைப் படத்தில் தன் மகன் கதாநாயகனாக வரப் போகிறான் என்று அவர் மனைவி நம்பிக் கொண்டிருந்தாள்.

கதாநாயகனாக அவன் வீட்டுக்குத் திரும்பியதுதான் மிச்சம். தினுசு தினுசான உடைகள். திரைப்படத்தில் நடிக்கவில்லையா என்று அவர் கேட்கவில்லை. கமிஷன் ஏஜண்டாக இருப்பதாக அவன் தன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டான். அவர் நம்பவில்லை.

ஓர் இரவு அவன் நன்றாகக் குடித்துவிட்டு வீட்டுக்கு வந்தான். வாசனை 'குப்' என்று வந்தது. அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

''எதுக்காகடா, இப்படிக் குடிச்சிருக்கே?'' என்று அவர் கேட்டார்.

''பிஸினஸ் விஷயமா நாலு பேரைப் பார்க்கறப்போ குடிக்காமல் இருக்க முடியுமா?''

''பிஸினஸ் விஷயமா குடிச்சியா, இல்லாட்டா குடிதான் பிஸினெஸ்ஸா?''

''உங்களை நான் பணம் கேட்கலே. நான் என்ன பண்ணினால் உங்களுக்கென்ன?''

''கெட் அவுட்....''

''போக முடியாது. நீங்க என்ன வேணுமானாலும் செஞ்சுக்கலாம்....'' என்று சொல்லிக் கொண்டு அவன் உள்ளே போய் விட்டான்.

அவருக்கு என்ன செய்வது என்றுதான் புரியவில்லை. கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளலாம். விரசமாயிருக்கும். அவர் மனைவி அழுது கொண்டே அவரைப் பார்த்தாள். அவர் வேகமாக மாடிக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டார்.

அப்புறம், அவர் அவனிடம் பேசியதே கிடையாது. ஒரு மாதத்துக்குப் பிறகு புறப்பட்டுப் போனவன்தான், அவனைப் பற்றி அவருக்குத் தகவலே கிடையாது, இதுவரை.

இப்பொழுது தகவல் வந்திருக்கிறது, மூன்று வருஷங்களுக்குப் பிறகு. ஏதோ ஒரு கம்பெனியிலிருந்து அவர்களுடைய சாமான்களை விற்றுத் தருவதாகச் சொல்லிவிட்டுப் பத்தாயிரம் ரூபாய் சாமான்களை எடுத்துப் போனவன்தான், என்ன ஆனான் என்று மூன்று மாதங்களாகச் செய்தியில்லை. பம்பாயிலிருந்த இந்தக் கம்பெனிக்கு அவன் தன் வீட்டு மூகவரியைத்தான் நிரந்தர விலாசமாகக் கொடுத்திருக்கிறான். அவர்கள் போலீசுக்குச் சொல்வதற்கு முன்னால், ராமசேஷனை — ஃபோனில் கூப்பிட்டு, விஷயத்தைச் சொன்னார்கள். போலீசுக்குச் சொல்ல வேண்டாம், தாம் பணத்தைக் கட்டி விடுவதாக அவர் வாக்குறுதி அளித்துவிட்டார். தாம் அவ்வாறு கூறியது சரியா? — குடும்பப் பெயரை அப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று என்ன அவசியம்?

''என்ன இடிஞ்சு போய் உட்கார்ந்திருக்கீங்க?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் அவர் மனைவி.

அவர் பதில் கூறவில்லை. இவளிடம் விஷயத்தைச் சொல்லலாமா? அழத் தொடங்கிவிடுவாள். பணம் கொடுப்பது என்ற தம்முடைய தீர்மானத்தை அவரால் மறுபடியும் புனராலோசனை செய்யவே முடியாது. ஆனால்



நாளைக்கு அலுவலகம் சென்று அவர்களோடு தொடர்பு கொண்டு 'போலீசுக்குச் சொல்லி விடுங்கள்' என்று கூறுவதுதான் தர்மம். மனமறிந்து ஏமாற்றியவன் ஜெயிலுக்குத்தான் போக வேண்டும். ஒரே மகன், அவன் இப்படி இருப்பதற்கு என்ன காரணம்?

அவனைத் தாம் வளர்த்ததில் என்ன தவறு நேர்ந்து விட்டது? தம்முடைய கண்டிப்பின் காரணமாக அவன் தன் எதிர்ப்பு உணர்ச்சியை இவ்வாறு காட்டுகிறான் என்று சொல்வதற்கு இடமில்லை. அவருக்கு இரைந்தே பேசத் தெரியாது. மனைவியும் அப்படித்தான். சிறு வயதிலிருந்தே அவனுக்குப் படிப்பில் அக்கறையில்லை.

''அவனைப் பற்றி ஏதாவது தெரிஞ்சுதா?'' என்று கேட்டாள் அவர் மனைவி.

'' எவனைப் பத்தி....?''

'' உங்க பிள்ளையைப் பத்தி?''

அவர் பேசாமல் இருந்தார்.

''சொல்லுங்களேன்....''

''அவனைப் பத்தி ஒண்ணுமில்லே....ஏதோ ஆபீஸ் விஷயம்....''


அவன் சோபாவில் உட்கார்ந்தான். சில விநாடிகள் சங்கடமான மௌனம் அங்கு நிலவியது.

'' மூணு வருஷமாச்சே, விசாரிக்கக் கூடாதா ?''

அவர் எழுந்து மாடிக்குச் சென்றார். இன்னும் அவனோடு பேசினால், உண்மையைச் சொல்லிவிடும்படியாக இருக்கும். அவன் நம்பிக்கையை ஏன் குலைக்க வேண்டும் ?

அவளால் எப்படித் தன் மகனைப் பற்றி இவ்வாறு நினைக்க முடிகிறது ? பாசம் என்பது எவ்வளவு கண்மூடித்தனமாக இருக்க வேண்டும் ? தாமும் பாசத்துக்கு அடிமையாகக் கூடாது. நாளைக்கு அவர்களைப் போனில் அழைத்துச் சொல்லிவிட வேண்டும்: 'அவன் என் மகன்தான். ஆரம்பத்திலிருந்தே அவன் இப்படித்தான். நீங்கள் அவனைத் தாராளமாகப் போலீஸில் ஒப்படைக்கலாம்.'

அவனை இன்னும் என்னென்ன குற்றங்களுக்காக யார் யார் தேடுகின்றார்களோ? செய்தித்தாள்களில் அவனைப் பற்றிய விவரங்கள் வரும். இன்னாருடைய மகன் என்ற செய்தி



யும் வராமலா இருக்கப் போகிறது ? தம்முடைய பெயரும் இதில் இணைந்திருக்கிறது என்பதற்காக, ஒரு சமூக விரோதிக்குப் பாதுகாப்பு அளிப்பது என்ன நியாயம்?— அவன் சிறைக்குச் செல்வதுதான் சரி.... தமக்கு மகனே கிடையாது. மகனே கிடையாது....

''கொஞ்சம் கீழே வரேளா?'' என்று அவருடைய மனைவி கூப்பிடும் ஒலி அவர் காதுகளில் விழுந்தது. மறுபடியும் ஃபோனோ ? அவனுக்குத் தெரிந்து விட்டதோ ? பாசம் குறுக்கிடக் கூடாது. தாம் உறுதியாக இருக்க வேண்டும்.

அவர் கீழே இறங்கி வந்தார். ஹாலில் ஒரு கிழவர் உட்கார்ந்திருந்தார். நெற்றியில் பளிச்சென்று நாமம். வயது எழுபதுக்குமேல் இருக்கலாம். அவரைக் கண்டதும் கிழவர் எழுந்திருந்தார். கைகளைக் கூப்பினார். யார் இந்தக் கிழவர் ?

''உட்காருங்கோ....''

கிழவர் புன்சிரிப்புடன் உட்கார்ந்தார். இந்த உச்சி வெய்யிலில் இந்தக் கிழவர் எதற்காக வந்திருக்கிறார் ? அவர் கைகளில் ஒரு பிளாஸ்டிக் கைப் பை இருந்தது.

''என் பேர் ராகவன்'' என்றார் கிழவர்.

''என்ன விசேஷம்? இப்படி நல்ல வெய்யில்லே வந்திருக்கேளே?''

''வெளியிலே வெய்யில்தான். மகாலட்சுமி மாதிரி இந்த அம்மாவைப் பார்த்ததும், நிழலுக்கு வந்த மாதிரி இருக்கு.....''

''கொஞ்சம், நல்ல குளுமையான மோர் சாப்பிடறேளா ?'' என்று கேட்டாள் அவர் மனைவி.

''கொடுங்கோ... எதுவுமே வேண்டாம்னு சொல்ல மாட்டேன்...''

என்றார் ராகவன். இவ்வாறு சொல்லிவிட்டு அவர் பலமாகச் சிரித்தார்.

ராமசேஷன் மனைவி உள்ளே சென்றாள்.

''உங்களைப் பத்தி, ரிடையர்ட் ஜட்ஜ் ஜனார்த்தனம் இருக்காரோன்னோ.

அவர் நிறையச் சொன்னூர்.....'' என்றார் ராகவன்.

ராமசேஷனுக்கு ஒன்றும் புரியவில்லை.... இவர் எதற்காக இங்கு வந்திருக்கிறார்? யாசகம் கேட்கவோ....? பார்த்தாலும் யாசகம் கேட்பவராகத் தெரியவில்லை. வெள்ளை வெளேரென்று சட்டையும், வேட்டியும் அணிந்திருந்தார். மேலே சால்வை.

அவருடைய மனைவி ஒரு தட்டில் ஆப்பிள் துண்டுகளை நறுக்கிக் கொண்டு வந்தாள். வெள்ளித் தம்ளரில் மோர். அவற்றைக் கிழவர் முன் வைத்தாள்.

''இதெல்லாம் எதுக்கு ?'' என்று கேட்டுக் கொண்டே ஒரு துண்டை வாயில் போட்டுக் கொண்டார் ராகவன். அவர் முகத்தில் ஒரு புது மலர்ச்சி ஏற்பட்டது.

''உங்களைப் பார்த்தவுடனே — ஆழ்வாரோடு சேர்ந்து சந்தோஷமா பாடலாம் போல் இருக்கு. 'பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம், ஒளி நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை.... கலியும் கெடும் கண்டு கொண்மின்'னு. இது கலியுகம்ங்கிறது. இங்கே வந்தவுடனே எனக்கு மறந்தே போச்சு...''

தட்டைக் காலி செய்துவிட்டு மோரைக் குடித்தார் கிழவர். பிறகு கைப் பையைத் திறந்து வெற்றிலைப் பெட்டியை எடுத்தார். நிதானமாக வெற்றிலை போட்டவாறு, புகையிலையை வாயில் அடக்கிக் கொண்டார்.

'' இதெல்லாம் என்ன வெளகேப் பழக்கம் ?'' என்று கேட்டார் ராமசேஷன்.

''பொகையிலையைச் சொல்றேளா ?.... சின்ன சின்ன வயசிலேயிருந்து வந்தது. விட மாட்டேங்கிறது.... பார்க்கப் போனு, உங்க எதிரே எனக்கு இந்த மாதிரிப் பழக்கமெல்லாம் இல்லேன்னு காட்டிக்கிறதுக்காக, நான் பேசாமல் இருந்திருக்கலாம். நான் அந்த மாதிரியெல்லாம் காட்டிக்கிறவனில்லே..... 'பி ட்ரு டு தைன் ஒன் செல்ஃப்'ன்னு ஷேக்ஸ்பியர் சொல்லி யிருக்கானில்லையா ?''

ராமசேஷனுக்கு ஆச்சரியமாக இருந்தது. கிழவர் ஆங்கிலத்திலிருந்து மேற்கோள் காட்டுவார் என்று அவர் எதிர்பார்க்கவே யில்லை.

''நீங்க ஆச்சரியப்படறது எனக்குப் புரியறது. நான் நாலாம்கிளாஸ் மட்டும்தான் பள்ளிக்கூடத்திலே படிச்சிருக்கேன். பாக்கி ஞானமெல்லாம் சொந்தமா சம்பாதிச்சது... சொந்தமான்னு சொல்றது தப்பு... எல்லாம் அவன் இட்ட பிச்சை. என்னுலே ஆன மட்டும் பகவத் காரியத்தை ஒண்டி ஆளா இருந்திண்டு செய்யறேன். உடம்பிலே வலு இருக்கிற மட்டும் செய்வேன். அப்புறம் அவன் இட்ட வழி.....''

அவர் கைப் பையைத் திறந்து அச்சிடப் பட்ட ஒரு தாளை ராமசேஷனிடம் நீட்டினுர்.

நாலு பக்கங்கள் அடங்கிய துண்டு வெளியீடு அது. முகப்பில் இராமன், சீதைப் படங்களும் அவர்களைப் பணிந்த நிலையில் அநுமான் படமும் இருந்தன. அடுத்த பக்கத்தில் பாஸ்போர்ட் அளவில் கிழவருடைய படம்—பத்து ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்டிருக்கலாம் — இருந்தது. யார் யாரோ பெரிய மனிதர்கள் கிழவருடைய பணியைப் போற்றி நற்சான்றிதழ் வழங்கிய குறிப்புக்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அவர் செங்கல்பட்டு அருகே களத்தூரில் ஹனுமான் கோயில் கட்டி வருகிறாராம். இதற்காகத் தம் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு மகான் என்று அவரைக் குறிப்பிட்டிருந்தார்கள்... மூன்றும் பக்கத்தில் ஹனுமான் பெருமையைப் பற்றிய வாசகங்கள். நாலாவது பக்கத்தில் கிழவர் வைணவ சமயத்துக்காக ஆற்றியுள்ள தொண்டுகள் பற்றிய விவரங்கள்.

ராமசேஷனுக்குப் புரிந்தது: கிழவர் நன்கொடைக்காக வந்திருக்கிறார்.

''கோயில் கட்ட ஆரம்பிச்சாச்சா?'' என்று கேட்டார் ராமசேஷன்.

''கட்டிண்டிருக்கேன்... இன்னும் முடிஞ்ச பாடில்லே.... எட்டு லட்ச ரூபாய் என் பட்ஜெட்.... இதுவரைக்கும் அஞ்சு லட்சம் ரூபாய் செலவாயிருக்கு... ஹநுமாருக்கு இந்த மாதிரிக் கோயில் யாருமே கட்டியதில்லேங்கிறது மாதிரிக் கட்டணும்கிறது என் ஆசை. ஏழு வருஷங்களுக்கு முன்னுலே—அன்னிக்குச் சனிக்கிழமை. ஹநுமார் ராத்திரி என் கனவிலே வந்து, 'மதுராந்தகத்திலே கோதண்டராமன் இருக்கான்; களத்தூர்லே நான் இருக்கக் கூடாதா?' என்று கேட்டார். அப்புறந்தான் ஆரம்பிச்சேன்... நானும் பிரமச்சாரி, ஹநுமாரும் பிரமச்சாரி. ரெண்டு பேருக்கும் ரொம்பப் பொருத்தம்...''

இவ்வாறு சொல்லிக் கொண்டே ஒரு ரசீதுப் புத்தகத்தை ராம சேஷனிடம் நீட்டினுர் கிழவர்.

அதில் பத்து, பதினைந்து ரசீதுகள் கிழிக்கப் பட்டிருந்தன. ஒவ்வொருவரும் ஆயிரம், ஐந்நூறு என்று நன்கொடை வழங்கியிருந்தார்கள்.

''என்னுலே இத்தனை கொடுக்க முடியாதே. நான் ரொம்ப சாதாரணமானவன்'' என்றார் ராமசேஷன்.

''பணமா பெரிசு?... பக்தி சிரத்தையோட எத்தனை கொடுத்தாலும் வாங்கிக்கிறேன்...'' என்றார் ராகவன்.

ராமசேஷன் தன் மனைவியைப் பார்த்தார்.

''எங்களுக்கு ஒரே பிள்ளை. அவன் மூணு வருஷமா எங்கே இருக்கான்னுகூடத் தெரியலே... ஹநுமார்தான் வழி சொல்லணும்'' என்றாள் அவர் மனைவி.

''பேஷா... தன்னுலே அவன் வந்து சேருவான் பாருங்கோ... நம்பினவர்களை ஹநுமார் கைவிடவே மாட்டார்... இப்படித்தான் ராமகப்பன் இருக்காரே, அவரோட பிள்ளை 'அமெரிக்காலெந்து ஒரு வெள்ளைக்காரியைத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்'னு கடிதாக எழுதியிருந்தானும். ராமகப்பன் அத்யயனம் பண்ணினவர். கடிதாசைப் பார்த்தவுடனே இடிஞ்சு போயிட்டார். நான் அப்போ எதேச்சையா அவாத்துக்குப் போயிருந்தேன். கோயிலுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்தார். நாலாம் நாள் பிள்ளையாண்டான் கடிதாக எழுதியிருக்கான்... 'வெள்ளைக்காரிக்கும் எனக்கும் ஒத்துக்கலே. நான் ஊருக்கு வந்து நீங்க சொல்ற பொண்



''கணவன் மனைவி இருவரும் ரொம்ப நல்ல மாதிரி. ஒருவர் சுதந்திரத்தில் மற்றொருவர் தலையிடுவதில்லை.''

''அப்படியா?''

''ஆமாம்: அதனுல் இருவரும் தனித் தனியே தேன் நிலவுக்குப் போய் வந்தார்கள்.'' -முத்து



மிகச் சிறந்த படத்தைத் தயாரிப்பவருக்கு மத்திய அரசு 4000 ரூபாய் பரிசு கொடுக்கிறது. ஆனால் கர்நாடக மாநில அரசு எந்தப் படம் தயாரித்தாலும் 50000 ரூபாய் கடன் கொடுக்கிறது!

- டெக்கான் ஹெரால்ட் - ''ஸிரா''

ளைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்'னு...நான் பொய் சொல்றேன்னு நெனைச்சுக்க வேணும். இப்பொவே வேணுமானாலும் ராமகப்பனே ஃபோன் பண்ணிக் கேளுங்கோ... அவரோட நம்பர் தரேன்...''

ராமசேஷன் சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தார். இவர் சொல்வது உண்மையாக இருக்குமோ? — கிழவருடைய வாக்கு சாதுர்யம், தம் அடிமனத்தில் அவரைப் பற்றிப் பல சந்தேகங்களை எழுப்பினாலும் தம் மகனைப் பற்றி ஒரு நம்பிக்கை வேரூன்றுவதற்கு இது காரணமாக இருக்குமென்ற அளவில் ஏன் நன்கொடை வழங்கக் கூடாது என்று அவருக்குத் தோன்றிற்று.

''என்னாலே நூறு ரூபாய்தான் தர முடியும்'' என்றார் ராம சேஷன்.

''கொடுங்கோ, வாங்கிக்கறேன்... நீங்க இத்தனை தரணும், அத்தனை தரணும்னு நான் கட்டாயப்படுத்தலியே...''

ராம சேஷன் உள்ளே எழுந்து சென்றார். அவருடைய மனைவியிடம் ''நூறு ரூபாய் கொடு... ஆளைப் பாத்தா ஏமாத்தறவர்னு தோணலே...'' என்றார்.

''அப்போ ஐந்நூறுக் கொடுங்களேன்... அவர் சொல்றது பலிக்கிறதான்னு பார்ப்போம்....''

''உன் பிள்ளை ஜெயிலுக்குப் போகப் போறான்.... இங்கே வந்து எப்படிக் குதிப்பான்?''

''என்ன சொல்றேள்?''

அப்பொழுது தாம் காலையில் ஃபோனில் கேட்ட செய்தியை அவளிடம் கூறினார். அவர் நினைத்தபடியே அவள் அழத் தொடங்கி விட்டாள்.

''எதுக்காக அழறே, எல்லாம் நடக்கிற படி நடக்கும்....''

''அப்போ....'' அவள் மேலே சொல்வதற்குத் தயங்கினாள்.

''அப்போ என்ன? பத்தாயிரம் ரூபாய் கொடுக்கச் சொல்றியா, ராமகப்பன் பிள்ளை வந்த மாதிரி உன் பிள்ளையும் வருவான்னு. இப்போ யாருக்குப் பத்தாயிரம் ரூபா கொடுக்கறதுன்னு புரியலே. அந்தக் கம்பெனிக்கா, ஹநுமாருக்கா...?''

''இப்படிப் பிடிவாதமா இருக்கிறது நன்னா இருக்கா? கம்பெனிக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுங்கோ...ஹனுமாருக்கு நூறு ரூபாய் கொடுக்கிறதினாலே, அவனுக்கு நிச்சயம் நல்ல புத்தி வரத்தான் போறது.''

''இதுதான் பொம்மனாட்டிகளோட 'ப்ராக்டிகல் விஸ்டம்'ங்கிறது..... ஹனுமாருக்குப் பத்தாயிரம் ரூபா கொடுங்கோன்னு சொன்னியா நீ? — ஹனுமாரை நூறு ரூபாய்க்கு நம்பற நீ, பத்தாயிரத்துக்கு ஏன் நம்பக் கூடாது?....''

''மிஸ்டர் ராமசேஷன்'' என்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. அவர் காதில் அப்பொழுது விழுந்தது. ஜனார்த்தனன் அனுப்பியதாக இந்தக் கிழவர் சொல்லிக் கொண்டிருந்தார். அவரே வந்து விட்டார்!

''சரி.. நூறு ரூபா எடுத்துண்டு வா. நான் போறேன்.''

ஹாலில் ஜனார்த்தனன் நின்று கொண்டிருந்தார். கிழவரைக் காணவில்லை!

''எப்போ வந்தேள்?'' என்று கேட்டார் ராமசேஷன்.

''இப்போதான். என்னைக் கண்டதும் ஓடிவிட்டாரே ராகவன்... ஏன் ஏதாவது பணம் வாங்க வந்தாரா?''

''நீங்க அனுப்பிச்சதான்னு சொன்னார்?''

''நானா? இந்த ஃப்ராட் கிழவரையா?''

''ஃப்ராடா?''

''பின்னே என்ன? கோயில் கட்டப் போறேன்னு ஊரை ஏமாத்திண்டு திரியறார். இவர் யார்னு தெரியுமோன்னோ?''

''யாரு?''

''என்னோட தம்பிக்குச் சின்ன மாமனார். அண்ணா செத்துப் போகச்சே, அவுட் ஹவுஸை இவருக்குச் சாசனம் பண்ணிட்டுப் போயிட்டார். அதோட இல்லே. இவருக்கும் இவரோட பெண்டாட்டிக்கும் இவர் காலம் ஆகிறவரைக்கும் சாப்பாடு போட்டாகணும்னு ஏற்பாடு வேறே... என் தம்பி மச்சினன் சாப்பாட்டைச் சாப்பிட்டுண்டே அவனைத் தூத்திண்டு திரியறார். இவர் பெண்டாட்டி மகா உத்தமி.''

ஜனார்த்தனன் உட்கார்ந்திருந்தார். ராம சேஷன் மனைவி கையில் நூறு ரூபாய் எடுத்துக் கொண்டு வந்தாள். ஜனார்த்தனன் அதைப் பார்த்துவிட்டுச் சிரித்துக் கொண்டே கேட்டார்: ''ஹநுமார் கோயிலுக்கு நன்கொடையா?''

''அவர் எங்கே?'' என்று கேட்டாள் ராம சேஷனின் மனைவி.

''அவர் இங்கே ஏன் இருக்கார்? என்னைப் பார்த்ததும் ஓடிப் போயிட்டார். சின்ன வயசிலேந்து இந்தக் கிழவர் பண்ணாத அக்கிரமம் கிடையாது. இத்தனைக்கும் நன்னா படிச்சவர்.

''...இதே படிப்பை வச்சிண்டு நல்லபடியாவும் இருக்கலாம். இவரோட அப்பா இருக்காரே, அவர் சம்ஸ்கிருதத்திலேயும் சரி, தமிழிலேயும் சரி, மகா மேதை. என் தம்பி மாமனார் இருந்தாரே, இவரோட அண்ணா, பிலாஸஃபி ப்ரொஃபஸர்... நல்ல பேரு... அவரோட வழி அப்படி, இவரோட வழி இப்படி... இதெல்லாம் யார் நிர்ணயிக்கிறாங்கிறதுதான் புரியலே....''

ராமசேஷனுக்குத் தன் மகன் அவனுடைய எழுபத்தைந்து வயதிலே எப்படி இருப்பான் என்று மனக் கண் முன் தோன்றிற்று.

''இவாளையெல்லாம் கோவிச்சண்டு ஒரு பிரயோஜனமும் இல்லே... இதை ஒரு வகையான வியாதின்னு வேணுமானாலும் வெச்சுக்கலாம்'' என்றார் ஜனார்த்தனன்.

''இந்த வியாதியைக் குணப்படுத்தவே முடியாதா?'' என்று கேட்டாள் ராமசேஷனின் மனைவி.

'தாற்காலிக மருத்துவச் செலவு பத்தாயிரம் ரூபாய்' என்று தமக்குள் கூறிக் கொண்டார் ராமசேஷன்.




முன்னைக்காட்டிலும் அதிக கோகோவுடன்.

சோடியம், பொட்டாஷியம் போன்ற விலை மதிப்பற்ற கனிஜ உப்புகளும் அடங்கியுள்ளன. அவை மட்டுமா? போஷாக்கு தரும் நற்பண்புகள் அடங்கிய, மால்ட், பால் மற்றும் சர்க்கரை போர்ன்விடாவில் மண்டிக் கிடக்கின்றன. ஒரு கப் சூடான பாலில் இரண்டு ஸ்பூன் போர்ன்விடா கலந்து, இன்சுவையுள்ள போஷாக்கைப் பருகுங்கள்.

உங்கள் செல்வங்களுக்கு தினமும் இருவேளை போர்ன்விடா வழங்குங்கள். அவர்களுடைய உடல் சீராக வளரத் தேவையான, அசாதாரண போஷாக்கைத் தந்து உதவுகிறது அது. ஏன், அவர்களுடன் ஈடுகொடுக்க, உங்களுக்கும் அது தேவை.

75 பைசா மிச்சம்

போர்ன்விடா 450 கிராம்
ரீ:பில் பேக் வாங்கி,
75 பைசா மிச்சப்படுத்துங்-
கள்! இந்தப் பேக்கைத்
திறந்தவுடனே, வழக்கமான
போர்ன்விடா டின்னில்
அதை நிரப்பி, புதுமை
கெடாமல் பாதுகாருங்கள்.



அதிகப்படியான கோகோ, அதிகப்படியான வலிமை, அதிகப்படியான இன்சுவை

OBM 6714 TM



ஸோல்ஜர்

பொன்னித்துறைவன்



இப்போது விளங்குகிறது. மனசுதான் எல்லாம். வாழ்க்கை இனிப்பதும் கசப்பதும் மனசைப் பொறுத்ததுதான்.

அப்படித்தான் சொல்லுகிறாள் இந்து. இந்த வயசிலேயே அவள் ஞானியாகி விட்டாள்.

நானுகவே குற்றவாளிக் கூண்டில் ஏறி நின்று, ''இந்து, என்னே மன்னிச்சுடு'' என்று கெஞ்சியபோது அவளது உதடுகளில் பூத்த புன்னகை! கவிழ்ந்த தலையுடன் சுட்டு விரலால் தரையில் வட்டம் போட்டவாறே, நிதானமாக — ''அப்படி யொண்ணுமில்லே. நீங்க என்ன தப்புப் பண்ணிட்டேன்? அதெல்லாம் வேளையின் அவசரம்'' என்று முகத்தை என் பக்கம் திருப்பாமலேயே கூறியபோது அவளது கண்கள் பனித்ததாக நான்தான் கற்பனை செய்து கொண்டேனோ?

கக்கத்தில் இடுக்கிய ஆதாரக் கோல்களோடும் ஒற்றைக் காலோடும் தாவித் தாவி நடந்து, சந்து பொந்துகளைக் கடந்து ஒரு முச்சந்தியில் வந்து திரும்பிப் பார்க்கிறேன். இன்னைத் தூணை அணைத்துக் கொண்டே தூரத்திலிருந்து இந்து பார்த்துக் கொண்டிருக்கிறாள். அருகில் அவளது கடைக் குட்டி புடவைத் தலைப்பை இழுத்துக் கையில் இடுக்கிக்கட்டை விரலைச் சப்புகிறது.

மூலை திரும்பினுல் வேறு தெரு. அவள் மறைந்து விடுவாள். நான் கையைத் தூக்கி ''டாட்டா'' சொல்லுகிறேன். கண்ணீர் பார்வையை மறைக்கிறது.

சிந்தனைப் பொறியொன்று கால வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட்டுப் பழசைத் தேடிப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னுலிருந்த சித்தி வீட்டுக் கிணற்றடிக்குப் பக்கத்தில் தெறித்து விழுகிறது.

இந்து துணி தோய்த்துக் கொண்டிருக்கிறாள் — வேலை செய்வதற்கு அனுகூலமாகப் புடவையை முழங்கால் வரை தூக்கிச் சுற்றி இடுப்பில் சொருகிக்கொண்டு. மாடியிலிருந்து உற்றுப் பார்க்கிறான் லெப்டினெண்ட் மணி. செழிப்பு மிக்க அவளது உடற்கட்டில் தன்னை இழந்து லயித்திருக்கிற தருணத்தில், ஏதோ சாக்கில் அவள் முகத்தை மேலே திருப்பு [illegible] நிலைமைக் கண்டுவிட்டுச் சடாலென்று சொருகிய புடவையை இழுத்துவிட்டுக் கால்களை மூடிக்கொள்கிறாள். பிறகு மீதம் இருக்கும் துணிகளை அவசரம் அவசரமாகக் கசக்கிப் பிழிந்து கொண்டு சடுதியில் அவ்விடத்தை விட்டு அகல்கிறாள். உள்ளே போகுமுன் நெற்றியில் விழும் சுருட்டையை ஒதுக்கிக் கொள்ளும் பாவனையில் எதேச்சையாகப் பார்ப்பது போல் மேலே பார்த்த பார்வை! அகலமான பளீர் வெள்ளையில் உருளும் கருவண்டு விழிகள் பேசிய பாஷை! அன்றைய லெப்டினெண்ட் மணி சொக்கிப் போனான்.

லீவுக்குச் சித்தி வீட்டில் தங்கிய பதினைந்து நாட்களில் அவனுக்கு அடுப்படியில் உதவ வந்த இந்து மூலமாக எவ்வளவோ சின்னச் சின்ன ருசிகள், லயிப்புக்கள், கனவுகள், கற்பனைகள்....

—'நீங்க சண்டை போடற இடத்துலே சிங்கம் புலி யெல்லாம் வருமா?'

—'உங்களுக்கு யார் சமைச்சுப் போடுவா?'

—'நீங்க எவ்வளவு பேரைக் கொன்னுருப்பேள்?'

—'செத்தவாளைப் பார்த்தா பயமா யிருக்காது?'

—'சாகத் துணிஞ்சுதானே பட்டாளத்துலே சேரணும்?'

குழந்தை மாதிரி எவ்வளவு கேள்விகள்! தன்னை அவள் ஹீரோவாக நினைத்துக்கொள்ள வேண்டும் என்று அவன் அளந்த அளப்புகள்! அப்போது அவளைத் தொட்டு 'ஸல்யூட்' அடிக்க வைத்த இன்பம்! பிறகு அவன் இடுப்பைச் சுற்றி அவன் வளைத்தது...

'பலவீனமான தருணம்' ஒரு நாள் அவர்களைக் குப்புறக் கவிழ்த்தது.

குப்பென்று வைர மணிகளாய்ப் பூத்த வியர்வைத் துளிகள் ஒன்றோடொன்று இணைந்து தாரை தாரையாக நெற்றியிலிருந்து கன்னத்தில் இறங்கி, அங்கு ஏற்கனவே பிரவாகமாய் வருஷித்துக் கொண்டிருந்த கண்ணீருடன் சங்கமமாகி, அலங்கோலமாக — அவசரமாக — அவளது உடலில் சுற்றியிருந்த நைந்துபோன புடவையை சரமாக்கின. அழுது கொண்டு அடுக்களையின் ஒரு மூலையில் முடங்கிக் கிடந்தாள். குளிர் ஜுரம் போல் உடலெல்லாம் உதறிக் கொண்டிருந்தது... அவன் பக்கம் திரும்புவதற்கே அஞ்சினாள்.

''போயிடுங்கோ... என் கிட்டேயே வராதீங்கோ... ஐயோ, போயிடுங்களேன்...''

ஏதேதோ புலம்பல்கள், ஏதேதோ சமாதானங்கள். ''இதோ பார், உனக்கு ஒன்றும் நேராது. நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று தைரியம் சொல்கிறான் ஆண் பிள்ளை.

ஒரே தாவலில் இரு கைகளையும் நீட்டி அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டு, ''நெஜமாகவே என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேளா?'' என்று கேட்கும்போது அவன் முகம் வெளிறிப் போகிறது. அவளது கைகளை மெதுவாக விலக்கிவிட்டு வேறு புறமாகத் திரும்பி நிற்கிறான். அவள் தொய்ந்து விடுகிறாள். மீண்டும் நயனங்களில் நீர்த்தாரை. நெற்றியிலே ஸ்படிக மணிகள். ''பகவானே!'' என்று அலற ஆரம்பிக்கும் அவளது வாயைச் சடாரென்று திருப்பிப் பொத்திவிட்டு, ''உஷ்... மாடியிலே சித்தப்பா இருக்கார்'' என்று எச்சரிக்கிறான்.

இரவு தூக்கத்தில் இந்து வந்து நிற்கிறாள். பார்வை பயங்கரமாக இருக்கிறது. அவ்விழிகளின் கொதிப்பு, மணியின் உடலுக்குள் இறங்கி இரத்தத்துடன் கலந்து ரோமத் துவாரங்கள் வழியாக புஸ் புஸ்ஸென்று சீறுகிறது. உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு விழித்துப் பார்க்கிறான். பிறகு தூக்கமேயில்லை.

மறுநாளிலிருந்து இந்து வேலைக்கு வரவில்லை. சித்தியே சமையலைக் கவனித்துக் கொள்ளும்படியாயிற்று. இந்துவுக்குச் சொல்லியனுப்பியும் பயனில்லை.

நாலு நாட்கள் கழித்துச் சிவன் கோவிலில் அவள் நுழைவதைத் தூரத்திலிருந்து கவனித்த மணி அவசரம் அவசரமாக நடந்து மேலண்டைப் பிராகாரத்தில் மடக்கினான். டைபாயிட் ஜுரத்தில் அடிபட்டது போல் வெளிறிக் கிடந்தாள். ''இந்து'' என்று மெதுவாக அழைத்தான். அவள் அதிர்ந்து நின்றாள்.


''இந்து, ஏன் வராமல் நின்னுட்டே? சித்தி ரொம்பக் கஷ்டப்படறா... திடீரென்று இப்படி நின்னுத் தப்பா நெனச்சுக்க மாட்டாளா?''

பதில் இல்லை.

''லீவு முடிஞ்சு நாளைக்குக் கிளம்பறேன். அப்புறம் எப்போ வருவேனோ?''

விசும்பல் ஒலி கேட்கிறது. குலுங்குகிறாள். பீறிட்டு வரும் அழுகையை அடக்கிக்கொண்டு ஓடிவிடுகிறாள் இந்து. மணி ஒன்றும் புரியாமல் விழிக்கிறான்.

மறுநாள் மாட்டு வண்டியின் குலுக்கலோடு மல்லாடிக் கொண்டே சீருடையணிந்த லெப்டினண்ட் மணி, அருகிலேயே பவனி வரும் காவிரிச் சுழல்களில் கண்களை உலவ விட்டுக் கொண்டே அனுமார் கோவில் படித்துறையைக் கடக்கையில், கையில் குடமேந்திய இந்து ஒவ்வொரு படியாக மேலே ஏறி வருவதைக் கண்டு வண்டியை நிறுத்தச் சொல்லி, அவனிடம் ஓடுகிறான். மருண்டு



போட்டிக் கதை: 5



எமன் : இந்தப் பாவியை இன்னுமா என்னைக் கொப்பரையில் போடவில்லை ?

கிங்கரன் : பிரபோ, எங்கு தேடியும் என்னைக் கட்டுப்படியாகிற விலையில் கிடைக்கவில்லையே, என்ன செய்வது ?

ஒதுங்கிக் கொள்ளும் அவசரத்தில் குடம் தளும்பிப் புடவையை நனைக்கிறது. சீருடையில் சட்டென்று மணியை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் முதலில் தவித்து விட்டு, பிறகு தலையைக் குனிந்து கொள்கிறாள். முதல் நாளிலிருந்த பதற்றமில்லை. முகம்கூடச் சற்றுத் தெளிவாகி யிருக்கிறது.

''ரயிலுக்குப் போயிண்டிருக்கேன். என் மனசு ரொம்பக் குழம்பியிருக்கு. நேத்திக்குக் குழந்தை மாதிரி கோவிச்சுண்டு ஓடிட்டே... என்னைப் பத்தி நீ என்ன நெனைக்கிறயோ.... வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசக் கூடாதா ?''

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு மீண்டும் தலையைக் குனிந்தவாறே அவள் — ''திருப்பியும் யுத்தமா ?''

''சொல்ல முடியாது. இப்போ ஒண்ணும் தெரியலே....''

''இந்த உத்தியோகம் வேண்டாமே....''

'' ஏன்? இதுக்கு என்ன கொறைச்சல் ?''

''எனக்குப் பயமா இருக்கு....''

''உன்னையா போருக்கு அனுப்பறா ?''

அவள் களுக்கென்று சிரிக்கிறாள்.

'' என் மேலே கோவமில்லேன்னு ஒரு வார்த்தை சொல்லேன்....''

'' கோவமா, இல்லையான்னு எனக்கே புரியலே. ஆனால், நீங்க திரும்பிப் போறது மனசை என்னவோ பண்ணறது. எப்படியோ புசுக்குன்னு இப்படியோர் உறவு முளைச்சுடறது. நீங்க இந்த நாட்டையே காப்பாத்தற போர் வீரர். நான் சமையல்காரி. நீங்க தியாகம் பண்றேள். நான் சமையல் பண்ணறேன். இரண்டையும் சேர்த்து நினைக்கிறப்போ சிரிப்பா வரது. இது சேர முடியாத விஷயம்..... உங்களுக்கு இந்த உடை ரொம்ப நன்னா இருக்கு....''

'' இந்து ! உன்னை என்னாலே மறக்கவே முடியாது. நான்தான் அயோக்கியத்தனமா நடந்துண்டுட்டேன். இதுக்கு என்ன தண்டனை காத்துண்டிருக்கோ....''

''ஐயையோ! அப்படியெல்லாம் சொல்லாதீங்கோ....''

''நேரமாயிடுத்து, இந்து.''

''நல்லபடியா போயிட்டு வாங்கோ...''

உயிருடன் பிரிவதும் இறப்பின் தரிசனம் தானோ ? ஏன் இப்படி அழுகை பீறிடுகிறது? நெஞ்சக் கடைசல் உயிரைக் கொக்கி போட்டு இழுப்பானேன்? தனித் தனியாய், திமிரிய் நிற்கிற அகங்காரங்களெல்லாம் எங்கே ? கண்களில் வழியும் உப்பு நீர்தான் உறவுக்கு உரமா ? உறவு என்பதே பிரிவில் பிரகாசிக்கும் தத்துவம்தானோ ?

''போய்க் கடிதாசு போடுவேளா?'' என்று கூற வந்தவள் நாவை அடக்கிக் கொண்டு மென்று விழுங்குகிறாள். எதற்கும் விலாசத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டால் என்னவென்று சபலம் தட்டுகிறது. கேட்கிறாள். அவன் நிமிஷத்தில் எழுதி நீட்டுகிறான்.

'' நான் எழுதினா சிரிக்காதீங்கோ. பைத்தியம் மாதிரி ஏதாவது கிறுக்குவேன். கையெழுத்துக்கூட நன்னா இருக்காது. ஆனால் பதில் போடாதீங்கோ.... என்னை ஞாபகம் வச்சிப்பேளா? இல்லே, துஷ்யந்தன் மாதிரி மறந்துடுவேளா ?''

அவனிடம் பதில் இல்லை.

''மன்னிச்சுடுங்கோ. நான் தப்பாப் பேசிட்டேனோ என்னவோ... இங்கே இந்த வேளையிலே தனியா உங்களோட நிக்கறது சரியில்லே. நான் வரட்டுமா ?''

அவள் சடக்கென்று திரும்பி நடக்கிறாள். இவன் வெகுநேரம் அங்கேயே நிற்கிறான். படித்துறையில் வந்து மோதும் சிற்றலைகள் 'களுக் களுக்' கென்று சிரிக்கின்றன.

வடமேற்கு எல்லையின் முன்னணிப் பிரதேசமொன்றில் ஒரு 'டெண்ட்'டுக்குள் அமர்ந்து கையில் இருக்கிற கடிதத்தையே வெறித்து நோக்குகிறான் லெப்டினென்ட் மணி.

''அநேக நமஸ்காரம். நீங்க உடம்பு ஒண்ணுமில்லாம இருக்கேளா? இங்கு எல்லாரும் சௌக்கியம். எனக்கு என்ன எழுதறதுன்னு புரியலே. ஒரு மணியா மன்னாடிண்டிருக்கேன். அம்மா உங்க சித்தியாத்துக்குத் தான் போயிருக்கா. பழையபடி நான்தான் அங்கே சமையல் பண்றேன். மூணு நாளா போக முடியலே. புரியறதா ? சமையல் பண்ணிண்டேயிருக்கும் போது மனசு திடீர்னு சூன்யமாயிடறது. உடம்பெல்லாம் என்னமோ பண்றது. சித்திகூட, ஏண்டி என்னமோ மாதிரியிருக்கேன்னு பல தடவை கேட்டுட்டா. என்ன பதில் சொல்றது? இப்படி மனசை ஓட விடறது தப்புன்னு எனக்கே புரியறது. அவாவா நிலையைப் புரிஞ்சிண்டு ஆசைப்படணும். அந்த டிரஸ் உங்களுக்கு ரொம்ப நன்னாயிருந்தது. அப்படியே கண்ணிலே நிக்கறது. படித்துறைக்குப் போனா மனசு ரொம்பக் கஷ்டப்படறது. நாம நின்ன இடத்துக்குப் போய் உங்க வண்டி போன திக்கையே பார்த்துண்டு பைத்தியம் மாதிரி தினம் நிக்கறேன். அம்மாவுக்குத் தெரிஞ்சா கொன்னுடுவா. நீங்க எப்ப வருவேள்? நான் அப்போ எங்கே இருக்கேனோ. அம்மா மும்முரமா கல்யாணத்துக்குப் பார்த்துண்டிருக்கா. எனக்கு ஒண்ணும் புரியலே. இந்தக் கடுதாசைக் கிழிச்சுப் போட்டுடுங்கோ. அநேக கோடி நமஸ்காரம். — இந்துமதி.''

சுத்தமான
காப்பியையே
விரும்பும்
இரசிகர்களைத்
திருப்திப்படுத்தும்
ஒரே ஒரு இன்ஸ்டன்ட் காப்பி

இதுதான்.



அரைத்த, சுத்தமான
காப்பியிலிருந்து
தயாராகும் ஒரே
இன்ஸ்டன்ட் காப்பி
நெஸ்க:ஃபே ஒன்று தான்
தன்னிகரில்லாத,
தென்னிந்தியக்
காப்பியின் தெவிட்டாத
மணத்தை—நொடியில்—
அள்ளித்தருகிறது
நெஸ்க:ஃபே. நூற்றுக்கு
நூறு பத்தரை மாற்றுப்
பொன்னைப் போல—
சுத்தமான இன்ஸ்டன்ட்
காப்பி நெஸ்க:ஃபே ஒன்றே.

நெஸ்க:ஃபே

—100% சுத்தமான காப்பியிலிருந்து தயாராகும்
இன்ஸ்டன்ட் காப்பி இது ஒன்றே.

உலகெங்கும்
அதிகமாய்
விற்பனையாகும்
இன்ஸ்டன்ட காப்பி

A **NESTLÉ** product

HNCM-28-75 TAM

எப்பொழுதோ எழுதிய கடிதம். முகவரி தெளிவாக இல்லாததால் நாள் கழித்து வந்திருக்கிறது. இரண்டு நாட்கள் கழித்துச் சித்தியிடமிருந்து தபால் வந்தது. இந்துவுக்குக் கல்யாணம் நிச்சயமாகி இருப்பதாகவும் என்னால் முடிந்த உதவியைச் செய்யுமாறும் எழுதியிருந்தாள். இன்னும் இரண்டு நாட்கள் கழித்து இந்துவிடமிருந்து இரண்டே வரிகளில் ஒரு கடிதம் வந்தது.

''பதினெட்டாம் தேதி கல்யாணம். நான் எழுதின கடுதாசைக் கிழிச்சுப் போட்டேளா? எனக்குக் கையும் ஓடலை. காலும் ஓடலை. கிழிச்சுப் போட்டுடுங்கோ.''

மணி கிழித்துப் போடவில்லை. இன்னொரு முறை படித்துவிட்டுப் பெருமூச்சுவிட்டான். போர்க்களத்தில் மரணத்துக்கு வெகு அருகில் அமர்ந்து அதோடு அளவளாவும் அவ்வேளையிலும் எங்கோ ஒரு மூலையில் அநாதரவாக ஒரு ஜீவன் தனது அரவணைப்புக்காக ஏங்கித் தவிப்பதைச் சித்திரிக்கும் அக்கடிதம் அவனுக்கு மகாகாவியமாக இருந்தது. இத்தனைக்கும் அவன் வாக்குக் கேட்கவில்லை. அவளும் கொடுக்கவில்லை. ஆனால் —

மனசுதான். எல்லாம் மனசுதான்.

செல்லியம்மன் கோயில் வந்துவிட்டது. பஸ் ஸ்டாண்டுக்கு இன்னும் நாலு பர்லாங் இருக்குமா? ஒற்றைக் காலை வைத்துக் கொண்டு எவ்வளவு நடப்பது?

இந்துவுக்குக் கல்யாணமாகிப் பன்னிரண்டு வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. நாலைந்து குழந்தைகள்.

சித்தி சொன்னாள். தஞ்சாவூர் காமாட்சியம்மன் கோயிலில் எதேச்சையாக இந்துவைச் சந்தித்தாளாம். ''அவ அழகெல்லாம் எங்கே போச்சுன்னே தெரியலேடா! வயசாறது வேறே, கிழவியாறது வேறேன்னு இப்போதான் புரியறது. அவளுக்கு இன்னிக்கெல்லாம் முப்பத்திரண்டு வயசு இருக்குமா?''

அரசாங்க ஆஸ்பத்திரியில் இருக்கும் கணவனைப் பார்க்க வந்திருப்பதாகச் சொல்லி அதிகம் பேசாமலிருந்த அவள் வாயைக் கிளறியது சித்திதான். ஏதோ மேலெழுந்தவாரியாகச் சொல்ல ஆரம்பித்துக் கடைசியில் மடை திறந்தாற்போல் கொட்டித் தீர்த்து விசும்பி விசும்பி அழுதாளாம். ''அம்மாவும் போயிட்டா. இவருக்கும் மலேயா வந்துடுத்து. நான் என்ன பண்ணுவேன் மாமி? விவரம் புரியாத குழந்தைகளை வைச்சுண்டு ரொம்பக் கஷ்டப்படறேன், மாமி!'' என்று கோவென்று கதறித் தீர்த்தாளாம்.

அந்த முப்பத்திரண்டு வயதுக் கிழவியைத் தேடி ஒரு நொண்டி விந்தி விந்திச் செல்கிறான். பழங்கள், பிஸ்கட்டுகள், பூச்சரம் ஆகியவை அடங்கிய பை ஒன்று அவன் தோளில் தொங்குகிறது. நாற்றம் எடுக்கும் சந்துகள் வழியாக வளைந்து வளைந்து அவசரமாகச் செல்கிறான்.

பத்து குடித்தனங்களைத் தாண்டி இந்துவின் அறைக்குமுன் போய் நிற்கிறான். பத்துக்கு எட்டில் ஒரு கரிய குகை. ''யாரு?'' என்று பதற்றத்துடன் குரல் வரும் திக்கை நோக்குங்கால் அவனுக்குத் தலையைச் சுற்றுகிறது. நிஜமாகவே கிழவிதான். இவனைக் கண்டதும் புடவையை இழுத்துப் போர்த்திக் கொண்டு—



மதுரை அருகே ஒத்தக்கடையில் 'நர்ஸரி ஸ்கூல்' என்பதை 'மழலையர் பள்ளி' என அழகாக மொழி பெயர்த்திருக்கிறார்கள். திருஞான சம்பந்தர் மழலையர் பள்ளி என்பது பள்ளியின் முழுப் பெயர்.

தகவல்: நா. க. க. சரவணப்பிரபு

'' நீங்களா? பகவானே! இது என்ன கோரம்?'' என்று கேட்டாள்.

'' நானேதான்.....!''

உள்ளே போய் அவள் இழுத்துப் போடும் ஸ்டூலில் உட்காருகிறான். பையை எடுத்து அவளிடம் கொடுக்கிறான். உடல் குப்பென்று வியர்க்கிறது.

'' எப்போ வந்தேள்?''

''ரெண்டு நாளாச்சு.''

''....காலுக்கு என்ன ஆச்சு?''

'' சண்டையிலே போயிடுத்து.''

''ஈசுவரா.... ஐயோ, என்ன கொடுமை!''

''காலு போச்சு, பட்டம் வந்தது.''

''எனக்குப் புரியலையே....!''

'' நான் இப்போ மேஜர். மேஜர் மணி!''

அவன் போலிப் பெருமையாகக் கனைக்கிறான். அவள் இலேசாகச் சிரிக்கிறாள். ''அப்பவே நீங்க மேஜர்தான்!'' என்று மெதுவாகக் கூறிவிட்டுத் தலையை நிமிர்த்தி அவனை ஒரு கணம் பார்த்துவிட்டு மீண்டும் குனிந்து கொள்கிறாள். மேஜர் வாய்விட்டுச் சிரிக்கிறான்.

''ஒத்தைக் காலை வைச்சுண்டு ரொம்பக் கஷ்டமாயில்லே?''

''பழகிப் போயிடுத்து...''

அவள் யோசிக்கிறாள். பிறகு, ''எனக்குந்தான்'' என்கிறாள்.

''நீ என்ன சொல்லறே?''

''பொதுவாகச் சொல்றேன். எல்லாமே பழகித்தான் போயிடறது. இங்கே இருக்கிற இருட்டே எனக்கு வெளிச்சமா ஆயிடுத்து...''

''சித்தி ரொம்ப சொன்னா... மனசுக்குக் கஷ்டமா இருக்கு...''

'' நான்தான் அசட்டுத்தனமா உளறிக் கொட்டிட்டேன். என்ன பொல்லாத கஷ்டம்? பழகிப் போயிட்டா அதுவே சந்தோஷமாயிடறது. சந்தோஷம்னு தனியே ஒண்ணு இருக்கா என்ன? கஷ்டந்தான் சந்தோஷம்.... சந்தோஷந்தான் கஷ்டம்...''

''இந்து!''

'' நெஜமாத்தான் சொல்றேன். என்னைப் பொறுத்தவரை வாழ்க்கைங்கிறது முடிவேயில்லாத தீ மிதி... நனவு தெரிஞ்ச நாளா நெருப்பிலேயேதான் நடந்துண்டிருக்கேன். பழகிப் போயிடுத்து. சந்தோஷமாயிருக்கு. இப்போ குளிர்ந்த மண்ணிலே நடந்தால் கால் கொப்புளிச்சுடும்... அப்படியாயிடுத்து...''

'' நீ ரொம்ப நொந்து போயிருக்கே. உனக்கு ஆறுதல் சொல்றதுக்குக்கூட எனக்கு வக்கு இல்லை....''

''ஆறுதல் எதுக்கு? நெஜமா சொல்றேன். சந்தோஷமாத்தான் இருக்கேன். தெரு ஓரத்திலே சாக்கடைக்குப் பக்கத்திலே குடித்தனம் பண்ணற ஜனங்களுக்கெல்லாம் யாரா

வது ஆறுதல் சொல்லுனா என்ன? அவாளுக்கு நான் எவ்வளவோ தேவலே. அப்படித்தான் நெனச்சுப் பார்த்துக்கணும். துக்கத்துக்குள்ளே ஆழமா மூழ்கிப் பார்த்தால் சூட்சுமம் புரியறது. சந்தோஷமும் துக்கமும் மனசுலே நெனச்சிக்கிறதுதான்....''

''நீ என்னவெல்லாமோ பேசறே. நான் ஓர் அடி முட்டாள். உன் கஷ்டத்துக்கெல்லாம் நான்தானே காரணம்?''

''அது எப்படி? உங்க பேரிலே என்ன தப்பு? வேலையின் அவசரத்துக்கு நாம முட்டுக்கட்டை போட முடியுமா? ஏதோ நேர்ந்துடுத்து.... நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கவும் முடியாது. சப்பை சொல்லக் கழுகாட்டமா ஒரு சமூகம் உட்கார்ந்திண்டிருக்கே! ராணுவ அதிகாரி எங்கே சமையல்காரி எங்கே! அப்படியே பண்ணிண்டிருந்தாலும் உங்களையும் இழுத்துண்டு தெருப்பிலே நடக்க வச்சிருப்பேனோ என்னவோ!''

இதைச் சொல்லிவிட்டுக் கலகலவென்று சிரிக்கிறாள். சூழ்நிலையின் கடுமை இளகுகிறது.

''கல்யாணம் ஆயிடுத்தா?''

''இல்லே....''

''ஏன்?''

காலைக் காட்டிச் சிரிக்கிறான். அவன் முகம் கடுமையாகிறது. மௌனம். கண்களில் இரு மணிகள் பூக்கின்றன. புடவைத் தலைப்பு ஒற்றியெடுக்கிறது.

''இந்து....''

''ஹாம்?''

''இந்து.... நீ மனுஷியே இல்லே.... உன்னைக் கண்டா எனக்குப் பயமா இருக்கு. எழுந்து நில்லேன். நமஸ்காரம் பண்றேன்...''

அவள் பதறி எழுந்து மூலையில் சென்று ஒதுங்குகிறாள். முகத்தைப் பொத்தியவாறே குலுங்கிக் குலுங்கி அழுகிறாள்.

''இந்து! உன்னை அழவிடறதுக்காகவா இங்கே வந்தேன்? ப்ளீஸ், அழாதே. நீ அழுதா எனக்கு என்னவோ பண்றது....''

''நீங்க என்னவெல்லாமோ பேசறேள். என்னால் தாங்கலே முடியலே....''

''உண்மையைத்தான் சொல்றேன். இந்து. தபஸ் பண்றதுக்குக் காட்டுக்குத்தான் போகணும்! அடுப்படியிலேயே இருந்துண்டு பண்ணிக் காமிச்சுட்டே. நான் தேசமெல்லாம் சுத்திட்டு நொண்டியா வந்து சேர்ந்திருக்கேன். நீ ஒரு இருட்டு அறையிலேயே உட்கார்ந்துண்டு ஞானியாயிட்டே. இந்து. நான் முதல் முதல்லே உன்னைப் பார்த்தபோது மனசுலே எழுந்த கிளர்ச்சிகளெல்லாம் இப்ப எங்கே போச்சுன்னே தெரியலே. நீ மேருமலையா உசந்துட்டே. நான் ஏதாவது உதவி செய்யலாமான்னு கேக்கறதுகூட அபசாரமா தோண்றது. நமஸ்காரம் பண்ணவும் விடமாட்டேங்கறே....''

''மணி! என்னை ரொம்ப சோதிக்கிறேள். வேறே ஏதாவது பேசுங்கோ....''

''இந்து...''

''ஹாம்?''

''உன் கணவருக்கு எப்படி இருக்கு?''

மௌனம்.

''ரொம்ப நாட்களா உடம்பாமே. என்ன உடம்பு?''

மௌனம்.

''இந்து. ஏன் பேசமாட்டேங்கிறே?''

''அவர் போய் ஒரு வாரமாச்சு!''

CMGS. 88-303

சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 6

'பூர்வ ஜென்மமா?'

"அஞ்சற்க! இந்நாகம் நம்மை ஏதும் செய்யாது!" என்றாள் தரங்கிணி.

கழுத்தில் விழுந்த நாகம் கைவழியே இறங்கி, மெதுவாகக் கர்ப்பகிரஹ அறைக்குள் நுழைந்தது.

"இந்த நாகர்கோயில் எப்போது கட்டப்பட்டது என்ற விவரம் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார் சேரமான்.

உடனே தரங்கிணி எழுந்து, நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த ஒரு குந்தங் கம்பைக் கையில் எடுத்து, சுவரின் ஒரு பகுதியைக் காட்டினாள். அங்கே ஒரு பெரிய கருங்கல் பதித்திருந்தது.

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முந்திய தமிழ் எழுத்துக்களில், ஏதோ அதில் எழுதப்பட்டிருந்தது. ஓரளவுக்கு அதைப் படிக்கக்கூடிய சக்தி சேரமானுக்கு இருந்ததால் படிக்க முயன்றார்.

"பரம்பின் கோமான் பாரியும், கொல்லி நாடன் வல்வில் ஓரியும், ஒருங்கே தோன்றியவன் போல் தோன்றியவனும், சேர, சோழ பாண்டியர் மூவரையும் ஒருங்கே எதிர்த்த மலையமான் திருமுடிக்காரியின் இனத் தோன்றலுமாகிய மலையமான் ஆய் ஆதற்கு யாண்டு பதினேழு. ஆயின் கோடு கொண்டு அரசு புரிந்த காலை உதயகிரி கைவசமாக, ஆய் ஆதன் கண்டது இக்கோயில். வெள்வேல் ஏரிக் கரையில் ஐந்து தலைநாகம் தோன்ற ஆய் ஆதன் அதனைச் சிவ, மறுநாகம் தோன்றிற்று. ஆதலின் இக்கோயில் ஆய் ஆதனால் எழுப்பப்பட்டது. இவ்வுதயகிரி மலையும் ஆயிரத்து ஐந்நூறு கோக்களும் நிவந்தமாயின."

—இவ்வளவுதான் சேரமானால் படிக்க முடிந்தது.

ஆய் ஆதன் பற்றிச் சேரமானும் கேள்விப்பட்டதுண்டு. 'வஞ்சியை ஆண்ட எழினியின் மரபினனே ஆதன்' என்று சேரமான் படித்ததுண்டு.

'இவன் ஆய் அண்டிரனுக்கு முந்தியவனா, பிந்தியவனா' என்பது சேரமானுக்குப் புரியவில்லை. எனினும் அவர் அது பற்றிக் குழப்பிக் கொள்ளவில்லை.

'ஆய் வழியினர், திருவிதாங்கோட்டுக்கு உரிமை கொண்டாடுவதில் நியாயம் இருக்கிறது' என்பது மட்டும் அவருக்குப் புரிந்தது.

"இவ் ஆய் வழி வழியே நாங்கள்" என்றாள் தரங்கிணி.

"இந்தக் கல்வெட்டை உன்னால் படிக்க முடியுமா?" என்று கேட்டார் சேரமான்.

"இயன்றவரை" என்றாள் தரங்கிணி.

அந்தக் கல்வெட்டையும், அவள் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தார், சேரமான். இப்போது அவள் முகத்தில் ஒரு ராஜ வம்சத்தின் களை தோன்றலாயிற்று.

"இம்மலையாங்களும் நீ பார்த்ததில்லை. வியன்மிகு காட்சிகள் உண்டு" என்றாள் தரங்கிணி.

"அப்படி என்ன உண்டு?" என்று கேட்டார் சேரமான்.

"பாடும் மீன்கள் நிறைந்த ஊருணி. அவ்வூருணியின் நீர் இரவிலே வெப்பம், பகலிலே குளிரும்" என்றாள் தரங்கிணி.

"அதை நான் பார்க்கலாமா?" என்று கேட்டார் சேரமான்.

"இதுவே நேரம்" என்ற தரங்கிணி, கைதட்ட, ஏற்கனவே தீக்கம்பு எடுத்து வந்த இரண்டு பெண்களும் உள்ளே நுழைந்தார்கள்.

"வருக" என்று தரங்கிணி முன்னால் நடந்தாள்.

படிக்கட்டைத் தாண்டியதும், மீண்டும் அங்கிருந்த சங்கை எடுத்து ஊதி

னாள். கோயிலுக்குள் இருந்த கிழவரும் அதுபோலவே ஊதினார்.

தரங்கிணியைப் பின்தொடர்ந்து ஊருணியை நோக்கி நடந்தார் சேரமான்.

'உலகில்தான் எத்தனை அற்புதமான காட்சிகள் இருக்கின்றன? அதிலும் சேரநாட்டின் ஒரு பகுதியிலேயே எவ்வளவு சிறப்பான காட்சிகள்! அரசியல் ஆரவாரத்தினால், இவற்றைக் காணக் கூட முடியாமல் இருந்ததே' என்று அவர் வருந்தினார்.

போகின்ற வழியில், மரங்களின் மீது கூட்டம் கூட்டமாக அமர்ந்திருந்த வண்ண வண்ணப் பறவைகளை அவர் கண்டார். நெருப்பைப் பார்த்தும் மனித அரவத்தைக் கேட்டும் அவை 'குப்'பென்று பறந்ததும் மீண்டும் மரத்தில் வந்து அமர்ந்ததும்கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.



ஒரு சிறிய ஊருணி. பழங்காலக் கற்கட்டு. சில கற்கள் பெயர்ந்து அங்கே சிறுசிறு மரங்கள் முளைத்திருந்தன. ஒரு கல்லுக்கும் மறு கல்லுக்கும் இடையே உள்ள வெளியில் பெரிய அளவுள்ள புற்கள் முளைத்திருந்தன.

பச்சை நிறத்தில் தண்ணீர் காட்சி அளித்தது. அதன் கரையிலே வந்து நின்றாள் தரங்கிணி. முதல் படிக்கட்டில் இறங்கினாள். மெதுவாக அமர்ந்தாள், சேரமானையும் அமரச் சொன்னாள்.

கன்னத்திலே கை வைத்தபடி மெல்லிய குரல் கொடுத்தாள். திரும்ப அதேபோல் ஒரு குரல் எதிரொலித்தது. அதை 'எதிரொலி' என்றுதான் சேரமான் கருதினார். ஆனால் திடீரென்று தண்ணீரில் மெதுவாக அலை எழுந்தது.

'வரால் மீன்' அளவுக்குப் பொன் நிறத்து மீன் ஒன்று, ஆனால் உருவத்தில் வட்ட வடிவமாகத் தலைதூக்கிற்று.

அவள் மீண்டும் குரல் கொடுத்தாள். அந்தக் குரலின் கடைசிப் பகுதியை மட்டும் அந்த மீன் பாடிற்று.

மெது மெதுவாக ஒன்று, இரண்டு, மூன்று என்று நூற்றுக்கணக்கான மீன்கள் தண்ணீருக்குமேல் தலை காட்டின. ஒரு பெரிய கூட்டு இசையையே அவை பாடத் தொடங்கின.

ஆனால் அது பாட்டு மாதிரி சேரமானுக்குத் தெரியவில்லை. 'பசியில் அலறுவது' போலவே தோன்றிற்று.

அவர் தண்ணீரில் கை வைத்துப் பார்த்தார். நல்ல வெந்நீராக அது இருந்தது.

அவள் நாணத்தோடு, ''நான் குளிக்கப் போகிறேன்'' என்றாள்.

சேரமான் தம் கண்களை மூடிக் கொண்டார்.

மார்புக் கச்சையை அவிழ்த்து வைத்துவிட்டு, கரங்களால் மார்பகத்தை மூடியவண்ணம் ஊருணியில் இறங்கினாள் தரங்கிணி. பார்த்தால், ஆழம் நிறைந்ததாகத் தோன்றிய அந்த ஊருணி, அவளுக்குக் கழுத்தளவே இருப்பதாகச் சேரமானுக்குத் தோன்றிற்று.

உண்மையில் அது ஒரு வகையான நீச்சல். வடமொழியில் 'ஜல ஸ்தம்பம்'

என்பார்கள். தேவதைகள் மட்டுமே அப்படிக் குளிப்பதாக ஐதிகம்.

அவள் குளித்துக் கொண்டே பாடினாள்; பாடிக் கொண்டே குளித்தாள். அல்லிக் கொடியின் வேர்கள் தண்ணீருக்கு மேல் பரந்து கிடப்பது போல், அவளது கூந்தல் நீரிலே மிதந்தது.

'மலை நாடுடையாய்; மாணிக்க வல்லி!

சற்றே உன் கதவைத் திற!

உனது இளங்காற்றில் நான் குளிக்க வேண்டும்.

உனது இனிய தாலாட்டுக்காக நான்மறுபடியும் குழந்தையாக விரும்புகிறேன்.



மேலே வானத்தையும், சுற்றிலும் மலையையும் தவிர, என் கண்ணுக்கு வேறு எவையுமே தோன்றவில்லை.

நல்ல வேளை, நான் தனியாக இருக்கிறேன்.

என் தனிமைக்கு நீதான் துணை.

என்னோடு நீயும், உன்னோடு நானுமாகப் பேசிக் கொண்டிருப்போம்.

மூங்கிலில் மோதி நீ எழுப்பும் இசையே என் பாடலுக்கு இசை.

இப்படியே என் பொழுது கழிய வேண்டும்.

எவரும் இதில் குறுக்கிடுவதை நான் அனுமதிக்க மாட்டேன்.'

— அவள் பாடியதன் பொருள் இதுதான்.

ஆனால் பாடிய தமிழோ சங்க காலத் தமிழாக இருந்தது.

கொஞ்ச நேரமாக, அந்தத் தமிழைக் கேட்டுக் கேட்டு, சேரமானுக்கு அதில் பிரியமும் பழக்கமும் ஏற்பட்டுவிட்டது.

திடீரென்று தண்ணீருக்குள் மூழ்கினாள் தரங்கிணி. அலைகள் விலகி மீண்டும் இணைந்தன.

ஒரு விநாடி....

இரண்டு விநாடிகள்....

பத்து விநாடிகள்....

முப்பது விநாடிகள்....

—தரங்கிணியைக் காணவில்லை.

பயத்தோடு, ''தரங்கிணி!'' என்று அழைத்தார் சேரமான்; பதில் இல்லை.

கொஞ்சம் சத்தம் போட்டு, ''தரங்கிணி'' என்றார்; பதில் இல்லை.

தாள முடியாத பயத்தோடு, ''தரங்கிணி'' என்று உரக்கக் கூவினார் சேரமான்.

பின் பக்கம் இருந்து சிரிப்புச் சத்தம் கேட்டது.

மார்புக் கச்சையை எடுத்துக் கட்டிய வண்ணம், ''செல்லலாமா?'' என்று கேட்டாள் தரங்கிணி.

''எப்படி நீ கரை ஏறினாய்?'' என்று கேட்டார், சேரமான். ஐம்பது காலடி தூரத்தில் இருந்த ஓர் இடத்தைக் காட்டினாள் தரங்கிணி. இரண்டு தோழிப் பெண்களும் நெருப்புக் கம்பை அந்தப் பக்கம் காட்டினார்கள்.

அங்கே 'யாழி' ஒன்று வாய் திறந்திருப்பதைப் போலக் காணப்பட்டது. அதன் வாய்க்குள்ளே ஒரு படிக்கட்டு இருந்தது.

மேல் படிக்கட்டு வரையில் தண்ணீர் ததும்பிக் கொண்டிருந்தது.



இதென்ன வம்பு!

இந்தித் திரைப்படபாடலாசிரியர் ஷைலேந்திரா காலமாவதற்கு முன்பு கடைசியாக எழுதிய பாடல் ராஜ் கபூரின் 'மேரா நாம் ஜோக்கர்' படத்திற்கு. இசை அமைப்பாளர் ஜெய் கிஷன் காலமாவதற்கு முன்பு கடைசியாக ராஜ் கபூரின் 'கல் ஆஜ் ஔர் கல்' படத்தில் பணியாற்றினார். இப்போது காலமான முகேஷும் கடைசியாக ரிகார்ட் செய்த பாடல் ராஜ்கபூரின் "சத்தியம், சிவம், சுந்தரம்" படத்திற்கு!

-நந்தி

''இதுவும் மலையமான் ஆய் ஆதனுடைய படைப்பா?'' என்று கேட்டார் சேரமான்.

''அங்ஙனமே'' என்றாள் தரங்கிணி.

இருவரும் முதலில் சேரமான் கட்டப் பட்டிருந்த இடம் நோக்கிச் செல்லலாம் என்று திரும்பியபோது பெரும் மழை பிடித்துக் கொண்டது. நனைந்தபடியே அவர்கள் நாகர் கோயிலை நோக்கி நடந்தார்கள்.

பெரும் மழையினால் கம்புகளில் எரிந்து கொண்டிருந்த நெருப்பு அணைந்தது. இடையிலே மின்னல் மின்னி வழிகாட்டிற்று.

சேரமானின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தாள் தரங்கிணி.

நாகர்கோயில் வாசலுக்கு வந்ததும், அந்தப் பெரு மழையிலும், மீண்டும் சங்கெடுத்து ஊதினாள் தரங்கிணி.

வழக்கமான சடங்கு. உள்ளே நுழைந்த இருவரும் நன்றாக நனைந்திருந்தார்கள். அந்த நிலையிலும் ஒருவருக்கொருவர் 'வேறு வகையான' எண்ணத்தோடு பார்த்துக் கொள்ளவில்லை.

இரண்டு, பெரிய போர்வைகளைக் கொடுத்தார் முதியவர். மார்பில் இருந்து கால் வரையிலும் இருவரும் அதைக் கட்டிக் கொண்டு நனைந்த ஆடைகளைக் களைந்தார்கள்.

வாய் சிறிதான இரண்டு பாத்திரங்களில் நெருப்புக் கம்புகளை ஊன்றி, பக்கத்தில் வைத்துக் கொண்டு அமர்ந்தாள் தரங்கிணி. எதிரே அமர்ந்தார் சேரமான்.

''இதுகாறும் நீ யாரென நான் அறியேன்'' என்றாள் தரங்கிணி.

அப்பொழுதுதான் சேரமானுக்கு அவள் முன்பு சொன்ன வார்த்தை நினைவுக்கு வந்தது. 'இந்த இடத்தில் யாரும் பொய் உரைக்கக் கூடாது' என்று அவள் கூறி இருந்தாள் அல்லவா ?

''உண்மையைச் சொல்லட்டுமா ?'' என்று கேட்டார் சேரமான்.

''உண்மையைத்தான் சொல்ல வேண்டும்'' என்று அழுத்தமாகச் சொன்னாள் தரங்கிணி.

''நான்தான் வஞ்சிக்கு முடிசூட்டப் பட்ட மூன்றாம் பெருமாள். என் இயற் பெயர் 'பாஸ்கர ரவிவர்மன்'.... திருவிதாங்கோட்டுக்கு முடிசூட்டப்பட் டிருப்பது என் மைத்துனன் மார்த் தாண்டவர்மன்'' என்றார் அவர்.

தரங்கிணி திகைப்போடு அவரைப் பார்த்தாள்.

ஒரு சிறிய மலையில் உள்ள மக்களை அடக்குவதற்கு ஒரு பெரிய நாட்டின் மன்னனே மலையேறி வருவானா? என்ன அதிசயம் ?

''உங்கள்பால் தளநாயகர் எவரும் இல்லையா?'' என்று கேட்டாள் தரங்கிணி.

''இருக்கிறார்கள்'' என்றார் சேரமான்.

''பின் இம்மலை முகடு ஏற உனக்கு ஏன் தொல்லை?'' என்று கேட்டாள் தரங்கிணி.

''நானே வந்தது நல்லதாய்ப் போயிற்று'' என்றார் சேரமான்.

''எவ்வண்ணம்?'' என்று வினவினாள் தரங்கிணி.

''நானே வரவில்லையென்றால் இவ்வளவு அற்புதங்களை, அதிசயங்களைக் காண வாய்ப்பு ஏது?'' என்றார் சேரமான்.

''நச்சுக் கணையினால் நீ மாண்டிருந்தால்....?'' என்று அனுதாபத்தோடு கேட்டாள் தரங்கிணி.

''போர்வீரன் அவற்றுக்கு அஞ்ச முடியுமா?'' என்றார் சேரமான்.

மெது மெதுவாக, பரிவுமிக்க பாவையாக மாறத் தொடங்கினாள் தரங்கிணி.

''உனக்கு நன் மனம். எம்மலையைப் பிறர் கொள்ளாது காப்பதே எம் பணி. ஆதலின் அன்று நச்சுக் கணை தொடுத்தோம். நீ உரைக்கலாம். தன் பொருள் பிறர் கொள்ள உனக்குச் சம்மதம் உண்டா ? அவ்வண்ணமே இதுவும் !'' என்றாள் அவள்.

''உன் பேச்சில் நியாயம் இருக்கிறது. ஆனால் வேணாடு வஞ்சியோடு சேர்ந்து வெகுநாட்களாகி விட்டன. அதைத் தனியாகப் பிரித்துத் திருவிதாங்கோட்டைத் தலைநகராக்கிய போது, அதில் உங்களுக்கு விருப்பம் இல்லாதிருந்தால் தூது வந்திருக்கலாமே? அப்படி வந்திருந்தால் உதயகிரியைத் தனியாக அனுமதிக்க நான் தயங்கி யிருக்கமாட்டேனே ! வள்ளல் ஆய் அண்டினும், ஆய் ஆதனும் தோன்றிய ஒரு மரபைப் பகைத்துக் கொள்ள நாங்கள் விரும்ப மாட்டோமே. மலையமான் குடியினர் இப்படி ஒரு மாற்சர்யம் கொண்டுள்

ளார்கள் என எனக்கும் தெரியாதே'' என்றார் சேரமான்.

''இனி எங்கள் மலையை நீங்கள் கைக் கொள்ளமாட்டீர்களே?'' என்று கேட்டாள் தரங்கிணி.

''அந்த எண்ணம் எங்களுக்கு இல்லை. வேணாட்டில் ஒரு பகுதியாகத்தான் இந்த மலையைக் கருதினோம். இனி இந்த மலை தனியாக இருக்க வேண்டுமெனில், எங்களுக்கும் சம்மதமே'' என்றார் சேரமான்.

'நீயாகியர் என் நெஞ்சு நேர்பவரே' என்றபடி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்த பாவனையில் பேசத் தொடங்கினர். சேரமான் அவளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டாராயினும், அவளும் அவரிடம் மிகுந்த அன்புடையவளானாள்.

அந்த அன்பு எத்தகையது?

இனம் விளங்காத ஒரு பந்தம்.

''காலையில் எந்தை திருவிதாங்கோட்டுக்கு நின்னை அனுப்ப நான் முயல்வேன்'' என்றாள் அவள்.

''இன்னும் ஒரு நாள் இங்கிருக்க ஆசை'' என்றார் சேரமான்.

''மலையில் நீ மடிந்து விட்டதாகத் திருவிதாங்கோட்டில் எண்ணுவார்களே?'' என்றாள் தரங்கிணி.

''பத்திரமாக இருப்பதாக ஓலை அனுப்பி விடுகிறேன்'' என்றார் சேரமான்.

''யானும் அவ்வண்ணமே விழைகிறேன்'' என்றாள் தரங்கிணி.

''உன்னோடு பேசிக் கொண்டிருப்பதில் பொழுது போவதே தெரியவில்லை'' என்றார் சேரமான்.

''எந்தை என்னினும் இனியவர்'' என்றாள் அவள்.

''இப்பொழுதே நீ உன் இல்லம் செல்ல வேண்டுமா?'' என்று கேட்டார் சேரமான்.

''கார் காலத்தில் எம் இல்லத்தினும் இக்கோயில் சுகமானது. இங்கேயே உரையாடிக் கொண்டிருப்போமே?'' என்றாள் அவள்.

இருவரது பந்தப் பெருக்கில் உணவு உண்ண வேண்டியதையே அவர்கள் மறந்திருந்தார்கள்.

அதை அவள் நினைவுபடுத்தினாள்.

தோழிப் பெண்களை அழைத்து, ''சிற்றருவிக்கா'வுக்குச் சென்று உணவெடுத்து வாருங்கள்'' என்றாள்.

அப்பொழுதுதான் தான் கட்டப்பட்டிருந்த இடம் 'சிற்றருவிக்கா' என்று சேரமானுக்குத் தெரிந்தது.

''இங்கே அருவி உண்டா?'' என்று கேட்டார் சேரமான்.

''அழகிய அருவி'' என்றாள் அவள்.

''காலையில் குளிக்க வேண்டும்'' என்றார் அவர்.

அவள் சிரித்தாள்.

எப்பொழுதோ ஒரு முறைதான் அவள் சிரிப்பது வழக்கம்.

ஆனால் அந்தச் சிரிப்பு, பிறரை மெய்மறந்த நிலைக்குக் கொண்டு வந்து விடும்.

அவள் மெதுவாக எழுந்து, சங்கை எடுத்து ஊதினாள்.

இப்போது அதன் தொனி வேறுவிதமாக இருந்தது.

முதியவர் அவள் முன் தோன்றினார். ஆனால் அவர் தம் சங்கை ஊதவில்லை.

வடமொழியில், ''ரக்ஷா'' என்றாள்.

திடீரென்று அவள் வடமொழி பேசியது சேரமானுக்கு வியப்பாக இருந்தது.

கிழவர் உள்ளே சென்றார்.

தரங்கிணி மண்டியிட்டாள்.

மீண்டும் அதே நாகப் பாம்பு வந்து தண்ணீரில் தலையை நனைத்தது.

முதியவர் சிறிய சிவப்புத் துணியோடு வந்து விட்டார்.

அவள் தனது வலது கையை நீட்டி, தன் இடது கையால் சேரமானின் வலது கையை எடுத்து அதனோடு இணைத்துக் கொண்டாள்.

முதியவர் நாகம் குடித்த தண்ணீரில், அந்தச் சிவப்புத் துணியை நனைத்து இரண்டு கரங்களையும் இணைத்துக் கட்டினார்.

திகைப்போடு, ''இது எதற்காக?'' என்று கேட்டார் சேரமான்.


அவள் மீண்டும் சிரித்தாள்.

(தொடரும்)

ராஜாஜி சிந்தனை

நிர்மாணப் பணியில் நாம்

தேச பக்தி என்பதற்குப் புதிதாக ஒரு விளக்கம் தேவை. அதைச் சரியாகப் புரிந்து கொள்ளவும் வேண்டும். பழங் காலத்தில் போராட்டம் கிளர்ச்சி இவைதாம் தேசபக்தி. ஆனால் இப்பொழுது அது ஒரு புதிய வீட்டைக் கட்டுவது போல் அத்தனை கடினமான காரியம். அதற்கு ஒரு நல்ல பொறி இயல் நிபுணரின் ஆற்றல் எல்லாம் இருந்தாலும் போதாது. அதற்கு அதிகமாகவும் வேண்டும். எனவே நாம் எல்லாரும் மிகவும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். —ராஜாஜி நினைவு மலர்



பாரதியை வாழ்த்தினோம்

பாட்டுக்கொரு புலவன் பாரதிக்கு இந்த வருஷம் அசாதாரண யோகம் அடித்திருக்கிறது. தேசத் தலைநகரில் தொடங்கித் தமிழகமெங்கும் கவியரசருக்கு விழாக்கள் நடந்தன. தலைநகரில் தேசிய கலாசார சங்கம் செப்டம்பர் 11ந் தேதியிலிருந்து 19ந் தேதி வரை இசை, நடனம், பேச்சு என்ற பல கோணங்களில் பாரதி விழாவை விமரிசையாகக் கொண்டாடியது. உபராஷ்டிரபதி ஜட்டி அமரருக்கு அஞ்சலி செலுத்தும் விழாவில் கலந்து கொண்டு கவியரசர் பாரதியின் தேசிய ஒருமைப்பாட்டுக் கருத்துக்களை நினைவு கூர்ந்தார். பாரதி நகரில் பாரதி சிலை நிறுவப் புதுதில்லி தேசிய கலாசார சங்கம் சர்க்காரை அணுகியுள்ளது.

பாரதிக்கு மணிமண்டபம் பேராசிரியர் கல்கி எழுப்பினரே. அந்த எட்டயபுர மண்ணில் தேசிய மகாகவிக்கு விழா நடைபெற்றிருக்கிறது. ''பெண்மையை உயர்த்திப் பாடிய பாரதியின் கனவு பாரதப் பிரதமராக இந்திராகாந்தி என்ற பெண்மணி அமர்ந்ததும் நனவாகியது!'' என்று பெருமைப்பட்டிருக்கிறார் ஸ்ரீமதி மரகதம் சந்திரசேகர். எட்டயபுர வீதிகளில் பாரதி பக்தர்கள் பாரதி படத்தோடு ஊர்வலம் வந்திருக்கிறார்கள்.

'யாமறிந்த புலவரிலே வள்ளுவனைப்போல்' என்று வியந்து பாடிய அமரகவிக்குத் தமிழகத் தலைநகர் சென்னையில் வள்ளுவர் கோட்டத்தில் செப்டம்பர் 13ந் தேதியிலிருந்து 17ந் தேதி வரை விமரிசையான விழா எடுத்தது தமிழக அரசு. சொற்பொழிவுகளுடன் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தது.

சினிமா மோகம் மக்களை எவ்வளவு தூரம் ஆக்கிரமித்திருக்கிறது என்பது ஆரம்ப நாள் விழாவில் புரிந்தது. மக்கள் இலவசமாகக் 'கப்பலோட்டிய தமிழன்' திரைப்படத்தைக் காணக் குஞ்சு குளுவான்களுடன் வள்ளுவர் கோட்டத்தை முற்றுகையிட்டனர். ஒரே மக்கள் ஆரவாரம்; முன்னாள் நீதிபதி மகராஜன் தலைமையில் பாரதி யுகக் கவிஞர்களை விமர்சிக்க வந்த இலக்கிய மேதைகள் மக்கள் வெள்ளத்தின் சினிமா மோகத்தினை வெல்ல முடியாமல் நறுக்குத் தெறித்தாற் போல் பேசிப் பின்வாங்கினார்கள்!

அடுத்த நாளிலிருந்து தமிழகச் செய்தித் துறையினர் 'விழித்து'க் கொண்டு கட்டண விதித்தை அமல்படுத்தி ஒரு 'கட்டுக்குள்' விழாவை ஒழுங்குமுறைக்குக் கொணர்ந்தார்கள். என்றாலும் இனி இலக்கிய, கலை நிகழ்ச்சிகளைப் பிரித்து காலை, மாலை என்றோ அல்லது ஒரு நாள், மறு நாள் என்றோ நடத்துவது சிலாக்கியமாயிருக்கும்.

தேசியக் கவிஞர்கள் வரிசையைப் பிறமொழி அறிஞர்கள் எடுத்துரைத்ததும், சிவாஜி கணேசன் தலைமையில் திரைப்படத் துறைக் கலைஞர்களின் உரை நிகழ்ச்சிகளோடு



■ வள்ளுவர் கோட்டம் பாரதி விழாவில் ஒரு மாணவனுக்குப் பரிசளிக்கிறார் திரு பக்தவத்சலம்.

■ புதுதில்லி பாரதி விழாவில் மத்திய மந்திரி சங்கர் தயாள் சர்மா.

■ 'பாஞ்சாலி சபதம்' நாடகத்தில் எத்திராஜ் கல்லூரி மாணவி.



கலை நிகழ்ச்சிகளும் வள்ளுவர் கோட்டப் பாரதி விழாவில் இடம் பெற்றன. பாரதி கலைக் கண்காட்சி கண்ணுக்கு விருந்து. இதனை அமைத்த ஆர். ஏ. பத்மநாபனுக்கு திரு எம். பக்தவத்சலம் 'ரங்கநாதர்' சிலை வழங்கிக் கௌரவித்தார்.

பெண்கள் விடுதலைக்காகப் போராடிய பாரதியாருக்கு எத்திராஜ் மகளிர் கல்லூரியில் பாரதியார் சங்கம் விழா நடத்த முடிவு செய்தது ரொம்பப் பொருத்தம்! தமிழக ஆளுநர் திரு சுகாடியா இவ்விழாவைத் தொடங்கி வைத்துத் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் பாரதி வித்திட்ட பெருமையை நினைவு படுத்தினர்.



☐ தூரனுக்கு உள்துறை அமைச்சர் பொன்னாடை போர்த்திப் பாராட்டுகிறார்.

பாரதத்தைப் போற்றுவோம்

பி. எஸ். எம்

''எங்களைப் போன்ற பல தேச பக்தர்களைப் பாரதியின் தேசியக் கனலூட்டும் பாட்டுக்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட வைத்தன. மதுரைத் தெருக்களில் நாங்கள் பாரதி பாடல்களைப் பாடிச் சென்றோம். அந்த விடுதலை முழக்கப் பாடல்களைக் கேட்டுத்தான் மதுரை வைத்தியநாதய்யர் தம் அதிக வருவாய் தரும் வக்கீல் தொழிலை விட்டு விடுதலை வேள்வியில் குதித்தார்!'' என்று நெல்லைச் சீமை தேசபக்தர் சோமயாஜுலு பழைய சம்பவங்களைச் சொன்னார்.

'தேசப் பற்றும், மொழிப் பற்றும் ஒவ்வொரு தமிழனுக்கும் தேவை!' என்பதை ஞாபகப்படுத்தினர் ம.பொ.சி.

எத்திராஜ் கல்லூரியில் பல இலக்கிய மேதைகள் இரண்டு நாட்கள் சொற்பெருக்கு ஆற்றினர்கள். அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல் இருந்தது எத்திராஜ் கல்லூரி மாணவிகளின் 'பாஞ்சாலி சபதம்' கவிதை நாடகம். பாரதியாகக் குந்தளியும், துரியோதனனாகக் கலைச் செல்வியும் பாஞ்சாலியாகச் சுதா மகேந்திராவும் நடித்தனர். எத்திராஜ் கல்லூரி மாணவிகளின் நடிப்பு அன்று அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. அவர்களைப் பயிற்றுவித்த திரு எஸ்.வி. சகஸ்ரநாமம் பாராட்டுக்குரியவர்! வள்ளுவர் கோட்டப் பாரதி விழாவிலும் எத்திராஜ் கல்லூரி மாணவிகளின் 'பாஞ்சாலி சபதம்' நாடகம் தொடர்ந்து இடம் பெற்றது.

நியூயார்க்கிலிருந்து 'பாரதி சொஸைட்டி'யின் தலைவர் அனந்தநாராயணன் பாரதி விழா தருணத்தில் தமிழகத்துக்கு வந்திருந்தார். அமெரிக்காவில் முந்நூறு தமிழ்க் குடும்பங்கள் தமிழ்க் கலைகளில் கொண்டுள்ள ஈடுபாட்டைத் தெரிவித்தார். ''எங்களுக்குச் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்தான் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட இயலும். வீட்டில் குழந்தைகளுக்குத் தாதிகளை (Baby sitters) அமர்த்திவிட்டுக் கலை நிகழ்ச்சிகளில் கணவனும் மனைவியுமாகப் பங்கேற்கச் செல்கிறோம். நியூயார்க்கில் எங்கள் 'வடிவேலு தியேட்டர்' பிராபல்யம் அடைந்துள்ளது. பல தமிழ் நாடகங்களை நடத்திப் புகழ் பெற்றுள்ளோம். விரைவில் ராஜ ராஜ சோழன் நாடகம் நடத்தவிருக்கிறோம்'' என்று திரு அனந்த நாராயணன் எடுத்துரைத்தார். 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரப்பும்' வகையில் பணியாற்றும் திரு அனந்தநாராயணனுக்குப் பாரதி இளைஞர் சங்க இரட்டையர் ராமமூர்த்தி—வி. எஸ். மணி 'சுவாகத்'தில்—விருந்து வைத்துக் கௌரவித்தனர்; 'பொன்னாடை' போர்த்தி அனுப்பினர்.

தமிழ் நாடு மக்கள் பேரவை தனது பாரதியார் விழாவில் 'குழந்தைகள் கலைக் களஞ்சியம்' வெற்றிகரமாக முடித்துத் தந்த திரு பெரியசாமி தூரனைப் பாராட்டியது.

பாப்பாப் பாட்டுப் பாடிய பாரதி இன்றிருந்தால் தூரனைத் தட்டிக் கொடுத்துப் 'பலே பாண்டியா' என்று வாழ்த்தியிருப்பார். அத்தகைய அபார சாதனையைப் புரிந்த பெரியசாமித் தூரனுக்கு உள்துறை அமைச்சர் திரு பிரம்மானந்த ரெட்டி பொன்னாடை போர்த்தி வாழ்த்தினர்.

கவியரசர் பாரதிக்கு அஞ்சலி செலுத்த மத்திய அரசும், தமிழக அரசும், இலக்கிய மேதைகளும், கலைஞர்களும், போட்டி போட்டுக் கொண்டு முன் வந்த இந்தப் புது யுகத்தில் பாரதி கண்ட கனவுகள் எல்லாம் நிறைவேறும் காலம் வரட்டும். பாரதிக்கு அடுத்த யோகம் மக்களுக்கு யோகமாக மலரும் நன்னாள் வரட்டும்!

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந்தெய்துக! தீதெலாம் நலிக!

—மகாகவி பாரதியார்

☐ வள்ளுவர் கோட்டம் பாரதி விழாவில் கவியரங்கம்



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"வீணு விகார்" — 17-A, ஃபிளாங் ரோடு,
ஷண்முகானந்தா ஹாலுக்கு அருகில்
சயான் (கிழக்கு) பம்பாய்- 400 022
டெலிபோன்: 471455
தந்தி: "GROWRICH" தபால் பெட்டி 6759

ஏலம் கேட்டபிறகு டிவிடெண்டு அடையும் வசதியுள்ள கீழ்க்கண்ட

1976 அக்டோபர், புதிய குரூப்புகள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	மாதங்கள்	ஏலத் தேதி
STB	ரூ. 100/-	ரூ. 2500/-	25 மாதங்கள்	10-10-76
STC	ரூ. 50/-	ரூ. 1250/-	25 மாதங்கள்	10-10-76
STF	ரூ. 25/-	ரூ. 625/-	25 மாதங்கள்	10-10-76
LTM	ரூ. 50/-	ரூ. 2000/-	40 மாதங்கள்	10-10-76
LTG	ரூ. 125/-	ரூ. 5000/-	40 மாதங்கள்	17-10-76
LTF	ரூ. 250/-	ரூ. 10000/-	40 மாதங்கள்	31-10-76
LTE	ரூ. 500/-	ரூ. 20000/-	40 மாதங்கள்	31-10-76

தலைமை ஆபீஸ் & ரிஜிஸ்டர்டு ஆபீஸ்:
"பாலுஸேரி பில்டிங்ஸ்"
3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

கிளைகள்: பெங்களூர் - கல்கத்தா - புது டில்லி & கோயமுத்தூர்

இலவசப் பிரகடனத்திற்கு எழுதுங்கள்

சீட்டுகள் ஒதுக்குதல் கம்பெனியின் உரிமையைப் பொறுத்தது

வேலை செய்யும் நேரங்கள்:
காலை 8 மணி முதல் 10-30 வரை; மாலை 4 மணி முதல் 7-30 வரை

வார விடுமுறை: திங்கட்கிழமை

ஸ்தாபிதம்: 1947

30 YEARS

எங்கள் சேவை உங்களுக்குத்தேவை

பல் வலி

குட்மார்னிங் டாக்டர்!

பத்து வயதுப் பையனை அழைத்துக் கொண்டு வந்த அவனுடைய தகப்பனார் கூறினார்:

''பையனுக்குக் கடைவாய்ப் பல்லில் ஏதோ கோளாறு இருக்குது போலத் தெரியுது. டாக்டர். இரண்டு வாரமா இனிப்பு எதுவும் இவனாலே சாப்பிட முடியல்லே. சூடா தேநீர், காப்பி சாப்பிட்டாப் பல்லை வலிக்குது என்கிறான். ஐஸ்வாட்டர், ஐஸ்கிரீம் சாப்பிட்டாலும் ரொம்ப வலிக்குதுங்கிறான்.''

பையனைச் சுழலும் நாற்காலியில் உட்காரச் சொல்லிப் பற்களைச் சோதித்தேன். வலது பக்கம் கடைவாய்ப் பல் ஒன்றில் ஓட்டை விழுந்திருப்பது தெரிந்தது.

''என்னங்க, பல்லைப் பிடுங்கி விடும்படியா இராதே?'' என்றார் அவர் கவலையோடு. சிறுவனின் முகத்தில் பீதி படர்ந்தது.

''அப்படி யொன்றுமில்லே. பயப்பட வேண்டாம். பல்லில் விழுந்திருக்கும் ஓட்டையை அடைத்து விட்டால் போதும்.''

''பல் சொத்தையாப் போயிட்டுதா?''

''ஆமாம். இதற்கு (Caries) என்று பெயர். அதிகமாக இனிப்புப் பதார்த்தங்கள், மிட்டாய் சாப்பிடும் சிறுவர்களுக்குப் பல் இப்படிக் கெட்டுப் போகக் கூடும். பல்லிலுள்ள துவாரத்தைச் சரியாகக் கணக்கிட்டு வெள்ளி வைத்து அடைத்து விட்டால் பிறகு வலிக்காது. நான்கு அல்லது ஐந்து தடவைகள் நீங்கள் பையனை அழைத்து வரும்படி இருக்கலாம்'' என்றேன்.

''இம்மாதிரிப் பல்லில் ஓட்டை விழுந்து சிதைவு ஏற்படக் காரணம் என்ன?''

''(1) கால்ஷியம் பற்றாக்குறை (2) இனிப்பு அதிகமாகச் சாப்பிடுவது (3) பெற்றோர்களுக்குப் பற்கள் சொத்தையாக இருந்தால் குழந்தைகளுக்கும் பற்சிதைவு ஏற்பட வாய்ப்புண்டு. பொதுவாக, சைவ உணவு புசிப்பவர்களைவிடப் புலால் உண்போருக்கு 'கேரிஸ்' ஏற்படும் வாய்ப்பு அதிகம். பற்களில் சிக்கிக் கொள்ளும் புலால் அங்கேயே தங்கி அழுகிப் பற்களுக்குக் கேடு உண்டாக்கும். பல்லில் ஓட்டை விழுந்தால் உடனே பல் வைத்தியரிடம் சென்றால் அடைத்து விடலாம். உடனே சிகிச்சை செய்யாமல் அலட்சியமாக இருந்து விட்டால் பல்லையே எடுக்கும்படி நேரிடும்.''

''பற்சிதைவு ஏற்படாமல் தடுக்க என்ன வழி?''

''இனிப்புப் பண்டங்கள், மிட்டாய்கள் இவற்றைக் குழந்தைகளுக்கு அதிகம் கொடுக்கக்கூடாது. காலையில் பல் தேய்ப்பது மாதிரி இரவிலும் படுக்கச் செல்லுமுன் பிரஷ், பற்பசை உபயோகித்துப் பல் துலக்க வேண்டும். இது ரொம்ப முக்கியம். ஃப்ளோரைட் அடங்கிய பற்பசை பற்சிதைவைத் தடுக்கப் பெரிதும் பயன்படும். சூலுற்ற தாய்மார்கள் போதிய அளவு கால்ஷியம் சத்து உட்கொள்ள வேண்டும். கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைக்குப் பற்கள் உறுதியாக வளர இது உதவும். பல்லில் துவாரம் விழுந்து பல் வைத்தியர் அதனை அடைத்த பிறகும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பல்லைச் சோதனை செய்துகொள்ள வேண்டியது அவசியம்.

''பல்லில் உள்ள எனாமல் அரித்துப் போய் விட்டால் சிலருக்குப் பல் கூசும். எனாமல் அரித்துப் போகக் காரணம், வாயில் ஊறும் எச்சிலில் அமிலம் கூடுதலாக இருப்பதே. இதனைத் தடுக்க இரவில் படுக்கச் செல்லுமுன் கண்ணும்புத் தெளி நீரால் வாயைக் கொப்புளிக்கலாம். அல்லது ஒரு ஸ்பூன் மில்க் ஆஃப் மெக்னீஷியாவினால் கொப்புளிக்கலாம். எமோபாரம் (Emoform) அல்லது வென்னோபாரம் பற்பசை உபயோகிப்பதும் பல் கூசுவதைத் தடுக்கப் பயன்படும். ஏற்கனவேயே நஷ்டமடைந்த எனாமலை இவை யாவுமே சரி செய்ய முடியாது. மேலும் கெட்டுப் போகாமல் காக்கவே இவை பயன்படும். தரக் குறைவான பற்பொடிகளை உபயோகிப்பது தீமையாக முடியும்.''



டாக்டர் பங்கல் சேஷகிரி ராவ் கூறக்கேட்டு எழுதியவர்: ஆர். பி.



சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

நூறு பத்து அடுக்கி
  எட்டுக் கடை நிறுத்த,
விறுஉயர் பசும்பொன்
  பெறுவது இம்மாலை,
மாலை வாங்குநர்
  சாலும் நம் கொடிக்கு என,
மான் அமர் நோக்கியோர்
  கூனி கைக் கொடுத்து
நகர நம்பியர்
  திரிதரு மறுகில்,
பகர்வனர் போல்வதோர்
  பாண்மையின் நிறுத்த.

''கூனி'' என்றாலே, கையில் தடி ஊன்றி நடக்கும் கிழவி— என்று நினைக்குமாறு செய்து விட்டனர் நாடகக்காரர்கள். இராமாயணத்தில் வரும் கூனியைப் படு கிழமாகத்தானே நாம் பார்க்கிறோம். ஆனால், வான்மீகியிலே கைகேயியின் தோழியான கூனி அழகிய நங்கையாகவே வருணிக்கப்படுகிறாள். சிலம்பில் வரும் கூனியை 'மான் அமர் நோக்கி' — அதாவது, மானைப் போன்று மருண்டு நோக்கும் பார்வையுடையவள் — என்கிறார் இளங்கோ. இதனால் கிழவியல்லள் என்பது புலனாகிறது. ''விலை பகர்வனர் போன்ற பாண்மையில்'' கூனி நடிக்கிறாள் என்பதால், மாலையை வாங்க முயல்வோர் எவராயினும் அவருக்கு விற்க அவள் விரும்பவில்லை என்பது தெரிகிறது. கூனி யாரையோ எதிர்பார்த்து, அவன் வரும் வரையில் விலை பகர்வது போன்று பாவனை காட்டி வீதியில் நிற்கிறாள். அவள் எதிர்பார்ப்பது யாரை?

புகார் நகரத்துப் பெண்கள், கண்டேத்தும் செவ்வேளாகக் கருதிக் கைதொழுது வழிபடும் பெருமகன் கோவலனைத்தான்!

மன்னன் முன் மாதவி நடனம் ஆடிய போது அவையிலிருந்த கோவலன் அவளைக் கண் இமைக்காது கண்டிருப்பான். அவனது இமையா நாட்டத்தைக் கண்டு தன்பால் அவன் காதல் கொண்டு விட்டான் என்பதை மாதவியும் புரிந்து கொண்டிருப்பாள். அவன் தன்னைப் பின்பற்றி வருவான் என்ற முடிவுக்கும் மாதவி வந்திருக்க வேண்டும். அதனால்தான், அவனது வருகையை எதிர்பார்த்து, அதுவரை மற்றவர்களுக்கு மாலையை விலை பகர்வது போன்ற பாவனையில் நகர நம்பியர் திரிதரு தெருவில் கூனி நின்றிருக்கிறாள்.

மாதவி வாழும் வீதியை நகர நம்பியர் ''திரிதரு மறு'' என்று வருணிக்கிறார் இளங்கோ. பரத்தையர் வாழ் தெருவில்தானே இளைஞர் கூட்டம் இப்படியும் அப்படியுமாக நடை போட்டுத் திரியும். பழகு தமிழிலுள்ள ''திரிதல்'' என்னும் சொல்லைச் சரியான இடத்துக்கு, பொருத்தமான பேர்வழிக்குப் பயன்படுத்துகிறார் இளங்கோ.

மாதவியைப் பின்பற்றி வந்த கோவலன் கூனியை அணுகி, ஆயிரத்தெட்டு செம்பொன் கொடுத்து, மாலையை வாங்கி, கூனியைப் பின்பற்றி, மாதவி இல்லத்துக்குள் நுழைகிறான். இதனை,

''மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
  கோவலன் வாங்கி கூனி - தன்னொடு
மணமனை புக்கு, - மாதவி தன்னொடு
  அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி!

என்னும் வரிகளிலே, பத்தினியான கண்ணகி தேவியின் பதியான கோவலன் நடனப் பரத்தையான மாதவியின் மனை புகுந்த நிகழ்ச்சியை இளங்கோ கூறுகின்றார்.

ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன் கொடுத்து மாதவியின் மாலையைக் கோவலன் வாங்கியது ஓர் இரவிலே இன்பம் அனுபவிக்கத்தான் என்கின்றனர் உரையாசிரியர்கள். ஆனால், மாதவியின் மனை புகுந்த கோவலன், தன் மனையகத்தையே மறந்து, மாதவி வீட்டில் தங்கி விட்டான். ''வடுநீங்கு சிறப்பின் மனையகத்தை மறந்தான்'' என்கின்றார் இளங்கோ. இதன் மூலம் மாதவியின் மனைக்கு ''வடு'' உண்டு என்று கவிஞர் சொல்லாமல் சொல்லுகின்றார். வடு மாதவிக்கு அல்ல; அவள் பிறந்த மனைக்குத்தான்!

கோவலன் மாதவியின் மனை புகுந்ததைக் குற்றமாகக் கூறவில்லை கவிஞர். அந்நாளில் செல்வந்தர்கள் பரத்தையோடு கூடி இன்பம் அனுபவிப்பது தமிழர் சமுதாயத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பழக்கமாக இருந்திருக்கிறது. ஆனால், இரவில் பரத்தை வீட்டில் தங்கி இன்பம் அனுபவித்துவிட்டு, விடிந்ததும் பத்தினி வீட்டுக்கு வந்துவிடுவதுதான் வழக்கம். கோவலனோ, தன் மனையகத்தையே மறந்து மாதவி இல்லத்தை அடைக்கலமாகக் கொண்டு விட்டான். பல ஆண்டுகள் அவளோடு வாழ்ந்தான்.

கோவலன் சிறந்த கலைஞன். யாழிசைத்துப் பாடவல்ல இசை ஞானி. அதனால், கலையரசியான மாதவியை விட்டுப் பிரிய மனமில்லாதவனானான். அத்துடன், தனது குல ஒழுக்கத்துக்கு மாறான கற்பொழுக்கத்தையும் மாதவி கடைப்பிடித்தாள். அதனால், இல்லற நெறிகள் அனைத்தையும் கடைப்பிடித்துக் கோவலன் மாதவியுடன் கூடி வாழ்ந்தான்.

இளங்கோவடிகள் கோவலனைக் காமுகனை அறிமுகப்படுத்தவில்லை. மாதவி— கோவலன் காதல் வாழ்க்கையைக் காம ரசம் ததும்ப அடிகள் வருணிக்கவில்லை. அவர்கள் காதல் வாழ்க்கையை விட, கலை வாழ்க்கைக்கே சிறப்பிடம் தருகிறார். (தொடரும்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.



சத்துமிகுந்த, சுவையான
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்
B
RITANNIA
Glaxo
BISCUITS
BRITANNIA
Glaxo
BISCUITS
வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை
லின்டாஸ்-BBC.GLX 4-140 TM
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள் அருமையான தனிச் சுவையோடு மேம்பட்டு விளங்குவது ஏன்? சத்துச் செறிந்த ஆரோக்கியமான குணச்சிறப்பே காரணம். ஆசையோடு குழந்தைகள் அவற்றை விரும்பிச் சுவைத்து வளருகின்றனர்! பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்— வளரும் குழந்தைகளுக்குச் சுவையான துணை.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேசிய காசு